உயிரே உறவே

தேவமகள் ரகுவரன்

உயிரே ஓடிவா!

NEMARA PUBLIC LIBRARY
27 OCT 1999

லக்ஷ்மி

திருமகள் நிலையம்
55, வேங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை-600 017.

முதற் பதிப்பு : நவம்பர், 1985
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 1993
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 1995
நான்காம் பதிப்பு : ஜனவரி 1998

உரிமை : ஆசிரியருக்கு

2278/99
31

UYIREA OODIVAA
By : Lakshmi
Fourth Edition : Jan, 1998

505408

Pages : 136
Paper 11.6 kg Cream wove

894.8113
LAK

விலை : ரூ. 27-00

திருமகள் நிலையம்
55, வெங்கட் நாராயணா சாலை.
தி. நகர், சென்னை-600 017
Phone : 434 28 99 43 27 696
Fax : 91 - 44 - 434 15 59

அச்சிட்டோர்
ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

1

CONNEMARA PUBLIC LIBRARY
27 OCT 1999
MADRAS-600 008.

N8

பதிப்புரை

திருமதி லக்ஷ்மி அவர்கள் குடும்பத்தில் எழும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கதைகள் எழுதி பெண்கள் மனதில் என்றும் நீங்காத இடம் பெற்றவர்கள்.

ஆசிரியை அவர்களுக்கு இந்த ஆண்டு அவர்களின் படைப்பாகிய 'ஒரு காவிரியைப் போல...' என்ற நூலுக்கு சாகித்திய அகாடமி பரிசு கிடைத்துள்ளது. பரிசு பெற்றபின் எழுதிய முதல் நாவல் 'உயிரே ஒடிவா! இது தொடர் நாவலாக ராணி வாரப் பத்திரிகையில் வெளி வந்தது.

இதை வெளியிட அனுமதி அளித்த திருமதி லக்ஷ்மி அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

அ. இராமநாதன்
திருமகள் நிலையம்

லக்ஷ்மியின் பிற நாவல்கள்

காலமுழுதும் காத்திருப்பேன்	28—00
மிதிலா விலாஸ்	65—00
லட்சியவாதி	60—00
காஞ்சனையின் கனவு	44—00
இதோ ஓர் இதயம்	35—00
வானம்பாடிக்கு ஒரு விலங்கு	40—00
சாதாரண மனிதன்	34—00
பூக்குழி	30—00
வீணா ஒரு வீணை	அச்சில்
மன்னிப்பின் மறுபக்கம்	18—00
உனக்கு நான் எனக்கு நீ	20—00
தொடுவானம் வரையில்	16—00
ஒற்றை நட்சத்திரம்	25—00
அழகு என்னும் தெய்வம்	20—00
கூண்டுக்கு வெளியே	27—00
வெள்ளை நிறத்தில் ஒரு பூனை	17—00
கையில் அள்ளிய மலர்கள்	10—00
மண்ணும் பெண்ணும்	13—00
வைர மூக்குத்தி	23—00
தேடிக்கொண்டே இருப்பேன்	70—00
மங்களாவின் கணவன்	58—00
சூரியகாந்தம்	70—00

உயிரே ஓடி வா!

1.3.07

1

வித்யா கல்லூரியின் பகல் உணவு நேரம்.

பனிரெண்டு மணியில் இருந்து ஒரு மணி வரை மாணவிகளுக்கு ஒரே கொண்டாட்டம்.

கல்லூரியின் பின்புறத் தோட்டத்தில் நிழல் பரப்பிக் கொண்டிருந்த புங்கை மரங்களின் அடியில் வண்ணக் குவியலாக அமர்ந்திருந்த மாணவிகளின் சிரிப்பொலி வெளியே நெடுஞ்சாலை வரை எட்டிக் கொண்டிருந்தது.

சுரிதார், குர்தா அலங்காரத்தில் மின்னிய ரேவதி, தன் கையிலிருந்த சிறு டிபன் பொட்டலத்துடன் தொப்பென்று ஒரு சிமெண்டு பெஞ்சின் மீது சலிப்புடன் அமர்ந்தாள்.

ரொட்டித் துண்டுகளை மெல்லக் கடித்தபடி எதிரே வந்து உட்கார்ந்த மோகனா, லேசாக சிரித்தாள்.

'பதினைந்து நாள் நிம்மதியா கல்லூரியை விட்டு வெளியே போய்விட்டு வந்திருக்கே! முகத்தை ஏன் 'உம்' என்று வைத்திருக்கே!" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம், அந்த விழிச்சூர் கிராமத்தில் நீங்கள் என்னதான் சாதிச்சீங்களாம்...எங்களுக்கு சொல்லக் கூடாதா?' சிணுங்கிக் கொண்டு தோளை இடித்தாள்

பாரதி. உடனே அவளைச் சுற்றி பாண்ட் சட்டை,மிடி சல்வார் கமீஸ் அழகிகள் கும்பலாக நெருங்கினார்கள்.

''நாங்க இந்த என்.எஸ் எஸ்ஸில் சேர்ந்து சாதிச்ச காரியங்கள் எதுவோ தெரியாது. ஆனால், நான் பட்ட சிரமம் கொஞ்சநஞ்சமல்ல.'' பெருமூச்சு விட்டாள் ரேவதி.

அப்பாவின் பென்ஸ் காரில் கல்லூரிக்கு வந்து இறங்கும் மேல்மட்டத்து வர்க்கத்தைச் சேர்ந்தவள். ரேவதி. தில்லைநாதன் அண்ட் கோஎன்ற பிரபலமான கட்டிட சாமான் விற்பனை நிறுவன உரிமையாளரின் செல்ல மகள். நுங்கம்பாக்கம் அரவிந்தர் அவென்யூ பங்களாவாசி.

பெருமைக்காக முன்பின் யோசிக்காது, அவர்கள் கல்லூரி ஏற்றுக் கொண்டிருந்த தேசிய சமூகப் பணித் திட்டத்தில் தானே வலுவில் ஒரு உறுப்பினராகச் சேர்ந்து விட்டிருந்தாள்.

வாரத்திற்கு இருமுறை, அதன் தலைவியான ஆசிரியை நிர்மலாவுடன் மாலை வேளையில் கல்லூரி முடிந்த பின் அருகில் இருக்கும் பள்ளிகளுக்குச் சென்று, படிப்பில் பின் தங்கியிருக்கும் சிறுமிகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாள்

பார்வையற்றவர்கள் பள்ளிக்குச் சென்று, சிறிது நேரம் நல்ல கதை புத்தகத்தில் இருந்து, ஒரு பகுதியைப் படித்துக் காட்டினாள்.

அருகிலிருந்த குடிசைப் பகுதிக்குச் சென்று எழுதப் படிக்கத் தெரியாத மருதாயிக்கும், காத்தமுத்துவுக்கும் கூட்டல் கழித்தல் கணக்குகளைச் சொல்லிக் கொடுப்பது வேடிக்கையான பொழுது போக்காக இருந்தது.

ஆனால் பதினைந்து நாள் விழிச்சூர் கிராமத்திற்கு பாதை செப்பனிடும் பணியை ஏற்றபோது, வேடிக்கையாக இருக்கவில்லை. மிக்க வேதனையாக இருந்தது.

''என்ன !ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறியே!'' கன்னத்தை மெல்லக் கிள்ளினாள் செண்பகம்.

''நாங்க எப்படி வேலை செய்திருக்கோம்னு நீங்களே பார்த்துக்கோங்க. ஒரு கிராமத்தைச் சுவீகாரம் செய்து கொண்டு அதைச் சீர்திருத்துவது என்று புறப்பட்டால், ஆகிற காரியமா? என் கைகளைப் பார்'' என்று கோபத்துடன் கரங்களை அவர்கள் முன் ரேவதி நீட்டினாள்.

''கொப்புளிச்சிருக்கே! அப்படி அங்கே என்ன வேலை செஞ்சே?...வியப்புடன் கிரீச்சிட்டபடி அருகில் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள், மிடி சிங்காரி ஒருத்தி.

''நான் மெதுவா இந்த அமைப்பில் இருந்து கழண்டுக்கப்போறேன், கல்லூரிக்கே நாம் சேலை கட்டிக்கிட்டு வரதில்லை. இந்த பொதுச் சேலை செய்ய புறப்பட்டால், சேலை கட்டிக்கிட்டு போகணும்னு ஒரு நிர்பந்தம். விழிச்சூர் கிராமம் ஒரு பொட்டல் காடு. வலுவான ஆண்பிள்ளைகள் செய்ய வேண்டிய வேலை அது. தலைவி நிர்மலா, கொஞ்சமும் யோசிக்காமல் மண் வெட்டியை எடுத்து என் கையில் கொடுத்துட்டாங்க.''

''உண்மையாகவா? உன் வீட்டிலே தண்ணீர் குடித்த தம்பிரைக் கூட கழுவி உள்ளே வைக்கமாட்டியே, நீயா மண்வெட்டியால் சாலையைச் செப்பனிட்டே?''

''மத்த மாணவிகளும் வேலை செய்தாங்க. ஆனால், இந்த முரட்டு வேலையை என்னால் தாக்குப் பிடிக்க முடியலை.''

''பெருமையாக இதில் சேர்த்துட்டா போதுமா; சமூக சேவை செய்கிற மனப்பான்மையும் வேண்டும்.'' சாப்பிட்ட கைகளை தொட்டியில் கழுவிக் கொண்டு மெல்ல அருகில் வந்து உட்கார்ந்தாள் சிவகாமி.

அவளைக் கண்டதும் பாண்ட் சட்டை பாப் தலைக்காரி, கண்களை லேசாகச் சிமிட்டினாள். மற்ற பெண்களின் முகத்திலே ஒரு கேலிப் புன்னகை. வகுப் பிலேயே சிவகாமி ஒரு தனிப்பிறவியாகக் கருதப்பட்ட வள் சேலத்து பக்கத்தில் ஒரு கிராமத்தில் இருந்து வந்தவள். பட்டணத்தில் தன் மாமன் வீட்டில் தங்கி படித்துக் கொண்டிருந்தாள். மஞ்சள் பூசிக் குளித்து விட்டு குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு, வாயில் சேலை அணிந்து கல்லூரிக்கு வரும் ஒரு காட்டாம்பூச்சி அவள்

நளினியின் காதில் சுமதி கிசுகிசுத்தாள். ''நேத்து பஸ்சில் என்னோடு வந்த இந்த சிவகாமி. வாய் ஓயாது முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.''

''பாடங்களை கவனம் பண்ணிகிட்டு வந்தாளோ?''

''அதான் இல்லை. கொஞ்சம் உற்றுக் கேட்டேன். 'மெய்தான் அரும்பி விதிவிதிர்த்தது' அப்படின்னு தனக் குள்ளே பாடிகிட்டு வந்தாள். முகத்தில் ஒரே பக்தி பரவசம்!''

''இவள் நம்ம கல்லூரியில், நம்மோடு படிப்பதை விட்டு, ஏதாவது ஆசிரமத்தில் பஜனை பண்ணிக் கொண்டு இருந்தால் நலமாக இருக்கும்.'' குபீரென்று நளினி சிரித்தாள். அவளைத் தொடர்ந்து எல்லா இளசுகளும் சிரிப்பில் குலுங்கின.

''எனக்குச் சொல்லக்கூடாதா? நீங்க மட்டும் சிரிக் கறீங்களே!'' ஆதங்கப்பட்டாள் சிவகாமி.

''ஒண்ணுமில்லே. எல்லாம் இந்த என்.எஸ்.எஸ். அமைப்பைப் பற்றித்தான் பேசிச் சிரிக்கிறோம்'' என்று கதை விட்டாள் ஊர்மிளா.

''சமூக சேவை செய்யும்போது உண்மை உணர் வோடு செய்யணும். பேருக்கும் புகழுக்கும் செய்ய நினைப்பது தவறு'' என்று கூறிவிட்டு, எழுந்து விட் டாள் சிவகாமி. அவளுக்கு வெட்டியாக மற்ற மாணவி

களை போல பொழுதைக் கழிக்க பிடிக்காது. பகல் நேரம் பாடங்களை ஒரு தரம் படித்துக் கவனம் செய்து கொள்ள, உள்ளே போய்விட்டாள்.

ரேவதி, தனது உணவுப் பொட்டலத்தை மெல்ல அவிழ்த்து அண்ணி கட்டிக் கொடுத்த பரோட்டாவைப் பிய்த்து, மசாலா உருளைக்கிழங்குடன் உருட்டி வாயில் நிணைத்தாள்.

''பதினைந்து நாளும் நீங்கள் எல்லோரும் ரொம்ப சிரமப்பட்டு விட்டீங்கள்னுதானே சொல்றே!'' மறுபடி யும் தோளை இழுத்தாள் மோகனா.

''ஆமாம்.'' என்று தலையை ஆட்டினாள் ரேவதி. ஆனால் மனதிற்குள் குமிழிட்ட அந்த மகிழ்ச்சியை அவர் களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை.

விழிச்சூர் கிராமத்துப் பாதையை செப்பனிட்டு முடிப்பதில் முனைந்த கடைசி நாள் அது.

தலையில் கூடை மண்ணுடன், அவள் பாதையின் கோடியில் நடந்து கொண்டிருந்தபோது, மேலே இடித்து விடும்போல பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்காரனைப் பற்றி அவள் அவர்களுக்குச் சொல்ல விரும்பவில்லை.

''கண் மண் தெரியாமல் இப்படியா வண்டியை ஓட்டுவீங்க?'' என்று சீறினாள் ரேவதி.

''கண் தெரியுது. உங்க கூடையில் இருக்கும் மண் ணும் தெரியுது. ஏதோ சினிமாப் படம் எடுக்கறாங்க போலிருக்குன்னு நினைச்சுகிட்டு, வேகமாக வண்டியை ஓட்டிக்கிட்டு வந்தேன். இது கல்லூரி மாணவிகள் சேவைப் பணி என்பது பிறகுதான் புரிஞ்சுது. திரைப் பட நடிகை சாலினியைப் போல நீங்க அழகாகத்தான் இருக்கறீங்க...''

''வாயை மூடுங்கள். வழியைப் பார்த்துட்டுப் போங் கள்'' போலியான கோபத்துடன் அதட்டினாள் ரேவதி.

முகத்தில் கிடந்த கருப்புக் கண்ணாடியை உயர்த்தி விட்டு, கண்களால் சிரித்த அந்த தொங்கு மீசை இளைஞன், மேலே பேசுமுன் தலைவி நிர்மலா கையைத் தட்டினாள். 'ரேவதி! அங்கே யாரோட பேச்சு? சீக்கிரம் வா.'' உரத்த குரலில் அழைத்தாள்.

''உங்கள் பின்னாடி இப்படி ஒரு கண்காணிப்பா? ரேவதி! அழகான பேர்... எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... பை... பை...'' என்றபடி அவன் வண்டியை வேகமாக செலுத்திக் கொண்டு மறைந்து விட்டான்.

அன்று முழுவதும் அவளுக்கு அவன் நினைப்புதான்.

ஆமாம். யார் அவன்?

2

ரேவதி அன்று மாலை அப்பாவின் காரில் அண்ணா சாலைக்குப் புறப்பட்டிருந்தாள்.

அண்ணி கலா, அவள் கிளம்பு முன்பே கேட்டாள். ''தனியாகவா கடைத்தெருக்குப் போறே? அப்படி முக்கியமா ஏதாச்சம் வாங்கணுமா?''

ரேவதி கோபத்துடன் பற்களைக் கடித்தாள்.

வீட்டில் அவளை அடக்கி ஆளவேண்டியவள், தாய், அவள் ஒரு வார்த்தை கேட்கவில்லை. ''கொஞ்சம் காரை அனுப்ப முடியுமா?'' என்று தொலைபேசியில் அப்பாவைக் கேட்டபோது, அவரும் கேட்கவில்லை. அலுவலகம் மூடுவதற்குள் திருப்பி அனுப்பிடும்மா. ஒரு கூட்டத்துக்கு போக வேண்டியிருக்கு'' குழைவாகத்தான் சொன்னார்.

இரண்டு ஆண்டுக்கு முன் மருமகளாக வீட்டுக்குள் வந்த கலாவுக்கு என்ன அதிகாரமிருக்கு?

கோபத்தை அடக்கிக்கொண்டு ''விர்'' என்று வெளிப்பட்டுக் காரில் ஏறிக்கொண்டாள், ரேவதி.

வீட்டவர் உபயோகத்திற்கு, ஒரு பியட் கார் நின்று கொண்டிருந்தது ஆனால், ரேவதிக்கு அப்பாவின் பென்ஸ் காரில் ஊரைச் சுற்றுவது ஒரு இனிமையான பொழுதுபோக்கு.

முகம் தெரிய மின்னும் அந்த வெள்ளை பென்ஸ் காரையும், பின் இருக்கையில் சொகுசாகச் சாய்ந்து கிடக்கும் அவளையும் ஒருகணம் பார்த்துவிட்டு தெருவில் போவோர் வருவோர் திகைத்து நிற்க வேண்டும் என்றதெரு திமிர் பிடித்த ஆசை அவளுக்கு.

அந்தத் தொங்கு மீசை வாலிபனைக் கண்ட நாளில் இருந்து அவள் மனதில் ஒரு பரபரப்பு உருவாகிவிட்டிருந்தது. எங்கேயாவது அவள் கண்களில் அவன் தென்பட மாட்டானா என்ற ஆசை!

இத்தனை பெரிய பட்டணத்தில் விழிச்சூர் மண்பாதை அருகே பார்த்த அவனை அத்தனை சுலபமாக மீண்டும் சந்திக்க முடியுமா? என்று அவள் யோசித்தாலும் ''முடியும்!'' என்று அவள் உள்ளம் மூரண்டு பிடித்தது.

தோள் பையை மாட்டிக் கொண்டு காரில் இருந்து இறங்கினாள். ரேவதி அம்மா அவளது செலவுக்கு மாதந்தோறும் கொடுக்கும் பணம் பர்சை உப்பிக் கொண்டிருந்தது. என்ன வாங்கலாம்! எப்படி அந்தப் பணத்தைச் செலவழிக்கலாம். அவள் கடை கடையாக ஏறி அலுத்துப் போய் முடிவில் ஒரு புத்தகக் கடைக்குள் நுழைந்தாள்.

ஒரு கட்டு ஆங்கிலப் பத்திரிகைகளை வாங்கிக் கொண்டு திரும்பினாள். கடைத் தெருவுக்குப் போனால் அவள் எதையாவது வாங்காமல் திரும்ப மாட்டாள்

சோப்பு, பவுடர் இத்யாதியுடன் சில ஆங்கிலப் பாடல் ''கருட்டி''களுடன் (கேசட்) வீடு திரும்புவது வழக்கம்.

அண்ணி கலாதான் அவளது அறையை ஒழுங்கு படுத்துவாள். ''என்னத்துக்கு இந்த பவுடர் டப்பி போன மாதம் சிங்கப்பூரில் இருந்து வந்த உன் சிநேகி மிடம் நாலு டின் பவுடரை விலை கொடுத்து வாங் கினியே'' என்று அண்ணி கேட்டுவிட்டால் அவளுக்கு கோபம் தலைக்கேறி விடும்

''எனக்கென்னவோ சாமான்களை வாங்கி குவிப் பதில் ஒரு தனி ஆசை. அதனால் வாங்கறேன்னு நினைச்சுக்கோங்களேன்'' தாடை இறுகப் பதில் அளித்துவிடுவாள் ரேவதி.

''உன் கல்லூரியில் உன்னோடு படிக்கும் மத்த பெண்கள் எல்லாம் இப்படியா செய்றாங்க?'' அண்ணி கேட்பாள்.

''வசதி உள்ளவங்க வாங்கறாங்க. இல்லாதவங்க ஏங்கறாங்க'' என்று ரேவதி சுடாகப் பதில் அளிப்பாள்.

''நானும் கல்லூரியில் படிச்சவள்தான் ஒரளவு. வசதி யான குடும்பத்தில் இருந்துதான் வரேன். உன்னைப் போலவா இப்படி அலட்டிக்கிறேன். ரேவதி நான் சொல்வதைக் கேள். இந்த அனாவசிய ஆடம்பர செலவுகளை நீ கைவிட கத்துக்கோ'' என்று அண்ணி கோபப்படுவாள்.

ரேவதி முகம் சிவந்து, நெஞ்சு பதைபதைக்க அண்ணி கலாவை முறைத்துப் பார்ப்பாள்.

அம்மாவிடமும் அப்பாவிடமும் அவள் இதைப்பற்றி முறையிட்டுக் கொள்ள முடியும். ஆனால், அண்ணன் மகா பொல்லாதவர். தன் மனைவி மீது அவள் குற்றம் சுமத்தினால் சும்மாவிடமாட்டார் என்பது அவள் வாயை அடைத்து விட்டிருந்தது.

ஒருநாள் பூஜையறையில் இருந்து வெளிப்பட்ட அண்ணி வேகமாக மாடிக்கு வந்தாள்.

''ரேவதி! உனக்கு நேரம் காலம் எதுவும் கிடை யாதா? காலை வேளை தான் பூஜையறை தோத்திரம்

பாடிக் கொண்டிருக்கும்போது, ஆங்கிலக் காதல் பாட்டுகளைடேப் சிக்கார்டரில் இப்படியா அலறவிட வேண்டும்?'' என்று அதட்டினாள்.

''என் இஷ்டம். தான் எதை வேண்டுமானாலும் டேப்ரிக்கார்டரில் போட்டுக் கேட்பேன் நீங்கள் யார் என்னை அதட்ட?'' என்று அவள் பதிலுக்கு கேட்க வாயைத் திறக்குமுன், அண்ணன் லுங்கி பனியனில் அறை வாயிற்படியருகே வந்து நின்றார்.

''நானும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். ஆமாம், கலா சொன்னதிலே என்ன தப்பு? எப்ப பார்த் தாலும் ஏன் இப்படி ''பாப்'' சங்கீதத்தைப் போட்டு காதை அறுக்கிறே. அது பாட்டா? ஒரே காட்டுக் கூச்சல். அம்மா உனக்குக் கர்நாடக சங்கீதம் கத்துக் கொடுத்தது தண்டம் ஒருநாள் பூஜையறையில் சாமி மேலே ஒரு பாட்டு பாடியிருக்கியா?'' அதட்டிவிட்டு கூரல் தெறிக்கும் விழிகளால் வெறித்தார். அன்றில் இருந்து அவள் வீட்டில் தன் ஆர்ப்பாட்டங்களைக் கொஞ்சம் அடக்கிக் கொண்டாள்.

''பாப்'' சங்கீதத்தை ஒசைப்படாது டேப்ரிக்கார் டின் ஒலிவழி பித்தான்களை காதில் மாட்டிக்கொண்டு தன் அறைக்குள் படுக்கையில் படுத்தபடி கேட்பாள்.

இன்று வீடு திரும்பும்போது கலா அண்ணி என்ன சொல்லப் போகிறாளோ? என்று ரேவதி தனக்குள் குமுறிக் கொண்டு வேகமாக கடைப்படிகளில் இறங்கி வெளியே வந்தபோது, கை மடக்கில் இருந்த பத்திரி கைகள் எல்லாம் தரையில் சிதறியதால், எதிரே வந்தவ ளுடன் மடார் என்று மோதிக் கொண்டாள்.

''இடியட்'' என்று சொல்ல எண்ணியவளின் வார்த் தைகள் வாயில் நின்று விட்டன.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

முகமெல்லாம் சூடாகிப்போய் கால்கள் தள்ளாடின.

"சாரி...மேடம். ஓ! மிஸ் ரேவதி?" என்று கூறி விட்டு அந்தத் தொங்கு மீசை வாலிபன் தாலாபுறமும் பரந்து கிடந்த அந்த பத்திரிகைகளை நிதானமாகப் பொறுக்கி அடுக்கி எடுத்துவந்து அவளிடம் நீட்டினான்.

அவனது சிரிக்கும் கண்களின் அழகிலே கட்டுண்டு கையை நீட்டியவள், மறுபடியும் பத்திரிகைகளைத் தவற விட்டாள்.

அவன் உரக்கச் சிரித்துவிட்டான். வரிசையான அந்த பற்களின் அழகைக் கண்டு அதிசயத்துடன் ஒரு கணம் மயங்கி நின்றாள் ரேவதி.

"முதல்லகூட நீங்க வேணும்னுதான்கீழே போட்டீங்களா?" வேடிக்கையாகக் கேட்டபடி பத்திரிகைகளை மீண்டும் எடுத்து அவளிடம் கொடுத்தபோது, அவள் பரபரப்புடன் வாங்கிக் கொண்டு "நன்றி" என்றாள்.

"எங்கே போகணும்? சொன்னால், என் வாகனத்தில் கொண்டு விட முடியும்." என்றவனிடம் பதில் பேசாது பாதையோரமாக நடந்தாள்.

3

ரேவதி திரும்பிப் பாராது வேகமாக முன்னே நடந்தாள். அவன் பின்னால் ஓடி வந்தான்.

"மிஸ் ரேவதி! உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா, என் மோட்டார் சைக்கிளில் உங்களை வீடுவரை கொண்டுவிடுகிறேன்" என்று மோகனமாக முறுவலித்தான்.

போலியான கோபத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்துதாள். "நன்றி மஸ்டர்! நீங்கள் ஒண்ணும் சிரமப்பட்டுக்க தேவையில்லை" என்றபடி மேலே நடந்தாள்.

"என் பெயர் முகுந்தன். தெரிஞ்சு கொள்ளப் பிரியப்படுவீங்கன்னு நினைக்கிறேன்!"

நிழலாகப் பின் தொடர்ந்தவனைப் பாராதுபோல அவள் தயாராக நின்று கொண்டிருந்த பென்ஸ் காரை நோக்கி நடந்தாள்.

சீருடை அணிந்துகொண்டிருந்த வண்டி ஓட்டுனர் ஓடிவந்து அவள் சுமந்து வந்த புத்தகக் குவியலை சட்டென்று வாங்கிக் கொண்டார்.

முன் இருக்கையில் அவைகளைப் போட்டுவிட்டு, காரின் பின் கதவை அவளுக்குப் பவ்வியமாகத் திறந்து கொண்டு நின்றார்.

ஒரே எட்டில், காரை அடைந்து கண்ணாடி வழியே தலையை உள்ளே நீட்டி கண்களால் சிரித்தான் முகுந்தன்.

"இந்த பென்ஸ் கார் முன்னால் என் மோட்டார் சைக்கிள் எந்த மூலை? புரிகிறது, நீங்கள் ரொம்ப உயர்ந்த இடம்!" என்றபடி அவள் பதில் அளிக்குமுன் திரும்பி வேகமாக நடந்து கூட்டத்திற்குள் மறைந்து போனான்.

இந்த முகுந்தன் யார்? எப்படிப்பட்டவன்? எங்கே வேலை செய்கிறான்? வினாடியில் எல்லாம் தெரிந்து கொள்ள அவள் மனம் தவித்தது.

"டிரைவர்! வீட்டுக்குப் போகலாம்" என்று மிடுக்காக கூறிவிட்டு இருக்கையில் சொகுசாகச் சாய்ந்து கொண்டாள்.

மாலைப்பொழுது அமுங்கவே, சாலை விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. போக்குவரத்து நெரிசலில் மெல்ல ஊர்வலமாக நகர்ந்து கொண்டிருந்தது. இருபக்கமும் சாலையை வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தவள் இடது பக்கம் திரும்பியபோது நெஞ்சம் துணுக்குற்றாள்.

முகுந்தனது மோட்டார் சைக்கிள் சாலை ஓரத்தில் ஜோடி போட்டுக் கொண்டு வருவது போல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

நெரிசல் அதிகமானபோது வண்டிகள் நின்றன. அப்போது அவன் அவள் பக்கம் திரும்பிப் பார்த்து புன்னகை பூத்தான்.

அவனைப் பாராதது போல தலையை உள்ளே இழுத்துக் கொண்டு இருக்கையில் அழுத்திச் சாய்ந்து கொண்டாள் அவள்.

ஆனால் நெஞ்சு மேலே மிதந்துகொண்டு வருவது போல பிரமிப்பில் படபடவென்று துடித்தது.

இதென்ன வேடிக்கை! முன்பின் தெரியாதவனோ ஒருவனைப் பார்த்து எதற்காக இந்த பரபரப்பு? உதட்டை அழுந்திக் கடித்துக் கொண்டாள்.

அவள் எதிர்பார்த்ததுபோலவே அண்ணி வாயிற் பக்கம் நின்று கொண்டிருந்தாள்.

''மாமா, காருக்காக போன் செய்தார். கடைத் தெருவில் ரொம்ப நேரம் சுத்திக்கிட்டிருந்திருக்கே! இதென்ன புதுப்புத்தகங்கள்? வீட்டு அலமாரியை அடைச்சு கொண்டு ஏற்கெனவே ஏராளமான புத்தகங்கள் இருக்கு. இன்னும் எதுக்கு?'' என்று அண்ணி அதட்டலாகக் கேட்டாள்.

ரேவதி முகம் சிவந்துபோனாள். கோபத்தைஅடக்க பற்களைக் கடித்துக் கொண்டாள்.

''வர வர அண்ணியின் அதிகாரம் கொடி கட்டிப் பறக்குது!'' மனம் ஆத்திரத்தில் குமுறியது.

மவுனமாகப் புத்தகங்களைத் தழுவியபடி உள்ளே நுழைந்தாள்.

அம்மா மங்களம் அப்பொழுதுதான் பின் பக்க மிருந்து வரவேற்பு அறைக்குள் வந்தாள்

அண்ணன் சரவணனுக்குப் பின் இரண்டு பெண் குழந்தைகள் ஒருவர்பின் ஒருவராக இறந்து விடவே. அம்மா கோவில்களை சுற்றி விரதமிருந்து, ஆண்டவனை மனமுருகி வேண்டிக் கொண்டு அருமையாகப் பெற்றுக் கொண்ட மகள் ரேவதி. அவள் கண் கலங்கத் தாய் பொறுக்கவே மாட்டாள். அப்பா அவள் மீது உயிரையே வைத்திருந்தார். பெற்றோர்கள் தன் பக்கம் — தனக்கு எதுவும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்ற துணிச்சல் ரேவதிக்கு ரொம்பவே இருந்தது

''படிக்கிற புத்தகங்களைத்தானே குழந்தை ஆசைப் பட்டு வாங்கிட்டு வந்திருக்கா—சேலை துணின்னு கண் டதில் காசை கரியாக்கலையே!'' அம்மா அவளுக்காகப் பரிந்து கொண்டு பேசினாள்.

அண்ணி அப்பொழுதும் விடுவதாக இல்லை

''தம்ப வீட்டில் வசதி இருக்கு. புத்தகமாகட்டும், சேலையாகட்டும் ரேவதி நினைச்சதை வாங்க முடியும். நாளைக்கி இன்னொருத்தர் வீட்டில் வாழ்க்கைப்படப் போகிறவள். அங்கே நிலைமை எப்படி அமையுமோ? இப்படி ஊதாரித்தனமா செலவு செய்ய கணவன் அனுமதிக்க மாட்டான். அப்போது மனம் சங்கடப்படுமே. கட்டும் செட்டுமா வாழத் தெரிஞ்சுக்கறதில் தவறு இல்லையே?''

பட்டென்று பதிலளிக்க வாயைத்திறந்தாள் ரேவதி.

அண்ணனது கார் தோட்டத்து நடைபாதையில் வேகமாக வருவதைக் கண்டாள். தோள்களை குலுக்கி விட்டு விரைவாக மாடிப்படிகளைக் கடந்து தனது அறைக்குள் புகுந்து கொண்டாள்.

என் தந்தை சம்பாதிக்கிறார். அண்ணனுக்குச் சரி சமமா சொத்தில் எனக்குப் பங்கு உண்டு. என் பணத்தை நான் எப்படியோ செலவழிப்பேன். யார் இவங்க கேட்கிறது? உரக்கக் கத்த வேண்டும் போல அவளது மனதில் புயலாக ஆத்திரம் மூண்டது.

புத்தகக் குவியலைப் பொத்தென்று படுக்கைமீது விசிறிப் போட்டு விட்டு ஜன்னல் அறைக்குள் மறைந்து கொண்டாள்.

வெளியே உடுத்திச் சென்ற உடையைக் களைந்து விட்டு, அலமாரியில் பெட்டி போட்டு வைத்திருந்த கஃப்தானை உடுத்திக் கொண்டாள். குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவி முடியைச் சீர் திருத்தி பொட்டு வைத்துக் கொண்டு அவள் வெளியே வருவதற்குள் டெலிபோன் கிணுகிணுத்தது. அப்பாவின் அறையிலிருந்த பிரத்யேகத் தொலைபேசிதான் அலறிக் கொண்டிருந்தது.

முன்பின் பார்த்தபடி அறைக்குள் நுழைந்தாள். போனை அவசரமாக எடுத்தாள். மறுபக்கத்தில் இருந்து காதை இன்பமாகத் தழுவிய அந்தக் குரல் யாருடையது என்று அவளால் ஊகிக்க முடிந்தது.

"மிஸ் ரேவதிதானே! எப்படி உங்க வீட்டுத் தொலைபேசி எண்ணைக் கண்டு பிடித்தேன் என்று கேட்காதீங்க—மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. நான்தான் முகுந்தன் பேசறேன் தெரியுது இல்லையா?" காதைத் தழுவிய அந்த சிரிப்பின் ஒலி உடல் முழுவதும் பாய்ந்து மென்மையானதொரு சுக அனுபவத்தைத் தர அவள் ஒரு கணம் ஆடிப்போனாள்.

"ஆமாம், ரேவதி பேசறேன். இது என் தந்தையின் தனி டெலிபோன். இதைத்தேடி உங்களை யார் போன் செய்யச் சொன்னாங்க மிஸ்டர்! நீங்க

ரொம்பவே துணிச்சலான ஆசாமி" தணிந்த குரலில் அதே போலிக் கோபத்தில் கடிந்து கொண்டாள்.

"இந்தத் துணிச்சலை எனக்கு நீங்கதான் கொடுத்திருக்கீங்க. தவறு உங்களுடையதுதான். மிஸ் ரேவதி என்னை பேர் சொல்லி கூப்பிடுங்க அதுக்குகூட நான் அருகதை இல்லையா? மனம் பிடிச்சுப் போச்சுன்னா பணய் பின்னால ஓடி ஒளிஞ்சுக்கும். அதனாலே..."

"அதனாலே!" அவள் அதட்டியபோது அப்பா தொண்டையைச் செருமிக் கொண்டு மாடிப் படிகளில் வரும் சத்தம் கேட்டது.

"மிஸ்டர் முகுந்தன்! இது என் தந்தையின் சனித் தொலைபேசி. அவர் வராரு. நான் தொடர்ந்து பேச முடியாது. இருந்தாலும், நீங்க ரொம்பத் தெரிந்தவர் போல போனில் என்னைக் கூப்பிட்டு பேசறதை நான் அனுமதிக்க மாட்டேன். குட் பை" என்றாள்.

"அப்போ நேரில் பேசிக்கலாம்னு அர்த்தம் தானே?" கலகலவென்று அவன் நகைத்ததும், போனை டக்கென்று வைத்தாள்.

காதுகளில் இன்னமும் அந்தச் சிரிப்பொலி ரீங்காரம் செய்வதைக் கண்டு பிரமித்து நிற்கும்போது, அப்பா உள்ளே வந்துவிட்டார்.

"என்னம்மா? யாரோடு போனில் பேசினே?"

அவள் வெடவெடத்துப் போனாள்.

"ஒண்ணுமில்லை அப்பா. ராங்கால்..." என்று கூறி விட்டு வேகமாக வெளியே வந்தாள்.

அவள் செய்யும் அந்தக் காரியம் முற்றிலும் தவறு என்று, குற்ற உணர்வு உள்ளத்தில் குத்திக் குதறியது.

4

ரேவதியின் அண்ணி கலாவுக்கு, அவளது தோழி களைக் கொஞ்சமும் பிடிக்காது.

அதுவும் தெட்டைக் கொக்காக வளர்ந்து நின்ற லாவண்யாவின் அரட்டைத்தனத்தை மிகவும் வெறுத் தாள்.

நினைத்தபோது எல்லாம் லாவண்யா ரேவதி பங்களாவுக்குப் படையெடுப்பாள். கால் செருப்புகளைக் கழற்றி வைக்காது அப்படியே முன் அறைக்குள் நுழைந்து, ரத்ன கம்பளத்தின் மீது தெருப் புழுதியை உதிர்த்துவிடுவாள். சிறிது நேரம் சும்மா உட்கார்ந் திருக்க மாட்டாள். கண்ணாடி பீரோவுக்குள் வைத் திருக்கும் அலங்காரப் பொருள்களை எடுத்து ஆராய்ந்து பார்ப்பாள்.

டேப் ரிக்கார்டரைத் தட்டிவிட்டு மெல்லப் பாட் டைக் கிளப்பிவிடுவாள்.

உத்திரவு கேட்காது தொலைபேசியை எடுத்து தன் தோழிகளைக் கூப்பிட்டுப் பேசுவாள்.

கலாவுக்கு அவளது செய்கை மிக்க வெறுப்பைத் தந்தது. கல்லூரியில் படித்துவிட்டால் மட்டும் போதுமா? பிறர் வீட்டில் எப்படி நடந்துகொள்வது என்கிற மரியாதை தெரிய வேண்டாமா?

எல்லாத் தோழிகளையும் விட ரேவதிக்கு லாவண்யா மீது மிக்க பிடிப்பு.

அன்று காலை அண்ணி கலா அவளது படுக்கை அறைக்குள் மெள்ளத் தலையை நீட்டினாள். அண்ணி யின் முகத்தில் கடுமை பொங்கிவழிந்துகொண்டிருந் தது. ''உன்தோழி லாவண்யா போனில் கூப்பிடுகிறாள்.

ஒன்னும் தலைபோகிற சமாச்சாரம் இல்லை ஏதோ பாட்டுகளைப் பற்றிய சந்தேகமாம். சட்டுனு பேசிட்டு போனை வைச்சுடு. அண்ணனுக்கு கம்பெனி விஷயமா யாரோடும் தொடர்பு கொள்ள நேரிடும். போன் அவசரத்துக்கு செய்தியை அனுப்பும் சாதனம். மணிக் கணக்கா ஊர் வம்பு அளக்க தொலைபேசி வைத்திருக்க வில்லை. புரிகிறதா' அதட்டிவிட்டுத் திரும்பினாள்.

முகத்தைச் களித்து, அண்ணிக்கு பழிச்சுக் காட்டி னாள் ரேவதி. அண்ணன் வீட்டிலிருக்கும் நேரத்தில் அவரைக்குக் கலாவுடன் எதிர்த்துப் பேச எப்பொழுதுமே துணிச்சல் இருந்ததில்லை.

அப்பாவின் பிரத்தியேக டெலிபோன் எண்ணை அவள் தன் தோழி லாவண்யாவுக்குத் தந்திருந்தாள்.

ஏதாவது இரகசியம் பேச விரும்பினால் அவர்கள் இருவரும் அந்தப் போனைத்தான் உபயோகித்தனர். அப்படி என்ன முக்கிய சங்கதியாம்? பரபரப்புடன் போனை எடுத்தாள் ரேவதி.

''இன்னிக்கு லீடுப்பு நாள்தானே. மாலை எங்கள் வீட்டுக்கு நீ காப்பி சாப்பிட வர முடியுமா!' தணிவான குரலில் லாவண்யா மறுபக்கத்தில் இருந்து கேட்டாள்.

'எதுக்குன்னு சொல்ல முடியுமா?''

'உன்னைப் பத்தின சங்கதி. உனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கு...கட்டாயம் நீ எங்க வீட்டுக்கு வரணும்...ஓ.கே.''

சுற்றும் முற்றும் பார்த்தாள் ரேவதி அண்ணியை அருகில் காணவில்லை. ''சரி, வரேன், அண்ணி இடக்கு செய்தால் என்ன செய்யறதுன்னு குழப்பமா இருக்கு.''

''பரீட்சை தெருங்கிட்டு வருது. கூட்டாக நாங்க உட்கார்ந்து படிக்க விரும்பறோம். என் தோழி

லாவண்யா வீட்டில் மத்த ரெண்டு பேரும் வந்து கலத்துக்கப் போறாங்கன்னு அடிச்சு சொல்லு. உன் அண்ணிக்கு நீ அடிமையா? பயப்படாதே...'' தூண்டிக் கொடுத்தாள் தோழி லாவண்யா.

அன்று மாலை குறிப்பிட்ட நேரத்தில் அலங்கார மான ஒரு பாக்சியை அணிந்து கொண்டு, கட்டு புத்தகங்களை துணிப்பையில் திணித்து தோளில் மாட்டிக் கொண்டு அம்மாவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, புறப்பட்டு விட்டாள் ரேவதி.

அண்ணி கலாவுக்குத் தன் நாத்தியின் போக்கு கொஞ்சமும பிடிக்கவில்லை. இளம் வயதுப் பெண், பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். பொறாமைக் காரர்கள் ஏதாவது தந்திரம் செய்து, அவர்கள் குடும்பத்தின்மானத்தை குலைக்கலாமே.சிநேகிதிகளை எவ்வளவு தூரம் நம்பமுடியும். உள்ளூரக் கவலைப் பட்டவளாக மாமியாரின் பின்னால் வந்து நின்றாள் கலா.

''கட்டாயம் ரேவதி தன் சிநேகிதி வீட்டுக்குப் போகணுமா'' என்று முணுமுணுத்தாள்.

'என் தோழி இங்கே வந்தால் உங்களுக்குப் பிடிக் கிறதில்லை. நான் அவள் வீட்டுக்குப் போகிறதும் பிடிக்கலை பின்னே என்னதான் செய்யணும்னு நினைக் கிறீங்க '' கோபத்துடன் கேட்டாள் ரேவதி.

'கலா! அவளை விடு...அவள் விருப்பப்படி போயிட்டு வரட்டும்.'' தாயார் மங்களம் பரிந்து பேசினாள்.

'கண்டவங்க வீட்டுக்கு தங்கை போய் வர்றது உங்கள் மகனுக்குப் பிடிக்காது.''

''அவள் ஒண்ணும் கண்டவள் இல்லை. நம்மைப் போல பங்களாவாசி இல்லைதான். ஆனால் கண்ணிய மான குடும்பத்தைச் சேர்ந்தவள் அண்ணி; உங்களுக்கு யாரையாவது பிடிக்காவிட்டால், வெறுப்பைக் காட்டுவீங்க.'' துணிவுடன் படபடத்துவிட்டு படி களைத் தாவி இறங்கி தயாராகக் காத்திருந்த காரில் ஏறிப் பறந்து விட்டாள்.

லாவண்யா, திருவல்லிக்கேணி தம்பிரான் தெரு வாசி. நெருக்கமான அந்தத் தெருவிலிருந்த ஓட்டுக் கூரை வீடுகள் பல இப்போது மாடிக் கட்டிடங்களாக மாறிவிட்டிருந்தன. அரபு நாடுகளுக்கு வேலைக்குப் போன பிள்ளைகள் அனுப்பிய பணத்தில் பெற்றோர்கள் தம் வீட்டையும், வாழ்க்கையையும் சீராக்கிக் கொண் டார்கள். அந்தத் தெருவில் இருந்து நான்கு இளைஞர் கள் அரபு நாடுகளில் வேலை செய்து பிழைக்கப் போயி ருந்தனர் லாவண்யாவின் அண்ணனும் அதில் ஒருவன். அவர்களது ஓட்டுக்கூரை வீடு மாடிக் கட்டிடமாக மாறி விட்டிருந்தது.

காரில் இருந்து இறங்கிய ரேவதி, கண்கள் விரிய வியப்புடன் பார்த்தாள்.

''என்ன அப்படி பார்க்கிறே? நீ இங்கே வந்து ரொம்ப நாளாச்சா? புதுசா கட்டியிருக்கிற வீட்டை உனக்குக்காட்டத்தான் கூப்பிட்டேன். அத்தோட இன் னொரு இன்பமான செய்தியும் இருக்கு. உள்ளே வா'' என்று தோழியின் கைகளைப் பிடித்தாள்.

''அப்போ நான் எத்தனை மணிக்குத் திரும்பி அழைச்சிட்டு போகணும்னு சொன்னால் நல்லா இருக் கும்.'' கார் ஓட்டுனர் சலிப்புடன் கேட்டார்.

லாவண்யா முந்திக் கொண்டாள். ''நீங்கள் வர வேணாம், நானே அழைச்சுண்டு வந்து வீட்டிலே சேர்த் திடுவேன்?'' என்று பதில் கொடுத்துவிட்டுத் தோழியை உள்ளே தள்ளிக்கொண்டு சென்றாள்.

கடந்த ஆண்டு ஒருமுறை ரேவதி அங்கே வந்திருக் கிறாள் பழைய பிரம்பு நாற்காலியும் ஒடிந்த முக்காலி யும்தான் கூடத்தில் கிடந்தன.

இப்போது புத்தம்புது சோபா செட்முன் அறையை அலங்கரித்தது. சன்னல்களில் வண்ணத் திரைகள். அவற்றிலே அழகான படங்கள்.

''அம்மாவும் அப்பாவும் சினிமாவுக்குப் போயிருக்காங்க. அதனாலே நாம நிம்மதியா பேசலாம்'' என்று சிரித்த லாவண்யா, ''அண்ணா! இப்படி வாங்கோ'' என்று குரல் கொடுத்தாள்.

குப்பென்று சிகரெட்டு மணம்முகத்தில் மோதுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தால் ரேவதி.

எதிரே புன்னகையுடன் வந்து நின்ற முகுந்தனைக் கண்டதும், நெஞ்சு படபடத்தது. உடல் பதறியது. முகத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

''முகுந்தன் எனக்குத் தூரத்து உறவு. அண்ணன் முறை. உன்னை அறிமுகம் செய்து வைக்கும்படி கேட்டார். அதனால் அவரை இங்கே வரவழைத்தேன். அம்மா அப்பா இல்லாதது சவுகரியமாப் போச்சு. நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருங்கள் காப்பி கலந்திட்டு வரேன்'' என்று கூறிவிட்டு லாவண்யா உள்ளே மறைந்து விட்டாள்.

''மிஸ் ரேவதி! உங்களைச் சந்திச்சுப் பேச நான் எத்தனை பாடுபட்டிருக்கேன் தெரியுமா? எனுக்குன்னு புரியுதா?'' கேட்டபடி சிரித்துக் கொண்டு எதிரே உட்கார்ந்தவனை, சிறு நடுக்கத்துடன் பார்த்தாள், ரேவதி

முன்பின் தெரியாத ஒரு இளைஞனுடன் தோழி வீட்டில் சந்திக்கப் போயிருக்கிறாள் என்பதை அண்ணி தெரிந்து கொண்டுவிட்டால்? முகமும் காதுகளும் சூடாகிப் போக, குற்ற உணர்வில் தவித்தபடி தரையைப் பார்த்துக் கொண்டு மவுனமானாள்.

5

இருட்டி வெகுநேரம் சென்று விட்டிருந்தது

தில்லைநாதனும், மகனும் அலுவலகத்தில் இருந்து திரும்பி விட்டிருந்தனர்.

இன்னமும் ரேவதி வீடு வந்து சேரவில்லை.

கலா உள்ளுக்கும் வாயிலுக்கும் கவலையுடன் நடந்து கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்த சரவணன் சுற்றுமுற்றும் பார்த்தான். ''ரேவதி வெளியில் போயிருக்காளா? சத்தமே இல்லையே, ஒரு சமயம் மாடியில் இன்னமும் தூங்குகிறாளா'' ஆச்சரியத்துடன் கேட்டான்.

கலாவால் பொய் சொல்ல இயலவில்லை. பின்னால் வந்து நின்ற மாமனாரும் அதையேதான் கேட்டார். ''இன்றைக்குக் கல்லூரி விடுப்புநாள் என்று எங்கேயாவது கிளம்பி விட்டாளா? எங்கே போனாள்னு தெரியுமா?'' பூஜையறையில் இருந்து வெளிப்பட்ட மனைவியிடம் அதட்டலாக விசாரித்தார்.

மங்களம் பரக்கப் பரக்க விழித்தாள்.

''பரீட்சைக்குத் தோழிகளுடன் சேர்ந்து படிக்க லாவண்யா வீட்டுக்குப் போயிருக்காள். நேரத்தோட திரும்பி விடுவதாக டிரைவரைத் திருப்பி அனுப்பி விட்டாள்'' மேலே பேசப் பிடிக்காது கலா உள்ளே சென்று விட்டாள்.

தாடை இறுக மனைவியை முறைத்துவிட்டு மாற்றுடை அணிய தில்லைநாதன் மாடிக்குச் சென்றார்.

குளித்துவிட்டு வேட்டி சட்டையில் கீழே இறங்கி வந்த சரவணன், சாப்பாட்டறை மேசை மீது கலா தட்டுகளைப் பரத்திக் கொண்டு நிற்பதைக் கண்டான்.

''இன்னும் ரேவதி வரலையா?'' என்று கோபத்துடன் கேட்க வாயைத் திறந்தபோது வராந்தாவில் காலடி ஓசை கேட்டது. முந்திக் கொண்டு கதவைத் திறந்தாள்.

முன் நெற்றியில் புரண்டு விழுந்து கி_ந்த கூந்தலும், சிவந்த முகமாக பதைபதைப்புடன் நின்று கொண்டு இருந்தான், ரேவதி.

''நம் வீட்டுக் காரைத் திருப்பி அனுப்பிட்டு, அப்படி என்ன தோழி வீட்டில் படிப்பு? இதெல்லாம் உனக்கே நல்லா இருக்கா?'' கடுமையாக கேட்டபடி அவள் உள்ளே வர ஒதுங்கி நின்றான் சரவணன்.

அண்ணி மூட்டிக் கொடுத்து, அண்ணனை ஏவி விட்டிருக்கிறாள் என்று வெகுண்ட ரேவதி, முகத்தை உம் என்று வைத்தபடி புத்தக மூட்டையை இறக்கி முன்னறை மேசை மேல் வைத்தாள்.

அதற்குள் அப்பா மாடியிலிருந்து இறங்கி வந்து விட்டார். மகளைக் கண்டு மகிழ்ந்து போய் புன்னகைக்கும் அப்பா முகத்தில் கடுமை பொங்கி வழிந்தது. ''அண்ணா கேட்கிறானே பதில் சொல்லேன்?'' என்று சீறி விழுந்தார்.

அவர்கள் இருவரும் அவளை அப்படி அதட்டி விசாரிக்கக் காரணம் இருந்தது.

அன்று மாலை அவர்களைத் தேடி வந்த நண்பர் நாராயணன் சொன்ன தகவலைக் கேட்டு இருவரும் இடிந்து போய் விட்டிருந்தனர்.

அப்போது வியாபாரம் சம்பந்தமாகப் பேச தந்தையின் அலுவலக அறைக்குள் சரவணன் நுழைந்தான்.

அது சமயம் இன்டர்காம் சிணுங்கியது. வரவேற்புப் பெண் பேசினாள்.

''உங்களைக் காண மிஸ்டர் நாராயணன் வந்திருக்கிறார் அனுப்பவா?''

'வரச்சொல்'' என்று கூறிவிட்டு ஆயாசத்துடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டார் தில்லைநாதன்.

அவருடைய நண்பர் நாராயணன், தில்லைநாதனைப் போல பெரிய தொழில் அதிபர்.

நாராயணன் நேராக புறப்பட்டு வந்திருப்பதின் காரணம் என்ன? அவசரமாகக் கடன் தொகை ஏதேனும் கேட்க வந்திருக்கிறாரா? கணப்பொழுதில் பலவும் எண்ணி கவலையுடன் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். தில்லைநாதன்.

நாராயணன் கதவை லேசாகத் தட்டிவிட்டு உள்ளே வந்தார். பேய் அறைந்துவிட்டது போன்ற அவர் தோற்றம் தில்லைநாதனைக் திடுக்கிடச் செய்தது.

அவர்கள் இருவரும் பேச வேண்டிய ஏதோ முக்கிய சங்கதியின்போது குறுக்கே நிற்பது பிசகு என்று எண்ணி, சரவணன் வெளியே செல்ல முயலவும், நாராயணன் தடுத்தார்.

''உட்காரப்பா, உனக்கும் தெரிஞ்சா நல்லது ஊர் உலகத்துக்கு நாளைபொழுது பட்டவர்த்தனமாதெரியப் போற சங்கதி,என் மனைவி இதை எப்படித் தாங்கிக்கப் போறாளோ'' புலம்பினார்

மேசை மேலிருந்த வெள்ளை பிராந்தியை அழுக்கினார் தில்லைநாதன். அலுவலகப் பையன் கதவைத் திறந்து மெல்ல எட்டிப் பார்த்தான்.

''மூன்று கப் காப்பி வேணும் சீக்கிரம் கொண்டுவா'' உத்திரவிட்டு நண்பனை நாற்காலியில் அமரச் செய்தார்.

''என்ன நடந்தது? விபரமாகச் சொல்லு. ஏதாவது உதவி தேவைப்பட்டால் செய்யத் தயாரா இருக்கோம்'' ஆறுதலாகச் சொன்னார்.

வியாபாரத்தில் ஏற்பட்ட எத்தனையோ சிக்கல்களைக் கண்டு சிறிதும் கலங்காத நாராயணன். இப்போது கண் கலங்கியவராய், தடுமாறின குரலில் பேசினார்.

தாங்க முடியாத அவமானம் வந்து சேர்ந்துட்டது தில்லைநாதா. கொஞ்சம் முன்புதான் சங்கதி தெரிஞ்சது. யார் கிட்டேயும் சொல்ல முடியாமல் நேரே உன் கிட்டே ஆலோசனைக்காக ஒடிவந்திருக்கேன்'' தழுதழுத்தில் அவர் குரல் உடைந்தது.

''பதறாமல் என்னன்னு விவரமா சொன்னால் நல்லது. நீ கூட இப்படி கலங்கலாமா?'' நண்பனின் தோளை மெல்லத் தட்டிக் கொடுத்தார் தில்லைநாதன்.

''என் கடைசிப் பெண் சரளா எங்க வீட்டு எடுபிடி ஆளோடு ஒடிப்போய்ப் பதிவுத் திருமணம் செய்துட்டு. துணிச்சலா அவனோட இன்று மாலை என் ஆபீசுக்கு வந்து நின்றாள் நேத்திலிருந்து என் செருப்பைத் தட்டி துடைச்சு எடுத்துக் கொண்டு வந்து தந்த பயல். நாற்காலியிலே கால்மேலே கால் போட்டுகிட்டு...தன் மனைவிக்குச் சேர வேண்டிய பங்கை உடனடியா தாணும்னு அதட்டறான். சட்டம் பேசறான்'' மேலே சொல்ல முடியாது. வார்த்தைகள் பொடியாக, விம்மி அழத் தொடங்கினார் நாராயணன்.

அலுவலகப் பையன் கதவைத் தட்டியதும் சட்டென்று சரவணன் எழுந்து சென்று அவன் சுமந்து வந்த மரத் தட்டை கையில் வாங்கிக் கொண்டு கதவைச் சாத்தினான்.

'கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டு நிதானமா பேசலாம்'' நண்பரைத் தில்லைநாதன் வற்புறுத்தி உபசரித்தார் ''நாராயணா நடந்தது நடந்துவிட்டது. இனி மேலே நாம்தான் சாமர்த்தியமா நடந்துக்கணும்!''

''பி.ஏ பட்டப் படிப்பு படிச்ச பொண்ணு. செல்லமா வளர்க்கப்பட்டவள். போயும் போயும் படிப்பு

அறிவில்லாத ஒரு வேலைக்காரப் பயலையா தேர்ந்தெடுக்கணும்? எங்க அலுவலகத்தில் எத்தனையோ தம்பித்தா குடும்பத்து இளைஞர்கள் வேலை பார்க்கி றாங்க எனக்குச் சாதி வித்தியாசம் கூட பெரிசல்ல. அந்தஸ்து வேற்றுமையைக்கூட பார்க்கலை அவங்களில் எவனையாவது கட்டிக் கொண்டு இருந்திருந்தால் கூட தான் இப்படி இடிஞ்சு போயிருக்க மாட்டேன். நேத்து வரை என் வீட்டு எடுபிடியா இருந்தவனை இன்னிக்கு மருமகன்னு எப்படி ஏத்துப்பேன்? ஊரே சிரிக்குமே! தில்லைநாதா, என் பெண் என் வரை செத்துவிட்டாள். திங்கள் ரெண்டு பேரும் இடை புகுந்து அவளுக்குச் சேர வேண்டியதை சட்டப்படி எங்கிட்டேயிருந்து வாங்கிட்டுப் போய் அவள் மூஞ்சியிலே எறிஞ்சுட உதவணும். இனி மேலே நான் அவள் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேன்'' விம்மினார் நாராயணன்.

''இப்படித்தான் நீ ரொம்ப தைரியமா இருக்கணும். இப்படி மனம் ஒடிஞ்சு போகக்கூடாது கவலைப்படாதே. நாங்க இந்த உதவியை உனக்குக் கட்டாயம் செய்வோம்'' என்று ஆறுதல் பல கூறி, அவருடன் காரில் ஏறிக்கொண்டு அவரது பங்களாவில் விட்டுவிட்டுத் தம் காரில் திரும்பினார் தில்லைநாதன்.

''வீட்டிலே இளம் பையன்களை வேலைக்கு வைக்கிறது தப்புன்னு தெரியாததின் பலனை அனுபவிக்கிறார் நாராயணன்'' என்று கூறிய சரவணன் மனதில் திக்கென்று உணர்வு ஏற்பட்டது. அவள் தங்கை ரேவதி கிளைந்த பொழுது வீட்டை விட்டு வெளியே சுற்றுகிறாளே. இதுமாதிரி எதையாவது செய்துவிட்டு..... பெருத்த அவமானத்தைத் தேடித் தந்து விட்டால்? நாராயணனுக்காவது தான்கு பெண்கள். எல்லோருக்கும் நல்ல இடத்தில் திருமணமாகி விட்டிருந்தது. சரளாவுக்குக் கல்யாணம் பேசிக் கொண்டிருக்கையில் இப்படி மோசம் செய்து விட்டாள். அவர்கள் வீட்டுக்கோ ஒரே பெண் ரேவதி. நல்ல பணக்காரப்

பெண் என்று உளவு அறிந்து கொண்டு எந்தக் கயவனாவது அவளுக்குக் கண்ணி வைத்துவிட்டால்?

வீட்டுக்கு வந்ததுமே ரேவதியைப்பற்றி அவசரமாக விசாரித்ததின் காரணம் இதுதான்.

''ரேவதி! நான் கேட்டுகிட்டே இருக்கேன், நீ பாட்ல உள்ளே போனால் என்ன அர்த்தம்?''

''பரிட்சைக்கு வீட்டில் படித்தால் போதாதா? இந்த கூட்டுப் படிப்புக்கு இன்னிக்கே முழுக்குப் போட்டுவிடு. நீ பி ஏ. பரிட்சையில் பாசாகாவிட்டால், குடி முழுகிப் போயிடாது'' அதட்டினான். சரவணன்

திருதிருவென விழித்தாள், ரேவதி

''இன்னொரு தடவை நீ இருட்டின பிறகு வீட்டுக்கு வந்தியோ... நான் பொல்லாதவனாக இருப்பேன். அம்மா உங்க பூஜைகளைக் கொஞ்சம் குறைச்சுட்டு ஆகளை கண்டிச்ச வைக்க முயலுங்கள் அப்பா! நீங்கள் கொடுக்கிற செல்லம் இவளைக் குட்டிச் சுவராக்கிடும். இவளை இப்படியே அடக்காமல் அலைய விட்டால் நாராயணன் கதிதான் நாளை நமக்கு' இரைந்து கத்தினான் சரவணன்.

''அண்ணன் சொல்றது காதுலே விழுந்ததில்லையா? போய் முகத்தைக் கழுவிகிட்டு சாப்பிட வா. வோ லோன்னு ஊர் சுத்தற பழக்கத்தை இன்னியோட விட்டுடு. உன் அண்ணனுக்கு கோபம் வந்தால் கத்துவான். எனக்கு கோபம்வந்தால் என்ன நடக்கும்னு தெரியுமில்லையா? சாது மிரண்டால் காடு கொள்ளாது ஞாபகத்திலே வச்சுக்கோ'' என்றுமே கோபிக்காத அப்பா ஒங்கிய குரலில் கத்தினார்.

எல்லோரும் தன்னை கோபமாக முறைப்பதைக் கண்டு உடல் குறுகி—குற்ற உணர்வில் மனம் பதைக்க மெல்ல மாடிப்படிகள் மீறி ஏறினாள் ரேவதி.

6

ரேவதிக்கு சாப்பாடு இறங்கவேயில்லை

மணமும் சுவையுமாகத்தான் கலா பிரியாணியைத் தயாரித்திருந்தாள். புதினா சட்னியும் உருளைக்கிழங்கு மசாலா கறியும் காரசாரமாக இருந்தன.

சாதாரண நாட்களாக இருந்தால் சாப்பாட்டை அவள் ஒரு பிடி பிடித்திருப்பாள். இன்று அவள் மனம் ஒரு கவலை உணர்வில் தத்தளித்துக் கொண்டிருந்தது. ''நீ செய்தது தவறு'' என்பது போல நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது.

ஆனாலும் ஏன் செய்யக்கூடாது? தன் வருங் காலத்தை அவளே முடிவு செய்து கொள்ள உரிமை இல்லையா? மனம் இடையிடையே குறுக்குக் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தது. கோபமும் அழுகையும் நெஞ்சை இறுக்க. வாயில் போட்டுக் கொண்டே சோற்றை விழுங்க முடியாது தவித்தாள். பசியும் கெட்டு விட்டிருந்தது. அவளுக்கு அவனை சில கால மாகத் தெரியும். ஆனால், அவளுக்கு முகுந்தனை அறிமுகப்படுத்தி வைத்தது தோழி லாவண்யாதான்! அவனது பின்னணி எதுவும் அவளுக்குத் தெரியாது. முதல் சந்திப்பிலேயே முகுந்தன் மிகவும் நெருக்கமாக அவளிடம் பழக முயன்றான்.

அந்த போக்கு மட்டும் ரேவதிக்கு கொஞ்சம் உறுத்தலாக இருந்தது. அவளது அகராதியில் காதல் பற்றிய விளக்கமே வேறாக இருந்தது.

சந்தித்துப் பேசி பழக்க வழக்கங்களை புரிந்து கொண்டு மெல்ல நாளுக்காக நெருங்கி அன்பு கொள்வதுதான் அவள் வரைக்கும் காதல். கண்டதுமே சட்டென்று கையைப் பற்றி கன்னத்தோடு பொருத்திக்

கொள்ள முயலும் முகுந்தனது முரட்டுத் துணிவு அவளைத் திடுக்கிடச் செய்து விட்டிருந்தது.

லாவண்யா மந்திரம் போட்டு மயங்கிவிட்டது போல அவன் பேச்சுக்கு மறுப்பு சொல்லாது தலையை ஆட்டினாள். ரேவதி அருகில் இருந்த ஓட்டலில் இருந்து வறுத்த முந்திரிப் பருப்பும், அல்வாவும் அவர்களுக்காக வாங்கி வைத்திருந்தாள் லாவண்யா.

காப்பியுடன் அவைகளை அவர்கள் இருவருக்கும் பரிமாறிவிட்டு, அவர்களைத் தனியே முன் அறையில் விட்டுவிட்டு பின்பக்கம் மறைந்து போனாள்

தன்னைப் பற்றி அதிகம் தெரிவிக்காது முகுந்தன் அவளைப் பற்றியே விசாரித்துக் கொண்டிருந்தான். அடிக்கடி நகைச்சுவை துணுக்குகளைச் சொல்லி அவளை சிரிக்க வைத்தான்.

காப்பி தம்ளரை எடுத்து கையில் கொடுத்தவன், அவளது விரல்களை மெல்ல தொட்டான்.

"அட! நெற்றியிலே என்ன, சிறு காயம் போல தெரியுதே!" விசாரிப்பது போல கேட்டுக் கொண்டே அவளது நெற்றி முன் தவழ்ந்த கூந்தலை தன் கரத்தால் ஒதுக்கி விட்டான்.

பயத்தில் ரேவதியின் உடல் நடுங்கியது. முகுந்தனது கவர்ச்சியான தோற்றம் அவளை மயக்கியது.

தோழி லாவண்யாதான் அவளுக்கு உற்சாகமூட்டினாள். "பஸ்சில் போனால் யார் யாரோ மேலே இடிக்கிறாங்க உடனே நமது கற்பு பறி போயிட்டதுன்னு நாம் மண்டையை உடைச்சிக்கிறோமா?"

"முகுந்தன் யார்? என் அண்ணன். இப்போ உனக்கு அறிமுகமாகிவிட்ட தோழன். அவரது மோட்டார் சைக்கிளில் ஏறி உன் வீட்டு வாசலில் இறங்கினால் தப்பு ஒன்றுமில்லை. இந்த வேளையில் நீ தனியே

பஸ்சில் ஏன் அவதிபட்டுக் கொண்டு போகணும்" என்று தோழி செய்த பிரசங்கமே அவளை அவனது மோட்டார் சைக்கிளில் ஏற வைத்தது.

மேலே உராய்ந்தபடி அவன் பின்னால் மோட்டார் சைக்கிளில் பயணப்பட்ட போது, அவளுக்குப் பயமும் கலவரமும் தாங்க முடியவில்லை. வழியில் அவன் வண்டியை நிறுத்தினான். நன்றாக இருட்டி விட்டதால் சாலை விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின.

சிறப்பு அங்காடி அருகே அமைந்திருந்த ஒரு கடையில் வடதாட்டு உணவு தினுசுகளை சாப்பிட கடை முன் இளவட்டங்களின் கூட்டம் திமுதிமுத்துக் கொண்டிருந்தது. "இது எப்படி இருக்குன்னு சாப்பிட்டு பாருங்கள்..." கையில் பொட்டலமாக வாங்கி வந்ததைப் பிரித்து, சூடாக ஒரு சமோசாவை எடுத்து அவளிடம் நீட்டினான் முகுந்தன்.

தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று திகிலோடு பார்த்தபடி அவள் அதை வேகமாகக் கடித்து விழுங்கினாள்.

அதன் காரம் கண்களில் நீரை வரவழைத்து விட்டது. அருகில் நின்றபடி அவளையே பார்த்துக் கொண்டு சமோசாவைச் சுவைத்துக் கொண்டிருந்த முகுந்தன் சிரித்தான்.

"இந்தாங்க... இதைச் சாப்பிடுங்க.." என்று குளிர் பானப் பாட்டிலை அவளிடம் தந்தான்.

வீட்டுக்குத் திரும்பவேண்டும் என்ற அவசரத்தில் அதை உறிஞ்சியவள், 'போகலாமே? நேரமாச்சு' என்றாள் கவலையுடன்.

"எனக்கு நேரமாகலை... விட்டுப் பிரிய மனம் இல்லை" சரசமாகப் பேசியபடி வண்டியைக் கிளப்பினான் அவன்.

''அண்ணா பார்த்துவிட்டால், கொன்று புதைத்து விடுவார். அப்பா பார்த்துவிட்டால்...'' என்று பலவித மான கவலையில் குழம்பிக்கொண்டு, அதே சமயம் தோழி அறிமுகம் செய்து வைத்த அவனது அருகா மையை ரசித்துக் கொண்டு அவள் குழப்பமான நிலை யில்தான் வீட்டுக்குத் திரும்பியிருந்தாள்.

'என்ன சாப்பாட்டைக் கொறிக்கிறே? லாவண்யா வீட்டிலே ஏதாச்சும் சாப்பிட்டியா? கண்ட இடத்தில் ஏன் சாப்பிடணும்?'' அண்ணி அதட்டலாகக் கேட்டாள்.

அண்ணியை பதிலுக்குக் கோபமாக வெறிப்பதைத் தவிர, அவளுக்கு வேறு வழியிருக்க வில்லை.

கையைக் கழுவிக்கொண்டு வந்த அண்ணன் அவளை உற்றுப் பார்த்தான். ''இந்தப் பெண் ஏதோ தப்புக் காரியத்தில் இறங்கியிருக்கிறாள்'' என்று உள்ளுணர்வு அவனை எச்சரித்தது. தொண்டையைச் செருமிக் கொண்டான்.

'இதுதானே உனது கல்லூரிப் படிப்பின் கடைசி வருடம்?'' கேட்டான். தலையை ஆட்டினாள் ரேவதி.

''பரிட்சைக்கு இன்னும் சில மாதங்கள் தானே இருக்கு.''

வேகமாக சோற்றை விழுங்கிவிட்டு ''ஆமாம்!'' என்று பதிலுக்கு முனகினாள்.

''கல்லூரிக்கு தினசரி நம்ம வீட்டு காரில் போய் விட்டு நேரத்தோடு வீடு திரும்பணும். கடைகளுக்கு நீ தனியா போகக்கூடாது. அண்ணி கலாவோடு போய் வரலாம். இல்லாட்டி தேவைப்பட்டதை எழுதி என் கிட்டே கொடுத்தால் நான் ஆளை அனுப்பி வாங்கிட்டு வந்து தரச்சொல்றேன். பரிட்சைக்கு வீட்டிலிருந்து படித்தால் போதும். ஒய்வு நாளில் வீட்டு வாசல் படியைத் தாண்டக்கூடாது. அனாவசியமான சிநேகிதி கள் கூட்டம் இங்கே தேவையில்லை. நீ அவர்களைத் தேடிக்கொண்டு போவதும் அனாவசியம்.

''அண்ணன் சொல்றதைக் கேட்டியா?'' அப்பா அதட்டலாக வினவினார்.

நெஞ்சு வரை குமுறிக் கொண்டு வந்த அழுகையை அவள் அடக்கிக் கொண்டாள். அவளை வீட்டோடு சிறை வைக்க தீர்மானித்த அண்ணனை அவளுக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை. தலையை அசைத்தாள் கோபத்துடன்.

''உன் நன்மைக்குத்தான் சொல்றோம் இப்போ உனக்குக் கசப்பா இருக்கும். நாளைக்குப் புரிஞ்சதும் சந்தோஷப்படுவே'' என்று அண்ணி பேசியதைக் கேட்டு அவளுக்கு ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது. ''போதும் உபதேசம் வாயை மூடுங்கள்'' என்று கத்த வேண்டும் போலக் கோபம் உள்ளே குமுறியது ஆனால் அவர்கள் முன்னிலையில் வாயைத் திறக்கத் துணிவு இருக்கவில்லை.

''முகுந்தனை அவள் மறுபடியும் சந்திப்பதாக வாக்குக் கொடுத்திருந்தாள். அவளது உரிமை இப்படிப் பறிக்கப்பட்டால், அது எப்படிச் சாத்தியமாகும்...''

கையைக் கழுவிக் கொண்டு மவுனமாக மாடிக்குப் போனாள். மற்றவர்கள் கீழே இருக்கிறார்கள் என்ற துணிவில் அப்பாவின் தொலைபேசியை அணுகி, தோழி லாவண்யாவை அழைத்தாள்.

''இவ்வளவுதானே? கவலைப்படாதே. மனம் இருந்தால் மார்க்கம் ஆயிரம் இருக்கு''தோழி உற்சாகப் படுத்தினாள்.

''எப்படி முடியும்? 'பயமா இருக்கே'' முனகினாள் ரேவதி.

''நாளைக்குக் கல்லூரியில் சந்திக்கும் போது எல்லாம் விவரமா சொல்றேன். அண்ணா உன் நினைப் பாகவே இருப்பார். குட்நைட்'' என்றபடி மறுபக்கத்தில் போனை வைத்து விட்டாள், லாவண்யா.

மாடிப்படிகளில் காலடி ஓசை கேட்டதும், தொலை பேசியை வைத்துவிட்டு, அருகில் கிடந்த ஒரு நோட்டை எடுத்து வைத்துக் கொண்டு சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டாள் ரேவதி.

எப்படியாவது முகுந்தனை சந்தித்துப் பேச வேண்டும் அதற்கு இவர்கள் மூட்டுக்கட்டை போட முடியாது. போட்டால்? ஆத்திரத்துடன் அவள் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

7

ஒரு வாரம் வேகமாக நகர்ந்தது.

எவ்விதமான குழப்பமும் இன்றி வீட்டில் எல்லாம் அமைதியாக நடை பெற்றுக் கொண்டிருந்தன.

அன்று காலை வழக்கத்திற்கு முன்னதாக தில்லை நாதனும் மகனும் தங்கள் கம்பெனியைக் கவனிக்கப் புறப் பட்டிருந்தனர்.

ரேவதி கல்லூரிக்குக் காரில் சென்று இருந்தாள்.

அறைகளைச் சுத்தப்படுத்திய வேலைக்காரியை மேற்பார்வையிட மங்களம் மாடிக்குப் போயிருந்தாள்.

பகல் உணவுக்குத் தேவைப்பட்ட சமான்களை சமையற்காரரிடம் தந்து விட்டு முன்னறைபக்கம் வந்தாள் கலா.

வாயில் அழைப்பு மணி அழுத்தமாக இருமுறை ஒலித்து ஓய்ந்தது.

கதவின் கண்ணாடித் துவாரத்தின் வழியே பார்த்த வளுக்கு வியப்பு அவளுடன் கல்லூரியில் படித்த தோழி சத்தியவதி வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள். கதவைத் திறந்து மகிழ்ச்சியுடன் அவளை வரவேற்றாள்.

"நாம் சந்தித்துப் பல ஆண்டு ஆகிவிட்டது இல்லையா?" சிரித்தபடி முன்னறை இருக்கை ஒன்றை காட்டி உபசரித்தாள் கலா.

"நான் வித்யா கல்லூரியில் சரித்திர ஆசிரியையாக வேலை பார்க்கிறேன். ஒரு முக்கிய காரியமா இன்று விடுப்பு எடுத்துக் கொண்டு உன்னைப் பார்க்க வந்திருக்கேன்"

கலாவுக்கு குழப்பமாக இருந்தது.

"சங்கதி உன் வீட்டைப் பற்றியது. எனக்கு உன் குடும்பத்தை ஓரளவு தெரியும். விபரீதமாக எதுவும் நடக்கும் முன் உன்னை எச்சரித்து வைப்பது நல்ல தென்று புறப்பட்டு வந்திருக்கேன்." சத்தியவதி தொடர்ந்து பேசினாள்.

"ரேவதி அதே கல்லூரியில்தான் படிக்கிறாள். அவர்கள் குடும்பத்தைப் பற்றிய செய்தி என்றால்?" மேலே சிந்திக்க முடியாது கலவரத்துடன் கலா அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உன் நாத்தனார் ரேவதி கல்லூரிக்கு ஒழுங்காக வருவதில்லை. முக்கியமாக பகல் உணவு நேரத்திற்குப் பிறகு வகுப்புகளுக்கு மட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாள். தொடர்ந்து என்னுடைய மூன்று வகுப்பு களுக்கு அவள் வரவில்லை. ஆசிரியர்களிடையே ஏற்பட்ட கிசுகிசுப்பைக் கேட்ட எனக்கு மனம் ரொம்ப வேதனைப்பட்டது. நேற்று நானே கவனித்து விட்டேன். பகல் உணவு நேரத்தின்போது அவள் வெளியே நடப்பதைக் கண்டு நான் பின் தொடர்ந்து கல்லூரி "கேட்" அருகே வந்து எட்டிப் பார்த்தேன். கல்லூரி வாசல் அருகே மோட்டார் சைக்கிளுடன் ஒரு வாலிபன் நின்றிருந்தான். ரேவதி அவன் பின்னால் ஏறிக் கொண்டு போய்விட்டாள். பின்னர் கல்லூரி முடியும் நேரத்திற்கு முன்பு திரும்பி வந்தாள்.

தாடை இறுக கலா மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எனது ஊகம் இதுதான் ரேவதிக்கு யாரோ ஒரு சிநேகிதன் கிடைத்திருக்கிறான். வீட்டுக்குத் தெரியாது இருக்க அவள் வகுப்புகளுக்கு மட்டம் போட்டுவிட்டு அவனுடன் எங்கேயோ சுத்தப் புறப்படுகிறாள். இந்த செய்தி இன்னமும் எங்கள் கல்லூரித் தலைமையின் காதுகளுக்கு எட்டவில்லை. அவர்கள் மிகவும் கண்டிப்பானவர்கள். ஒழுக்கம் கெட்ட மாணவிகளைத் தொடர்ந்து தம் கல்லூரியில், படிக்க அனுமதிக்காது வெளியேற்றி விடுவார்கள் இப்படிப்பட்ட அவமானம் உன் குடுமபத்திறகு ஏற்படக்கூடாது என்பதற்காக, உன்னைச் சந்தித்துப் பேச வந்திருக்கிறேன்.'' முச்சு விடாது பேசினாள் சத்தியவதி.

திகிக்கென்று கலாவின் நெஞ்சு அடித்துக் கொண்டது.

'உண்மையாகவா?'' என்று கேட்டாள் மெல்லிய குரலில்.

'இது வெறும் கட்டுக் கதை இல்லை உன் வீட்டில் இருந்து யாராவது நேரில் அங்கே வந்து பார்த்துக் கொண்டு முடிவு செய்யலாம்.'' பெருமூச்செறிந்தாள் சதியவதி.

அவள் கணவன் சொன்ன தொழிலதிபர் நாராயணன் வீட்டுச் சங்கதி அவர்கள் வீட்டிலும் நடக்கப் போகிறதா? கலாவின் உடல் நடுங்கியது.

'மிக்க நன்றி'' என்று கூறிவிட்டுக் கலா எழுந்தாள். மாமியார் மடியில் இருந்து வருவதற்குள் சத்தியவதி விடை பெற்றுக் கொண்டு போனது கலாவுக்கு நிம்மதியைக் கொடுத்தது.

இந்த விபரீதமான சங்கதியை அவள் தன் கணவனிடம் மட்டும் சொல்லி ஆலோசனை பெற விரும்பினாள்.

தன் மகள் மேல் உள்ள பாசத்தால் மங்களம் நம்பச் சட்டாள். ''யாரோ வேண்டாதவர்கள் கட்டிவிட்ட கதை'' என்று புலம்பத் தொடங்கிவிடுவாள், என்று எண்ணியபடி உள்ளே திரும்பினாள்.

''என்ன ஒரு மாதிரி இருக்கே... உடம்புக்கு ஏதாச்சும்?'' கவலையோடு கேட்டாள் மாமியார்.

''ஒன்றுமில்லை. லேசான தலைவலி'' என்று மழுப்பி விட்டு சமையலறைக்குள் புகுந்து கொண்டாள் கலா.

அன்று முழுவதும் அவளுக்கு வேலையே ஓடவில்லை. மாலை ஐந்து மணியளவில் காரில் இருந்து இறங்கிய ரேவதியைக் கண்டு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

'பக்காத் திருடி! யார் அவன்? எத்தனை நாளா சிநேகிதம். எவ்வளவு நெருக்கமா இருக்கிறீங்கன்னு சொல்ல முடியுமா?'' படபடவென்று கேட்க வேண்டும் போலக் கொதித்துப் போனாள்.

ஆனால் முள்ளில் போட்ட சேலையை மெள்ளத் தானே எடுக்க வேண்டும்! தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டாள்.

இரவு தன் வீட்டு வேலைகளை சீக்கிரம் முடித்துக் கொண்டு பால் தம்ளருடன் தங்களது அறைக்குள் சென்றாள்

மாலை நாளேட்டை மேல்வாரியாகப் புரட்டிக் கொண்டிருந்த சரவணன், திரும்பினான்.

''ஒருநாள் பால் சாப்பிடாவிட்டால் என்னை நீ விடமாட்டியே?'' கொஞ்சலாகக் கேட்டபடி தம்ளருடன் அவளது கையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டான்.

அவனது பரிவை ரசிக்க முடியாது வேதனையுடன் கட்டிலில் ஓரத்தில் உட்கார்ந்தாள் கலா.

''என்ன ஒரு மாதிரி இருக்கே? என்ன நடந்தது?'' கேட்டபடி பாலை அருந்தி விட்டு தம்ளரை மூக்காலி மீது வைத்தான்.

''கொஞ்சம் நிதானத்தோடு கேட்டால் ஒரு முக்கிய சங்கதியைச் சொல்ல முடியும். கோபம் தாங்கமுடியா மல் கத்திக் கூச்சலிட்டு ரகளை செய்தால் பலன் இல்லை.

''சுற்றி வளைக்காமல் என்ன நடந்ததுன்னு சொல்லு.''

''உங்க தங்கையின் போக்கில் ஒழுங்கு இல்லைன்னு கேள்விப்பட்டேன்''

''யார் சொன்னது.'' கோபமாக நிமிர்ந்து உட் கார்ந்தான் சரவணன்.

மனைவி சொன்ன விவரத்தைக் கேட்டு அவன் முகம் செவேலென்று மாறியது.

''கூப்பிடு அவளைக் கேட்கிறேன். இப்பவே உண் மையைத் தெரிஞ்சுக்கறேன்.'' படுக்கையில் இருந்து குதித்து எழுந்து நின்றவன் கரங்களை கலா கெட்டி யாகப் பிடித்துக் கொண்டாள்.

''தண்ணால் காணாமல் கேட்டதை வைத்துக் கொண்டு விசாரணை செய்வது தப்பு. ஆத்திரப்படுவது அர்த்தமில்லை. மாமாவுக்கு ஏற்கனவே ரத்த அழுத்தம் தொந்திரவு செய்திட்டு இருக்கு. திடீர்னு இந்த செய் தியை கேட்டால் அவர் உடம்புக்கு ஏதாச்சும் வரலாம். நீங்கள்தான் நிதானமா செயல்படணும்.''

''வேறு யாருக்காவது தெரியுமா?'' சரவணன் கவலையுடன் கேட்டான்.

''எனக்கு தெரிஞ்ச ரகசியம் இது. இப்போ உங் களுக்கு தெரிஞ்சுட்டது. ரெண்டு பேருக்கு மேலே தெரிஞ்சா இது ரகசியமே இல்லை.''

இரவு வெகுநேரம் உறங்காது அவர்கள் இருவரும் ரேவதியின் நடவடிக்கையைப் பற்றியே பேசிக்கொண் டிருந்தனர். விடியும் தருவாயில் களைப்பு மிகுதியால் உறங்கிப் போனான் சரவணன்.

மறுநாள் பகல் உணவு நேரத்தின்போது ஒரு டாக்சி யில் சரவணன் வித்யா கல்லூரியின் வாயிற் பக்கம் சாலையில் சற்றுத் தூரத்தில் காத்திருந்தான்.

கொஞ்ச நேரத்தில் கல்லூரியின் வாசல் அருகே ஒரு இளைஞன் மோட்டார் சைக்கிளில் வந்து நிற்பதைக் கவனித்தபோது அவன் நெஞ்சு நெருப்பாகிறது. கண் களை அகல விரித்து ஊன்றிக் கவனித்தான்.

மனைவி சொன்னது உண்மையேதான். கல்லூரியின் சுற்றுச் சுவரைத் தாண்டிக் கொண்டு வெளியே வந்த ரேவதி மிக்கத் துணிவுடன் மோட்டார் சைக்கிளின் பின்பக்கத்தில் தொத்திக்கொள்ள வண்டியை வேக மாகக் கிளப்பிக்கொண்டு பறந்தான் அந்த வாலிபன்.

இப்படியா சங்கதி நடக்கிறது! பற்களைக் கடித்த சரவணன் அந்த வண்டியை உடனே பின்பற்றி அவர் களை வழி மறித்து, இறங்கச் செய்து, அந்த இடத் திலேயே இருவர் கழுத்தையும் முறித்துப் போட்டுவிட வேண்டுமென்ற ஆத்திரத்தில் ஓடிப் போனான்.

''இங்கேயே நிக்கணுமா?'' டாக்சி டிரைவர் கேட்ட தும் திடுக்கிட்டுப் போனான்.

''இல்லை அண்ணாசாலை பக்கம் திருப்புங்க'' என்றான்.

அவன் உடலும் உள்ளமும் ஒரு ஆவேசத்தில் பதறின.

8

அலுவலகத்திற்குத் திரும்பிய சரவணன், தந்தையின் அறைக்குள் விரைந்தான்.

நடந்ததைக் கேள்விப்பட்ட தில்லைநாதன் அதிர்ந்து போனார்.

அவருடைய அருமை மகளா அந்த அடாத காரியத்தை செய்கிறாள்? அவரால் நம்பமுடியவில்லை. ஆனால் நேரே பார்த்துவிட்டு பதைபதைப்போடு வந்து நிற்கும் மகனுடைய வார்த்தைகளை நம்பாமல் இருக்க இயலவில்லை.

''சரவணா எனக்குக் கோபம் சட்டுனு வராது. வந்தால் என்ன ஆகும்னு தெரியுமில்லையா?'' அப்பா அரற்றினார்.

''இந்தச் சிக்கலை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் சீர்படுத்தி விடுகிறேன். காதும் காதும் வச்சாப்பல இதை அமுக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் ''

''தெரியும் நாராயணனைப் போல தலையில் கையை வச்சுக்கொண்டு நான் குமுறி அழ வேண்டிய நிலை வந்து விடும். அவன் யார்னு தெரியுமா? கண்டு பிடிச்சு, அவன் முட்டியைப் பேத்துடணும். எத்தனை திமிர். யார்கிட்டே இந்த விளையாட்டு?'' சீறினார் தில்லைநாதன்.

'உங்கள் பெண்ணை அடக்கி வளர்க்கத் தெரியலை, என்கிட்டே ஏன் வந்து மூட்டிக்கிறீங்க'' என்று அவன் அசட்டையாக பேசக்கூடும். அதனாலே நாம் நம்ப விட்டுப் பெண்ணைத்தான் முதலில் கவனிக்கணும்'' என்றான் மகன்.

''என்னவோ சரவணா! முளையிலேயே இதைக் கிள்ளாவிடாவிட்டால் ரொம்பஆபத்தாகிவிடும். இதைக் கேட்டதுமே ரத்தம் கொதிக்கிறது. எசகுபிசகாகி

விட்டால் நான் அவமானம் தாங்காமல் செத்துப் போயிடுவேன்'' தழதழத்தார் தந்தை.

''அதோ போறானே, சரவணன். இவன் தங்கை சமாச்சாரம் தெரியுமா?'' என்று நாலு பேர் என் காது பட பேசினால், வெட்கத்திலே நான் வெந்து போயிடுவேன. அதனாலே, நான் உடனடியா, ஒரு முடிவு எடுத்து விட்டேன்.''

''சரவணா! நீ என்ன செய்தாலும் எதுக்குன்னு நான் கேட்க மாட்டேன், ஏன்னா, நீ குடும்பத்தின் தலையே கருதும் தலல பிள்ளை, உன்னை மகனாக அடைய நான் கொடுத்து வச்சிருக்கேன்.'' பேச முடியாது தினறினார் தில்லைநாதன்.

அலுவலகப் பையனை அழைத்துச் சூடாகக் காப்பி கொண்டு வரச் செய்து தந்தைக்கு உபசரித்தான் சரவணன்.

தில்லைநாதன் மிகவும் அரண்டு போயிருந்தார். மேசை இழுப்பறையைத் திறந்து சிறு பிளாஸ்டிக் டப்பாவில் இருந்து ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு காபியுடன் விழுங்கினார். அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பில் தலையை வலித்தது. நெஞ்சை என்னவோ அமுக்கியது. வயிற்றுக் குடலைகள் புரண்டு வேதனை செய்தன!

'என்னப்பா உடம்புக்கு ஏதாச்சும்?'' மகன் கவலையுடன் தந்தையின் தோளைக் குலுக்கினான்.

''மாத்திரை போட்டுக்காவிட்டால் மண்டை சுக்கலாகி விடும்போல இருந்தது. இப்ப நான் வீட்டுக்குப் போனால் என் மனம் இருக்கும் நிலையில் அந்தப் பாவிப் பெண்ணை உன் பாட்டனின் குண்டாந்தடியாலே தொறுத்துக் கொன்னுடுவேன சொல்லிருக்கு. சரவணா! எனக்குத் தாங்க முடியலையே!'' புலம்பினார் தில்லைநாதன்.

''உங்கிட்டே இதை மறைக்கக்கூடாது என்பதால் சொன்னேன், மேலே கவனிக்க வேண்டிய சங்கதியை

என்கிட்டே விட்டுவிட்டு நீங்க அமைதியா இருக்கணும். இது எனது வேண்டுகோள். அம்மாவிடம்கூட இதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லே..''

தலையை ஆட்டினார் தில்லைநாதன். அதற்குப் பின் கப்பெனிக் காரியங்துள் எதையும் அவரால் நவனிக்கவே முடியவில்லை.

அவர்கள் இருவரும் விட்டுக்குத் திரும்புவதற்குள் கல்லூரியில் இருந்து காரில் வந்து இறங்கியிருந்தாள் ரேவதி.

கதைப் புத்தகத்துடன் முன்னறையில் உட்கார்ந் திருந்த மகளைப் பார்க்கப் பிடிக்காது தில்லைநாதன் மாடிக்கு விரைந்துவிட்டார்.

பின்னாலேயே வந்த மனைவியிடம் எரிச்சலோடு பேசினார். ''தலையை வலிக்கிறது. அவ்வளவுதான் சாப்பாடு வேண்டாம். கொஞ்சம் மோர் அனுப்பிவை. தொண தொணக்காதே '' மனைவியிடம் உறுமினார்

மங்களம் கலங்கிப் போனாள். எத்தனை களைப் புடன் வீடு திரும்பினாலும். எத்தனை கவலைகள் இருந்தாலும் அவளிடம் அவர் இதுநாள் வரை கோபத் துடன் இரைந்ததே இல்லை! என்ன நடந்துவிட்டது? இவர் இப்படி இருக்கார்! வேதனையுடன் மெல்ல கீழே இறங்கிச் சென்றாள்.

காரை நிறுத்திவிட்டு உள்ளே வந்த சரவணன். குளியலறைக்கு விரைந்துவிட்டான். சில்லெனத் தண் ணீரைத் தலையில் ஊற்றிக் கொள்ளாவிடில் மண்டை வெடித்து விடும்போல உணர்வுகளின் இறுக்கத்தில் தவித்தான்.

மாற்றுடை அணிந்துகொண்டு பூஜையறைப் பக்கம் வந்தபோது கலா எதிரில் வந்து நின்றாள்.

''கண்ணாலேயே பார்த்துட்டேன். நீ சொன்னது உண்மை. சாப்பாட்டுக்குப் பிறகு அவள்கிட்டே பேச

லாம்னு நினைச்கிறேன்'' என்றபடி திருநீற்றை அள்ளி பூசிக்கொண்டான்.

அன்று ஒருவருக்கும் உணவு பிடிக்கவில்லை. கணவன் தலைவலியுடன் இருக்கும்போது நிதானித்து உணவை ரசித்துச் சாப்பிட மங்களத்தால் இயல வில்லை. முகுந்தனுடன் வெளியே சென்று வயிறுமுட்ட பூபன் சாப்பிட்டு விட்டு வந்திருந்த ரேவதி சாதத்தை விரல்களால் கிண்டிக் கொண்டிருந்தாள். ஒரு சின்னப் பெண்ணால் திடீரென்று எழுந்துள்ள பிரச்சினையை நினைத்து ஆத்திரத்தில் எண்ணங்கள் அலைமோத, சரவணனுக்கு உணவு வேப்பங்காயாக இருந்தது.

கையைக் கழுவிக்கொண்டு மாடிக்கு ஓட நினைத்த தங்கையை அண்ணன் அழைத்தான். 'உங்கிட்ட கொஞ்சம் பேசணும் முன்னறைக்கு வர்றியா? அம்மா! நீங்களும் இப்படி வாருங்கள் கலா நீயும் வந்து கலந் துக்கிறது நல்லது' படபடவென்று பேசினான்.

மங்களம் மலைப்புடன் மகளுடன் முன்னறையில் வந்து உட்கார்ந்து கொண்டாள். கலாவும் அவசரமாக உணவை முடித்துக்கொண்டு வந்து ஓர் ஓரமாக நின்று கொண்டாள்.

தோள் துண்டை உதறிப்போட்டுக் கொண்டு தொண்டையைச் செருமினான் சரவணன். ''அம்மா! நாளையிலிருந்து ரேவதி கல்லூரிக்குப் போகத் தேவை யில்லை. படிப்பை இத்தோடு நிறுத்திக் கொள்ளட்டும்.''

தாயும் மகளும் திடுக்கிட்டுப் போயினர் ''பரீட்சை நெருங்குகிற சமயத்தில் நான் ஏன் நிக்கணும்?'' சோபத்துடன் முனகினாள் ரேவதி.

''இது கடைசி வருடம். பட்டப் பரீட்சையாச்சே முடிக்க வேண்டாமா?'' தாய் குறுக்கிட்டாள்.

''ரேவதிக்கு எந்தப் பட்டமும் தேவையில்லை. படிச்ச வரை போதும். வீட்டிலேயே தங்கிக் குடும் பத்தை நிர்வகிக்கவும் நல்லாச் சமைக்கவும் கத்துக் கட்டும்''

''ஏன் இப்படித் திடீர்னு ஒரு உத்தரவு போடறே உங்கப்பா சம்மதிக்க வேண்டாமா.'' தாய் ஆதங்கத்துடன் கேட்டாள்.

''இது அப்பா போட்ட உத்தரவு. அவர் நாலா பக்கமும் ரேவதிக்கு ஏத்த மாப்பிள்ளையைத் தேட ஆரம்பிச்சிருக்கார். கல்யாணத்தைச் சீக்கிரம் முடிக்கணும்னு ஆசைப்படறார். சோறு பொங்கிப் போடக்கூடத் தெரியலைன்னு அவளோட புக்ககத்தார் பின்னாடி முணுமுணுக்கக்கூடாது. அதனாலே அவளுக்கு இப்பவே குடும்பப் பொறுப்பைப் பத்தி நல்லா பயிற்சி கொடுக்கணும்.''

''நம்ம பொண்ணை நாம பெரிய இடத்திலேதான் கொடுக்கப் போகிறோம். அங்கே சமையலுக்கு ஆள் படைகள் இருப்பாங்களே. கணவன் வீட்டுக்குப் போன பிறகு மெதுவா சமைக்கக் கத்துக் கொள்ளட்டும். இப்பவே அவளை அடுப்படியில் தள்ள வேண்டிய அவசியம் இல்லை' என்று சொன்ன தாயை உறுத்துப் பார்த்தான், மகன்.

''பெரிய இடத்துக்குப் போற பெண்ணுக்கு பட்டம் எதுக்கு? அதிகப் படிப்புதான் எதுக்கு? வேலைக்குப் போய் சம்பாதிக்கணும் என்கிற அவசியம் இருக்காதே ஆசைக்குப் படிக்க வச்சோம். இத்தோட போதும்னு அப்பா அபிப்ராயப் படறார். நாளையில் இருந்து கல்லூரிக்கு போக வேணாம் என்பது அவர் முடிவு. அதை அனுசரிக்க வேண்டியது நம்ப கடமை. அம்மா! நாளையிலிருந்து நீங்கள் ரேவதிக்கு பூஜை அறை வேலைகளை கொடுத்துடணும். கல்லா! உன் நாத்திக்கு லிட்டு வேலைகளைச் சரிவரச் சொல்லிக் கொடுக்கிறது உன் பொறுப்பு. ரேவதி. நீ கல்லூரி படிப்புக்கு மூட்டை கட்டிட்டு, நாளையில் இருந்து வீட்டோட தங்கணும். எங்கேயும் யார் துணையும் இல்லாமல் போகக்கூடாது'' கூறிவிட்டு எழுந்து அப்பால் சென்று விட்டான், சரவணன்.

கண்களில் பொங்கிய கண்ணீரை சமாளிக்க முடியாது தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு மகள் விசும்பினாள்

9

அதற்குப்பின்னர், அண்ணி கலா மிகவும் கவனமாக இருக்கத் தொடங்கினாள் தொலைபேசி கிணுகிணுத்த போதெல்லாம் ஓடிச்சென்று அவளே எடுத்தாள்.

''ரேவதி ஏன் கல்லூரிக்கு வரவில்லை'' ஆதங்கத்துடன் விசாரித்த தோழிகளுக்கு அவளே பதில் சொன்னாள். ''ரேவதி இனி வரமாட்டாள். அவளுக்குச் சீக்கிரம் கல்யாணம் நடக்க இருக்கு இன்னும் ஏதாவது தகவல் தேவையா?'' கலா அதட்டியதும் தோழிகள் போனை வைத்து விட்டனர்.

அப்பாவின் அந்தரங்க தொலைபேசியில் சில தடவை முருந்தன் அழைத்தான்.

ஒவ்வொரு முறையும் கலாதான் பதில் அளித்தாள். கரகரவென்ற ஒலித்த அந்தப் பழக்கமில்லாத ஆணின் குரலைக் கேட்டதுமே அவள் எச்சரிக்கை ஆகிவிட்டாள். ரேவதியுடன் நெருங்கிப் பழக முயன்ற அந்த அயோக்கிய இளைஞன் அவன்தான்!

''ரேவதியா! அவள் ரொம்ப வேலையா இருக்கா. நீங்க யாருன்னு சொன்னால்...''

''ரேவதிக்கு தெரிந்தவன்தான். அவளைக் கூப்பிடுங்கள்.''

பற்களைக் கடித்துக் கொண்டாள் கலா, அதிகாரம் செய்கிறான் தடியன்! ''ரேவதியிடம் என்ன பேச வேண்டும்?'' கலா கேட்டாள்.

''அவள்கிட்ட பேச வேண்டியதை உங்கள்கிட்ட சொல்ல முடியுமா?'' அவன் அட்டகாசமாகச் சிரித்தான்

''அப்படியா, இனி அவள் உங்களிட்ட பேசமாட்டாள். போனை வையுங்கள்!'' கோபத்துடன் கூறிவிட்டுத்

தொடர்பைத் துண்டித்தாள், கலா. அடுத்தமுறை அவன் முயன்றபோது, அவளுக்குக் கோபம் தாள முடியவில்லை. 'ஒரு தடவை சொன்னால் உங்களுக்குப் புரியாதா?' படார் என்று தொலைபேசியை அதிக சத்தத்துடன் வைத்தாள்.

பின்னர் எந்த வேளையில் அவன் தொலைபேசியில் அழைக்கக்கூடும் என்று ஓரளவு ஊகித்துக் கொண்டு அந்த சமயங்களில் போன் எத்தனை தடவை அலறினாலும் கவனிக்காது அசட்டை செய்தாள்.

ஒரு சில தினங்களில் முகுந்தன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதை நிறுத்தி விட்டான்.

அரைகுறையாக அண்ணி பேசுவதைக் கேட்க நேரும் போதெல்லாம் ரேவதி ஆத்திரத்தில்துடித்தாள். அழுகையில் குமுறினாள். இதென்ன அக்கிரமம்? கலா அண்ணி வீட்டின் சர்வாதிகாரியாகி விட்டாங்களே? இதிலிருந்து தப்பும் மார்க்கம்?

எல்லோரையும்போல லாவண்யா சட்டென்று அமைதி அடையவில்லை. ஒரு நாள் காலை, அவள் நேரே புறப்பட்டு வந்துவிட்டாள். வீட்டு அழைப்பு மணியை அழுத்தமாக ஒலிக்கவிட்டாள்.

'நான் போய்க் கவனிக்கிறேன். நீ சமையலறைக் காரியங்களை கவனி!'' உத்தரவிட்ட கலா தானே சென்று கதவைத் திறந்தாள். அவளுக்குப் பிடிக்காத அந்தப் பெண்ணைக் கண்டதுமே அவள் பார்வை கடுமையாகியது.

'ரேவதி கல்லூரிக்கு ஏன் வரலைன்னு நேரே கேட்டுட்டுப் போக வந்தேன்'' புன்னகைத்தாள் லாவண்யா.

''அவள் இனி வரமாட்டாள். அவளுக்குக் கல்யாணம் கூடிவிட்டிருக்கு.''

''அப்படியா? மகிழ்ச்சி. கொஞ்சம் நான் அவளோட பேச விரும்பறேன்.''

''ரேவதிக்கு இப்போ யாரோடும் பேச நேரம் இல்லை'' என்று முகத்தில் அடித்தாற்போல கதவை சாத்திக் கொண்டாள், கலா.

சற்று தூரத்திலிருந்து நின்று கவனித்த ரேவதிக்கு சோபமும் துக்கமும் தாங்க முடியவில்லை. பூஜை அறையில் இருந்து வெளிப்பட்ட தாயிடம் முறையிட்டாள்.

''அம்மா! என் சிநேகியை அண்ணி அவமானப் படுத்திட்டாங்க.'' அழுகையைக் கட்டுப்படுத்த முடியாது விசும்பினாள்.

மங்களம் பேசுமுன் மருமகள் குறுக்கிட்டாள் ''இதெல்லாம் என் மாமனாரின் கட்டளை. நான் அவர் பேச்சுக்கு கட்டுப்பட்டு செய்கிறேன்'' கடுமையாக அவள் குரல் ஒலித்தது.

இப்படிச் சதா ஒவ்வொன்றையும் கண்காணித்துக் கொண்டு முரண்டு பிடிக்கும் ஒரு இளம் பெண்ணை கட்டிக் காப்பது சுலபமான வேலையாகத் தெரியவில்லை. கலா சில நாட்களில் மிகவும் சோர்ந்து போனாள் தொலைபேசி அடித்தபோதெல்லாம் ஓடி, வாயிலில் வந்தவர்களுக்கு பதில் கொடுத்து, தபால்களை ஆராய்ந்து பார்த்து, அப்பப்பா! மிகவும் அலுத்துதான் போனாள்.

அன்று இரவு வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு தங்கள் அறைக்குள் நுழைந்தவளுக்கு சட்டென்று அந்த யோசனை தோன்றியது. ரேவதியைச் சீக்கிரமாக ஒரு இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால்? உறங்காது நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த கணவன் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

'நந்தசாமி மகன், கதிரேசனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை அல்லவா — அவனை நம் ரேவதிக்குப் பார்த்தால் என்ன?''

நந்தசாமி, அவர்களுக்குத் தூரத்து உறவினர். ஒரு சமயம் உறவினர் வீட்டுக் கல்யாணமொன்றில் சந்தித்த

போது கந்தசாமி மனைவி ரேவதியை தம் மருமகளாக்கிக் கொள்வதைப் பற்றி விருப்பம் தெரிவித்திருந்தாள்.

தில்லைநாதன் அதைப் பற்றி அவ்வளவாக யோசிக்கவில்லை அஸ்தஸ்தில் கந்தசாமி, அவர்களுக்குச் சமமானவர் இல்லை. மேலும் கதிரேசனுக்கு இளம்பிள்ளைவாதத்தினால் இடது கால் சற்று ஊனமாகிவிட்டது என்ற காரணங்களால் அசட்டையாக இருந்தார்.

ஆனால், இப்போது ரேவதியின் விபரீத நடத்தைக்கு முற்றுப்புள்ளி வைக்க அவளைச் சட்டென்று ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து விட வேண்டுமே?

''நடக்கும் போதுதான் அந்த ஊனம் சிறிது தெரிகிறது மற்றபடி பையன் பார்க்கக் கச்சிதமா இருக்கான். படித்தவன். அப்பாவின் வியாபாரத்தை நன்றாகக் கவனிக்கிறான். வீட்டுக்கு ஒரே பிள்ளை கந்தசாமி மளைளிக்கு ரேவதி மேலே ஒரு கண். அதனாலே இந்த இடத்தை நீங்கள் ஏன் முடிக்கக் கூடாது...'' கலா கணவனைத் தூண்டி விட்டாள்.

மறுநாள் அப்பாவுடன் சரவணன் பேசினான். அவர் அனுமதி கொடுத்ததும், அந்த வாரமே ஒரு நல்ல நாள் பார்த்து சரவணன் நேராக விசாரிக்கப் புறப்பட்டு விட்டான்.

காரை வெளியே நிறுத்தி விட்டுக் கந்தசாமியின் அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

அவர்களது அலுவலகத்தைப் போல் அது மிகவும் ஆடம்பரமானதல்ல கந்தசாமி அறைக்கு முன்னால் இருந்த பகுதியில் இரண்டு தட்டெழுத்தரும் ஒரு கணக்கரும் இருந்தனர். அலுவலகப் பையன் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்தான்.

''அய்யாவைப் பார்க்க வந்திருக்கீங்களா, உட்காருங்கள்'' என்று உபசரித்தான் பையன்.

சில நிமிடங்களில் உள்ளிருந்து அழைப்பு வந்தது.

''அட! தம்ப சரவணன். நேரே உள்ளே வந்திருக்கலாமே! எதுக்கு இந்த பந்தாக்கள். உட்காரப்பா. வீட்லே எல்லாரும் சுகந்தானே?'' முகமலர்ந்து அவர் வரவேற்ற பாணி மிகவும் உற்சாகப்படுத்தியது.

பையன் கொண்டுவந்து வைத்த காபியைப் பருகி விட்டு, தொண்டையைச் செருமிக் கொண்டான். தன் விருப்பத்தை தெரிவிக்க அவனுக்கு கொஞ்சம் கூச்சமாகத் தான் இருந்தது.

''ரேவதிக்கு இந்த வருடமே கல்யாணம் செய்துடலாம்னு அம்மா முடிவு செய்துட்டாங்க...''

''ரொம்ப மகிழ்ச்சி!'' முகம் மலர்ந்து பெரிதாகப் புன்னகைத்தார் கந்தசாமி.

''உறவு விட்டுப் போகக்கூடாதுன்னு தம்ப கதிரேசனுக்கே கொடுக்க அம்மா ஆசைப்படறாங்க''

கந்தசாமி முகத்திலே படர்ந்து நின்ற புன்னகை மாயமாகியது குரலின் மென்மை மறைந்து, கடுமையாகியது. ''அப்படி ஒரு ஆசை எங்களுக்கும் இருந்தது. ஆனால், இன்று நிலமை வேறாக இருக்கே...எப்படி இந்த சம்பந்தம் பேச முடியும்?'' காரமாகக் கேட்டார்.

திடுக்கிட்டுப் போனான் சரவணன். ''என்ன சொல்றீங்க?''

''வலுவிலே நீ வந்ததாலே இந்த கசப்பான உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கு...ரேவதியோடு ஒரு இளைஞனை நான் பல இடங்களில் கொஞ்ச நாளாப் பார்த்திருக்கிறேன். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்பறாங்க. அதனாலே தில்லைநாதன் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கலைன்னு நினைச்சேன்.''

''அப்படியெல்லாம் ஒண்ணும் தகவலையே?''

894.8113 LAK
CPL505408
27 OCT 1999

''அந்தப் பிள்ளையோட மோட்டார் சைக்கிள் பின்னால் ஏறிட்டு ரேவதி போறதை நான் பார்த்திருக்கேன். அவனைப் பத்திகூட விசாரித்தேன். முகுந்தன்னு பேர். நிரந்தரமா ஒரு இடத்திலும் வேலை பார்க்கிறதில்லையாம். மேலே பேசப் பிரியமில்லை...இனி என்ன செய்யறது. அவனுக்கே ரேவதியைக் கட்டி வைக்கிறதுதான் நியாயம்...''

''நம்ப பொண்ணு செய்த தவறை நாமதானே நிவர்த்தி செய்யணும்? உனக்கு இது தெரியாதுன்னு சொல்றதைக் கேட்டு வருத்தப்படறேன். அப்போ ரேவதி கள்ளத்தனமாக செய்கிற காரியம் இதுன்னு அர்த்தம். கொஞ்சம் கவனிச்சு ஆவன செய். சரவணா! என் பிள்ளைக்கு கால்தான் கொஞ்சம் ஊனம். அதுக்காக நடத்தையில் ஊனம் உள்ள ஒரு பெண்ணைக் கட்டிக்கணும்னு தலைவிதி இல்லை...''

அவமானமும் ஆத்திரமும் தாங்க முடியாது விடை பெற்றுக் கொண்டு வேகமாக வெளியே வந்தான் சரவணன். தானே வலுவில் சென்றதால் எத்தனை இளப்பமாகிவிட்டது?

கந்தசாமிக்குத் தெரிந்த சங்கதி. இன்னும் பலருக்குத் தெரிந்திருந்தால்—ஐயோ! அவர்கள் விட்டு மானம், கப்பலேறிவிடுமே! காரில் ஏறிக் கொண்டவன் மனம் புழுங்கி ஆத்திரத்தில் ஆவேசமாகி, எப்படித்தான் வீடு வந்து சேர்ந்தானோ அதிசயம்...

10

சரவணன் நினைத்தது சரி என்று நிரூபிப்பது போல இரண்டு தினங்களுக்குப் பின்னர் வியாபார சம்பந்தமாக அலுவலகத்திற்கு வந்த நண்பன் தினகரன்

மெல்ல ஆரம்பித்தான். ''சொல்ல மனம் சங்கடப்படுகிறது. சொல்லாமல் மறைத்து வைப்பது நண்பனுக்கு நான் இழைக்கும் துரோகமாகும்,'' பீடிகை பலமாகவே இருந்தது.

சரவணன் மவுனமாக நண்பனைப் பார்த்தான்.

''உன் சகோதரி ரேவதியை நான் சில நாட்களுக்கு முன் முகுந்தன் என்பவனுடன் சவுமினி ஒட்டலில் பார்த்தேன். என்னை உன் சகோதரி கவனிக்கவில்லை. முகுந்தனுக்கு என்னைத் தெரியாது. இரண்டு பேரும் பூரி சாப்பிட்டுக் கொண்டிருந்தாங்க.''

சரவணனுக்கு நெஞ்சில் படபடப்பும் மூச்சுத் திணறலும் ஏற்பட்டன.

தினகரன், அவர்களுக்குச் சமமான அந்தஸ்த்தில் வாழ்கிறவன். அவர்கள் குடும்பத்து கவுரவம் அப்போது அவன் கணிப்பில் தாழ்ந்து விட்டதே? பாவிப் பெண் அவர்களை நாசமாக்கவே பிறந்திருக்கிறாளோ?

உதட்டைக் கடித்துக் கொண்டான். ''அப்படியா?'' மெல்லிய குரலில் முனங்கினான்.

''இந்தக் காலத்தில் காதலிக்கக் கல்யாணம் செய்து கொள்வது அதிசயமான சங்கதியில்லை. ஆனால் நமக்குத் தகுந்த இடமாக அமையாவிட்டால் சங்கடம் இல்லையா? அந்தப் பையன் முகுந்தன் நடத்தையில் ரொம்ப மட்டமானவன். வேலை வெட்டி இல்லாமல் ஊர் சுத்தறவன். அவன் விதவைத் தாய் கிராமத்திலே தனியா தவிச்சிட்டு இருக்காங்க. வேலை பார்க்கிறதா சொல்லிவிட்டு இவன் பட்டணத்திலே தனியா ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து கண்டபடி வாழ்கிறதாகக் கேள்வி. இது மாதிரிப் பையன்கள் ரொம்பப் பொல்லாதவர்களாக இருப்பாங்க, சரவணா! நீ இது

சம்பந்தமாக கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கணும்'' ''சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சரவணன் அவமானத்தில் குன்றிப் போனான். அன்று கந்தசாமி முகத்திலடித்தாற் போலச் சொல்லி விட்டார். இன்று நண்பன் தாருக்காகக் குத்திவிட்டுப் போகிறான். இன்னும் சில நாளில் ஊர் முழுவதும் தீயாகப் பரவி, ரேவதியின் கல்யாணம் ஒரு பெரும் பிரச்சினையாகிவிடப் போகிறது. என்ன செய்வது? சோபத்திலும் துயரத்திலும் குமைந்தான்.

சங்கதியைக் கேள்விப்பட்ட கலா அயர்ந்துபோய் விடவில்லை. ரேவதியைப் பற்றிய அபவாதம் காது, மூக்குடன் அசுர வடிவெடுக்கு முன் அவளுக்கு ஒரு வரனைத் தேடி திருமணத்தை முடித்துவிட வேண்டு மென்று பரபரத்தாள். அவளுக்குத் தெரிந்த தூரத்து உறவினர்களைப் பற்றிச் சிந்தித்து ஆராய்ந்தபோது திடீரென்று செந்தாமரை அவள் நினைவில் நின்றாள்.

கலாவுக்கு ஒரு வழியில் செந்தாமரை பெரியம்மா. அவள் மகன் சிவகுரு அவளுக்குத் தம்பி முறை. சென்னையிலேதான் அவர்கள் வசித்தார்கள் என்ற போதிலும் அதிக நெருக்கம் இருக்கவில்லை. ஓர் ஆண்டுக்கு முன்னர் ஒரு உறவினரின் மணி விழாவில் எல்லோரும் சந்திக்க நேரிட்டது.

''நலந்தானே!'' என்று செந்தாமரை புன்முறுவலுடன் அவளை விசாரித்தாள் அப்பொழுதுதான் முதன் முதலாக அவள் சிவகுருவைப் பார்த்தாள். எம்.பி.ஏ. படித்துவிட்டு ஒரு பிரபல நிறுவனத்தில் வேலை பார்ப்பதாகத் தெரிந்தது.

கச்சிதமான உடல்வாகு. மாநிறம். களையான முகம்...பரவாயில்லை இந்தப் பையனை நம் ஒன்று விட்ட அத்தை காமாட்சி மகளுக்குப் பார்க்கலாமே! அத்தைக்கு ஒரு கடிதம் போட வேண்டும் என்று அப்போது நினைத்துக் கொண்டாள் சாப்பாட்டின்போது

செந்தாமரை அவளுக்குப் பக்கத்து இலையில் உட்கார்ந்து, உற்சாகத்துடன் கேட்டது கலாவுக்குச் சுவைக்கவில்லை.

'உன் நாத்தனார் ரேவதியின் படிப்பு முடிந்து விட்டதா?''

''படிக்கிறாள்.'' சுருக்கமாகப் பதிலளித்த கலாவுக்கு மேலே பேச்சைத் தொடரப் பிடிக்கவில்லை.

கைத்தறி நூல் சேலையும், வெள்ளை ரவிக்கையும், சிவப்புக் கல் தோடுமாகக் காணப்பட்ட செந்தாமரையின் அத்தஸ்தை எடைபோட்டுக் கொண்டு, தாடை இறுக மவுனமாகி விட்டாள்

''சிவகுரு எதேச்சையா ரேவதியைக் கடைத் தெருவிலே பார்த்தானாம். அட! எவ்வளவு உயரமா வளர்ந்திருக்கான்னு அதிசயப்பட்டான். பெண் வளர்த்தியோ, பிரக்கை வளர்த்தியோன்னு சொல்லுவாங்க. நீ முன்னே பார்த்த பாவாடை தாவணி பள்ளிக்கூடப் பெண் இல்லே ரேவதி! இப்போ கல்லூரிக்குப் போகிற பெண் 'னு நான் வேடிக்கையாப் பேசினேன். செந்தாமரை தொடர்ந்து பேசிக்கொண்டு போனாள்

கலாவுக்கு மேலே கேட்கப் பிடிக்கவில்லை. இடம் கொடுத்தால் செந்தாமரை ஜாதகத்தைக் கேட்க ஆரம்பித்து விடலாம் என்ற கிலியில், சட்டென்று பேச்சை திசை திருப்பினாள். உணவுக்குப் பின் அதிகம் அங்கே தாமதிக்காது வெற்றிலை பாக்குப் பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டாள். அது ஓர் ஆண்டுக்கு முன் நடந்த சங்கதி. இப்போது நிலைமை தலைகீழாக மாறி விருந்தது. கணவன், கந்தசாமியைத் தேடிக்கொண்டு போனது போல அவளும் செந்தாமரையைத் தேடிக் கொண்டு போக வேண்டும். பெரியம்மா இப்போது தானாக நடந்து கொள்ளலாம். அவள் மகனது வேலை உயர்ந்து பொருளாதாரம் விரிவாகி இப்போது அவள் இகவும் வசதியாக வாழ்வதாகக் கேள்விப்பட்டிருந்தாள்.

வசதிகள் வந்ததும், வாயும் நீண்டு விடுகிறதே? இருந்தாலும் முயற்சி செய்வதில் தவறு இல்லை. அவன் வேலை செய்த நிறுவனத்தின் தொலைபேசி எண்ணைத் தேடி எடுத்துத் தொடர்பு கொண்டாள்.

"யாரது, அக்கா கலாவா? ஆமாம், நாம எல்லாம் சந்தித்து நாளாச்சு. அம்மாவைப் பார்க்கணுமா? இப்போ நாங்க புது வீட்டிலே குடியேறியிருக்கோம். முகவரியைத் தருகிறேன், எழுதிக் கொள்ளுங்க." மிகவும் அன்புடன் கனிவாகப் பேசினான் சிவகுரு.

மாதங்கி காலனி, மூன்றாவது என் வீட்டின் வாசலில் நின்று அழைப்பு மணியை அழுத்தினாள் கலா.

'கலாவா? அதிசயமா இருக்கே, வாம்மா..." முகம் முழுவதும் சிரிப்பில் மலர வரவேற்றாள் செந்தாமரை.

"என்னம்மா பார்க்கிறே. வீடு சின்னதுதான். ரெண்டு படுக்கையறைதான் இருக்கு. வாடகை, கம்பெனி தருகிறது. உன் தம்பிக்கு இப்போ கார் கூடக் கம்பெனி கொடுத்திருக்கு." பெருமையாக பேசியபடி முன்னறையில் கிடந்த புத்தம்புது சோபாவில் உட்கார வைத்தாள்.

"வீடு சின்னதா இருந்தால் என்ன, மனசுதானே பெரிசா இருக்கணும், பெரியம்மா!" குழைந்தாள் கலா.

"இரு உனக்குச் சாப்பிட குளிர்பானம் கொண்டு வரேன்" என்று எழுந்தபோது ஆதரவாக அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டான் கலா.

"வேண்டாம் உங்களுக்குச் சிரமம் எதுக்கு? நானே எடுத்துச் சாப்பிடறேன். மருமகள் ஒருத்தி இருந்தால் உங்களுக்கு ரொம்ப ஆசுவா இருக்கும்... இல்லையா" சிரித்தபடி கலாதீனமாக எழுந்து குளிர்பெட்டியில் இருந்து ஆரஞ்சு ரசத்தைத் தம்ளரில் ஊற்றிக் கொண்டு குடித்தாள்.

"எல்லாத்துக்கும் வேளை வரவேண்டாமா அம்மா?" பெருமூச்செறிந்த செந்தாமரை நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள்.

'வேளை வந்துவிட்டது பெரியம்மா... அதனாலே தானே உங்களைப் பார்க்க ஓடி வந்திருக்கேன். நேத்து ராத்திரிதான் அத்தை பேச்சுவாக்கிலே சொன்னாங்க ரேவதியை நம்ப சிவகுருவுக்குக் கட்டிக் கொடுத்தால் என்னன்னு அபிப்ராயம் கேட்டாங்க நீங்க என் பக்கத்து உறவாச்சே, விடுவேனா... ரொம்ப நல்ல பையன் — நமக்குக் கொடுத்து வச்சிருந்தால் கிடைப்பான்னேன்... ஜாதகம் பொருந்தினால் எனக்கு மறுப்பு இல்லே...உன் மாமாவும் மறுப்பு சொல்லமாட்டார் என்றாங்க எப்போ விடியும்னு காத்திருந்து உங்கிட்டே ஓடிவரேன் பெரியம்மா என் தம்பி ஜாதகம் உங்கிட்ட இருந்தால் கொடுங்க" படபடவென்று கலா பேசினாள்.

பிரமித்துப் போனாள் செந்தாமரை. உண்மையாகவா சொல்கிறாள். திலைநாதன் விட்டுச் சம்பந்தம் அவர்களுக்குக் கிட்டினால்... அதைவிடப் பெரிய பாக்கியம் உண்டா?

"இரும்மா... எடுத்துட்டு வரேன். என்னைப் பொருத்தவரை நான் ஜாதகப் பொருத்தம் — அது இதுன்னு அலைகிறவள் இல்லை. மனசு பொருந்திட்டாப் போதும்."

"பெரியம்மா, இன்னிக்கே ஜாதகத்தைப் பார்த்து, பொருத்தம் சரியா இருந்தால் தகவல் அனுப்பறேன். நல்ல நாளாப் பார்த்து நீங்கள் பெண் பார்க்க சம்பிரதாயத்துக்காக வந்து விடுங்கள். என் தம்பியே எங்கிட்டு மருமகனாகிவிட்டால், அதைவிட மகிழ்ச்சியான சங்கதி வேறே எதுவும் கிடையாது" மிகவும் பகட்டாகப் பேசினாள்.

செந்தாமரை பரவசமாகிப் போனாள். "கலா! கபகாரியங்களை தள்ளிப் போடக்கூடாது. அதனாலே

நீ ஜாதகத்தைச் சீக்கிரம் பார்த்து தகவல் சொல் லுல்மா...'' உணர்ச்சி வசத்தில் வார்த்தைகளை தடு மாற இன்பப்பெருமூச்செறிந்தாள்.

''உங்களை விட இது எனக்கு மிக அவசரமான சங்கதி.'' மனத்திற்குள் எண்ணி மகிழ்ந்த கலா உற்சாக மாக விடை பெற்றுக் கொண்டு ஜாதகத்துடன் புறப் பட்டாள். கந்தசாமியிடம் கணவன் தோற்றுவிட்டு வந்தான். அவள் செந்தாமரையிடம் வெற்றியோடல் லவா திரும்புகிறாள்.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட் டோம். மகிழ்ச்சியில் அவள் நெஞ்சம் திளைத்தது. பிரச்சினை இனிதான் ஆரம்பிக்கப் போகிறது என்பது மட்டும் அவளுக்குத் தெரிந்திருந்தால்...

11

அன்று காலை அலுவலக அறைக்குள் நுழைந்த தில்லைநாதன் நிம்மதியாக இருக்கையில் சாய்ந்து கொண்டார் சில நாளில் அவரது மனதில் ஏற்பட் டிருந்த துயரமும் கோபமும் அடங்கிச் சிறிது அமைதி ஏற்பட்டிருந்தது.

அந்த வெள்ளிக்கிழமை செந்தாமரை மகனுடன் வந்து பெண் பார்த்துவிட்டுப் போயிருந்தாள். உடனடி யாக நிச்சயதார்த்தத்திற்கும் நாள் குறிப்பிட்டு அழைப் பிதழ்களும் தயாராகியிருந்தன. ரேவதியின் காதல் விவ காரத்தின் கலவரம் மட்டும் இடைபுகுந்து குழப்பாவிடில் சிவகுருவை விட மிகவும் உயர்ந்த மதிப்புள்ள மாப்பிள் ளையை மகளுக்கு தேடியிருப்பார். அவர், நகரத்தில் உள்ள பெரிய திருமண மண்டபத்தில் நிச்சயத்தை மிகவும் அமர்க்களமாக நடத்தியிருப்பார். ஆனால் என்ன செய்வது! அவசரத்தை முன்னிட்டுக் காதும்

காது வைத்தாற்போல் ஆடம்பரம் இன்றி ஒரு சிலரை மட்டும் அழைத்து வீட்டோடு அந்த வைபவத்தை யத்துக் கொள்வது என்று முடிவாகியது ''போகட்டும் பெரிய ஆபத்திலிருந்து வர இருந்த மாபெரும் அவமானத்திலிருந்து தப்பினோமோ... அதுவே பெரிய காரியம்''

மாப்பிள்ளை சாதாரண இடத்துப் பையன். நம் நிறுவனத்தில் வேலை போட்டுக் கொடுத்து, அவன் மதிப்பை உயர்த்த வேணும். ஊரில் இதைப்பற்றி கிசு கிசுப்பு ஏற்படும். எல்லாவற்றையும் பணத்தால் அமுக்கி விட முடியும். சிவகுருவுக்குப் பெண்ணை நிரப்பப் பிடித்துவிட்டது அது போதும் என்று தமக்குள் எண்ணிப் புன்னகைத்துக் கொண்டார்.

அலுவலகப் பையன் கொண்டு வந்து வைத்த காப்பி யைப் பருகிக் கொண்டு, தம் பார்வைக்காக மேசை மீது வைக்கப்பட்டு இருந்த கோப்புகளை மெல்ல புரட்டினார்.

உள் இணைப்பில் வரவேற்புப் பெண் அழைத்தாள். ''உங்களைப் பார்க்க ஒர் இளைஞர் வந்திருக்கார். அவசர சங்கதியாம்...''

''பெயர் என்ன? சங்கதி என்னவாம்? முதலில் விசாரி'' அதட்டினார் தில்லைநாதன்,

''மிஸ்டர் முகுந்தனாம். உங்களை நேரில் பார்த்துப் பேசவேண்டுமாம். முக்கியமான செய்தியாம்''

இதயத் துடிப்பே நின்றுவிட்டது போன்ற அதிர்ச்சி அவர் நெஞ்சை உலுக்கியது. ஏ.சி.யை மீறி உடலில் வியர்வை கொப்பளித்தது. நரம்பு முறுக்கேறிய உணர்வு உடல் முழுதிலும் ஒரு தடுக்கம்.

''என்ன சொல்லட்டும்?'' மீண்டும் வரவேற்புப் பெண் கேட்டாள். தொண்டையைச் செருமிக் கொண் டார் தில்லைநாதன் ''சரவணனை நான் கூப்பிட்டதாக முதலில் வரச்சொல். பிறகு அவனை அனுப்பி வை.''

தன்னந்தனியாக அவரால் முகுந்தனைப் பார்த்துப் பேச இயலாதது போன்று ஒரு பயங்கரம் அவரை ஆட் கொண்டது.

உள்ளே உட்கார்ந்த மகனைக் கவலையுடன் பார்த் தார். தந்தை "அந்த முகுந்தன் என்கிறவன் நம்மைப் பார்க்க வந்திருக்கிறான். எதுக்காக இருக்கு?" அவரது குரல் தடைபட்டது.

அதற்குள் கதவை லேசாக தட்டிவிட்டு உள்ளே அவனே வந்து விட்டான். வெள்ளை சபாரி சூட்டில் வந்து நின்றவனை ஆங்காரமாகக் கவனித்தான் சரவ ணன். அவனது தொங்கு மீசையும் போலிப் புன்னகை யும் வெறுப்பை மூட்டின. "உட்கார்" என்று எதிரே கிடந்த நாற்காலியை சுட்டிக் காட்டிவிட்டு, மகனை அர்த்தபாவத்துடன் பார்த்தார். தில்லைநாதன்.

தாடை இறுக ஆத்திரத்துடன் அவன் பக்கம் திரும் பிய சரவணன், "காலை வேளை நாங்கள் கவனிக்க வேண்டிய காரியங்கள் பல இருக்கு வந்த விவகாரத்தை சுருக்கமாக சொல்ல முடியுமா!" அதட்டினான்.

"நான் குமாரி ரேவதியோட தந்தையிடம் பேசலாம் தென்" நிதானமாகச் சொன்னான். முகுந்தன்.

"நான் அவருடைய அண்ணன். அதனால்சொல்ல வந்ததை எங்கள் இருவர் முன்னாலும் தாராளமாகச் சொல்லலாம்." மிகவும் சிரமப்பட்டுப் பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டான்.

முகுந்தன் தன் சட்டைப் பைக்குள் கைவிட்டு நிச்ச தார்த்த அழைப்பு மடலை எடுத்து மேஜைமேல் வைத் தான்.

"இதைப் பார்த்துட்டு உங்களோட பேச தான் வந் திருக்கேன்" என்றான் அழுத்தமாக.

"இது என் தங்கையின் நிச்சய அழைப்பு மடல். இதைப் பற்றி நீ பேச என்ன இருக்கு?"

"இந்த நிச்சயதார்த்தம் நடக்க முடியாது நடக்க விட மாட்டேன். ஏன் என்றால் நானும் ரேவதியும் ஒருவரை ஒருவர் விரும்பிப் பழகினோம்."

"ஆனால் எங்கள் விருப்பம் வேறு. அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்?" கோபத்துடன் அதட்டினான் சரவணன். ஆனாலும் அவன் உள் மனதில் ஒரு கலவரம்.

"இந்த நிச்சயத்தையும், வரப் போகிற திருமண தையும் என்னால் நிறுத்த முடியும்."

"என்ன சொன்னே? இன்னொரு தடவை சொல்லு. உன் பற்களைத் தட்டிக் கொடுத்துடுவேன் அயோக் கியப் பயலே..." என்றபடி கையை ஓங்கிக் கொண்டு தில்லைநாதன் எழுந்துவிட்டார்.

இடையே புகுந்து சட்டென்று தந்தையின் கரத் தைப் பிடித்துக் கொண்டான், சரவணன். 'இவனை என்கிட்டே விடுங்கோ, அப்பா. நான் கவனிக்கிறேன்" என்று அவரைச் சமாதானப்படுத்தி இருக்கையில் அமரச் செய்தான்.

"பயமுறுத்தவா வந்திருக்கே? முதல்லே வெளியே போ! இல்லாட்டி அடிபட்டு செத்துப் போவே..." இரைந்து கத்தினான் சரவணன்.

"கத்திட்டா நான் பயந்து விடுவேனா? உங்கள் ஆபீசிலே இருக்கிற அத்தனை பேரையும் கூப்பிட்டு என்னை அடிக்கச் சொல்லுங்க. அதுக்கு முன்னாடி உங்கள் தங்கச்சி எனக்கு எழுதினகடிதங்களை அவங்க முன்னாடி போடறேன் மாதிரிக்கு ரெண்டு கொண்டு வந்திருக்கேன். நீங்களும் பார்க்கலாம். வீட்டிலே இதைப் போல ஒரு கத்தை வச்சிருக்கேன். இவை

எங்களுக்குள் ஏற்பட்ட காதலின் ஆதாரம். புரிஞ்சுக்கோங்கோ.'' சிரித்தான் முகுந்தன்.

இரத்தம் கொதித்து மண்டைக்குள் தாவும் வேதனையில் துடித்துப் போனார், தில்லைநாதன். ''என் பெண்ணை வெட்டிப் புதைப்பேனே ஒழிய ஒருக்காலும் உனக்குக் கட்டித் தரமாட்டேன். நீ வெளியே போ'' என்று கத்திக்கொண்டு மீண்டும் கையை ஓங்கிக் கொண்டு எழுந்தார்.

'வேண்டாம் ரேவதியை மணந்து கொள்ள எனக்கு இப்போ விருப்பம் இல்லை. உங்கள் மகளுக்கு இந்தக் கல்யாணத்தில் நீங்கள் கொடுக்க இருக்கும் சீதனம் நாலு இலட்சத்துக்கு இருக்குமா? அந்தப் பணத்தை எனக்கு தந்திருங்க. இந்தக் கடிதக் கட்டை அப்படியே உங்கள்கிட்டே சேர்த்துடறேன். எனக்கு இப்போ வேண்டியது உங்கள் பெண் இல்லை...பணம்...'' மீண்டும் சிரித்தான் முகுந்தன்.

யாரோ நெருப்பை வாரி முகத்தில் கொட்டிவிட்டது போன்ற வேதனையில் துடித்துப் போனார் தில்லைநாதன். அவர் பெற்ற மகள் இப்படி ஒரு சங்கடத்திலா அவரை மாட்டிவிடுவாள்? பாவிப் பெண். என்ன வேலை செய்து விட்டாள். உதட்டைக் கடித்துக் கொண்டார்.

முகுந்தன், அயோக்கியன் மட்டுமல்ல; அபாயமானவன் என்று நண்பன் எச்சரித்தது சரியாகிவிட்டதே. சரவணன் வேதனைப்பட்டான். ஆத்திரத்தில் துடித்தான். பற்களைக் கடித்துக் கொண்டான்.

மகனை வேதனையுடன் பார்த்துவிட்டு, தலைமேல் கைகளை வைத்துக்கொண்டு குனிந்து கொண்டார் தந்தை. அவரது இமைகளைக் கண்ணீர் சுட்டது.

''உடனடியாக அத்தனை தொகை கிடைக்காதே. என்ன செய்ய?'' எரிச்சல்பட்டாள் சரவணன்.

''பெரிய வியாபாரி, இந்த தொகையை புரட்ட முடியவில்லை என்கிறீர்களே, வேடிக்கைதான். சரி, எப்பொழுது தரமுடியும்? இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். காலம் கடத்தினால் நான் தொலைபேசி மூலம் வீட்டுக்குப் போன் செய்து தொல்லை கொடுக்க முடியும். ஞாபகம் இருக்கட்டும். நிச்சயத்திற்கு முன் பணம் என் கைக்கு வந்துடணும்'' என்று கூறிவிட்டு வெற்றிப் புன்னகையுடன், முகுந்தன் வெளியேறினான்.

''சரவணா! உடம்பை என்னவோ செய்கிறது... கிட்ட வா...ஆ! மூச்சுவிட முடியலையே...'' என்று தினறிய தில்லைநாதன் அடுத்த கணம் மயக்கமாகி இருக்கை மீது துவண்டு சரிந்து விழுந்தார்!

12

தில்லைநாதன் படுக்கை மீது வெட்டிச் சாய்ந்த மரமாகக் கிடந்தார். தொழிற்சாலையும் அலுவலகமும் செயல்படாது நின்றுவிட்டன போன்று சரவணனுக்குத் தகைப்பு குடும்ப வைத்தியர், இதய நோய் நிபுணரை அழைத்து வந்து பரிசோதிக்கச் செய்திருந்தார்.

''மன அதிர்ச்சியால் இரத்த அழுத்தம் அதிகமாகிருக்கிறது. நல்லவேளை மாரடைப்போ, மூளையில் இரத்தக் கசிவோ ஏற்படவில்லை. சில நாட்கள் ஓய்வாகப் படுத்திருந்து மருந்துகள் சாப்பிட்டால் குணமாகி விடுவார்'' என்று தெம்பு கொடுத்தார் இதயநோய் நிபுணர்.

சரவணனுக்குச் சிறிதுமனச் சமாதானம் ஏற்பட்ட போதிலும், உள்ளத்தைக் கவலைகள் தொறுக்கிக் கொண்டிருந்தன.

அடுத்த நாள் காலையிலேயே, முகுந்தன் அலுவலகத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பணத்தைப்

பற்றி துளைக்க ஆரம்பித்து விட்டான். இலட்சக் கணக்கில் பணம் புரண்டு கொண்டிருந்த வியாபாரம் தான்.

ஆனாலும் அப்பாவின் உதவியின்றி சட்டென முருந்தன் கேட்கும் தொகையைத் திரட்ட சாத்தியப்பட வில்லை. மேலும் வரவிருந்த நிச்சயம், கல்யாணம் முதலியவைகளுக்கு நிறையப்பணம் தேவைப்படுமே என்ற கவலை அவளை அரித்துக் கொண்டிருந்தது.

சங்கதியைக் கேள்விப்பட்ட செந்தாமரை, மறுநாள் காலையிலேயே மகனுடன் வருங்கால சம்பந்தியைப் பார்க்க வந்து இருந்தார்.

ரேவதி மாடியைவிட்டுக் கீழே இறங்கி வராது தன் அறைக்குள்ளேயே பதுங்கிக் கிடந்தாள்.

மங்களம் மரியாதைக்காக அவர்களை வரவேற்று உபசரித்துவிட்டு மவுனமானாள்.

செந்தாமரை மிகவும் குழம்பியிருந்தாள். நிச்சய தார்த்தத்துக்கு தேதி வைத்து அழைப்பிதழ்களை அனுப்பிவிட்ட நிலையில் சம்பந்தி படுத்துவிட்டாரே, என்று பலவும் எண்ணி அவள் கலங்கினாள். தாகத் துக்குக் கொஞ்சம் தண்ணீர் சாப்பிட உள்ளே எழுந்து போனவள் போல போகருக் காட்டிவிட்டு சமையல் அறைப் பக்கம் வந்து நின்றாள். மாமனாரைப் பார்க்க வந்தவர்களுக்கு அவசரமாகக் காப்பி கலக்கிக் கொண் டிருந்த கலாவிடம் வந்து மெல்லிய குரலில் கேட்டாள்.

"எங்கள் வீட்டுச் சம்பந்தத்தை நீ தேடி வந்தி வேளை சரியில்லையோ என்னவோ! அம்மா கலா! எனக்கு மனம் ரொம்ப வேதனைப்படுகிறது சம்பந்திக்கு உடம்பு சரியில்லை என்று, நிச்சயத்தை நிறுத்தி விட்டால் எங்களுக்கு ரொம்ப அவமானமாகி விடும். சிவகுரு மனம் வேதனைப் படுவான். வெட்கப் படுவான்." கண் கலங்க தினறினாள், செந்தாமரை.

"பெரியம்மா! என் மாமனாருக்கோ என் கணவ ருக்கோ இது மாதிரியான குறுகிய நோக்கம் எதுவுமே கிடையாது ஏற்கெனவே என் மாமனாருக்கு இரத்த அழுத்த நோய் உண்டு. அது அதிகப்படியான அலுவலக காரியங்களில் அதிகமாகிவிட்டது. அடாது மழை பெய் தாலும், இடி இடித்தாலும், புயல் வீசினாலும் நிச்சயம் குறித்த காலத்தில் நடந்தேறும் சந்தேகமில்லை. ஆனால்?"

"ஆனால் என்ன கலா? முழுவதையும் சொல்லேன்"

"உங்கள் மனதில் கலவரம் ஏற்பட்டு நீங்களா விலகிக் கொண்டு நிச்சயத்தை முறித்துக் கொண்டால் தான் எல்லாம் நின்று போகும்." முறுவலித்தாள் கலா.

"எங்களுக்குப் பைத்தியமா என்ன? சிவகுருவுக்குப் பெண்ணை ரொம்பப் பிடிச்சுப் போயிடுச்சு. எங்களுக்கு இந்த இடம் கிடைக்குமா?" என்ன சொல்றே?"

"பொறாமைக்காரங்க நடுவில் புகுந்து கலாட்டா செய்யலாம் இல்லையா?"

"எங்களைப் பத்தி பொறாமைப்படறவங்க யாரும் கிடையாது இருந்தாலும் நான் இடம் கொடுப்பேனா?"

செந்தாமரை சிறிது நேரம் தங்கிவிட்டுக் கிளம்பி னாள். சிவகுருவின் கண்கள் ரேவதியைத் தேடியதை புரிந்து கொண்ட கலா "அப்பாவுக்கு உடம்பு சரி யில்லை என்றதும் ரேவதி ஒரேயடியாப் பயந்து போய் விட்டாள் தன் அறையைவிட்டு வரக்கூட தயக்கம். நிச்சயத்தன்னிக்கு நிறைய பார்த்துக்கலாம் தம்பி.", வேடிக்கையாக சொல்லி விட்டு சிரித்தாள்.

சிவகுருவின் முகம் சூடாகியது. கூச்சத்துடன் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டான்-

அவர்கள் அப்பால் சென்றதும் பின்கட்டிற்குள் புகுந்த மருமகளைப் பின்தொடர்ந்தார் மங்களம்.

''எனக்கு மனசு நல்லாவேயில்லை. இந்த வரன் நமக்குத்தேவையா? சிவகுரு மாப்பிள்ளையா வருவதற்கு முன்பே உன் மாமனார் படுத்துட்டாரே!'' மனத்தாங்கலுடன் தாழ்ந்த குரலில் முணுமுணுத்தாள்.

''சிவகுரு நம்ப வீட்டு மாப்பிள்ளையா வராவிட்டால் என்ன நடக்கும்னு உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கேனே. அத்தை! யாருடைய ராசியும் நம்மைப் பாதிக்காது. ஆனால் இந்தக் கல்யாணம் நடக்காவிட்டால் நம்ப கௌரவம் ரொம்ப பாதிக்கப்படும் எல்லா சங்கதிகளையும் எங்கிட்ட விட்டுட்டு நீங்கள் மாமாவைகவனிச்சுக்கோங்க போதும்'' என்றாள்.

மங்களம், தான் மேலே சொல்ல வந்ததை விழுங்கிக் கொண்டாள். சதா கண்ணீர் உகுத்து, குலுங்கி அழும் மகளுக்கு அவளால் எந்தவகையிலும் உதவ முடியவில்லை. வீட்டு நிர்வாகம் அனைத்தும் கலாவின் இரும்புப்பிடியிலே அகப்பட்டுக் கொண்டிருந்தது. கணவனோ, மகனோ யாரும் இவரது வார்த்தைகளை காதில் போட்டுக் கொள்ளவில்லை. தளியாக அவள் கத்தி என்ன பயன்? விரக்தியுடன் அவள் திரும்பி உள்ளே சென்று விட்டாள்.

சரவணன் வீடு திரும்பியபோது மிகவும் கவலையுடன் காணப்பட்டான். ''நாளைக்கு நாலு இலட்சம் பணத்துடன் நான் தயாராக இல்லாவிட்டால் அவமானம் ஏற்படும்னு முருத்தன் என்னை தொலைபேசியில் பயமுறுத்தியிருக்கான். பணத்தை புரட்ட உனது நகைகள் சிலவற்றை தந்து உதவ முடியுமா?'' மனைவியிடம் மெல்லக் கேட்டான்.

''உங்கள் வியாபாரத்தில் தொடிப்பு ஏதாகிலும் ஏற்பட்டால், என் நகைகள் பூராவையும் வித்துதந்து உதவுவேன். அது என் கடமை. ஆனால், இது மாதிரி போக்கிரிகளுக்குப் பொங்கல் வைக்க நான் ஒரு

தாசியை கூட ர முடியாது'' நாளைக்கு அவன் மறுபடி போனில் தொந்திரவு கொடுத்தால் மாலை நேரம் நம் வீட்டுக்கே போன் செய்யச் சொல்லுங்கள், நான் பாத்துக்கிறேன்'' என்று அடித்துக் கூறிவிட்டாள் கலா.

அன்று மாலை கணவனது உடல்நலம் தேற கடவுளை பிரார்த்தித்துக் கொள்ள கோவிலுக்குப் போயிருந்தாள் மங்களம்.

முருந்தனிடம் இருந்து தொலைபேசி வரும் என எதிர் பார்த்த கலா ரேவதியைக் கீழ் அறையில் படுத்திருந்த தந்தையைக் கவனித்துக் கொள்ள அனுப்பி விட்டாள்.

சரவணன் வீட்டிற்குத் திரும்பிய கொஞ்ச நேரத்திற் கெல்லாம் மாடி அறையில் இருந்த தில்லைநாதனின் தனித் தொலைபேசி கிணுகிணுத்தது. கணவனுக்குச் சைகை செய்து அமர்த்தி விட்டுக் கலா எடுத்தாள்.

''திரு. சரவணன் அவர்களைப் போனில் கூப்பிட முடியுமா?'' என்ற மிகவும் மிடுக்கான குரல் முருந்தனுடையதுதான் என உடனேயே ஊகித்துக் கொண்டு விட்டாள்.

''நீங்கள் யார்னு சொன்னால் கூப்பிட முடியும்'' பதிலும் அதே அளவு காரமாக இருந்தது.

''ஓ! நீங்கள் சரவணன் அவர்களின் மனைவியா? எல்லாம் உங்களுக்கும் தெரிந்த கதைதான். ரேவதியின் காதலன் பேசுகிறேன். இப்போ புரிகிறதல்லவா? மறுபக்கத்தில் சிரித்த குரல் அவளது ஆத்திரத்தைக் கிளப்பியது.

அவள் முருந்தனைப் பற்றி கணவன் மூலம்தான் தெரிந்து கொண்டிருந்தாள். கண்களால் பார்க்கா விடினும் குரலைக் கேட்டதுமே உடல் முழுவதும் பதறியது. மனம் குமுறியது.

''பணம் தயாரா இருக்கா? கொஞ்சம் கேட்டுச் சொல்ல முடியுமா?'' கேலியாகச் சிரித்தான் முகுந்தன்.

''அவரைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே நாங்கள் முடிவு செய்தாகி விட்டது பணம் ஏதும் தருவதாக இல்லை. தொடர்ந்து தொலைபேசியில் தொந்திரவு செய்வதில் லாபம் ஏதும் இல்லை.'' கண்டிப்பாகப் பேசினாள் கலா.

''அப்படின்னா?'' அதட்டினாள் முகுந்தன்.

''அப்படின்னா நீங்க செய்ய உத்தேசித்த காரியத்தை தாராளமா செய்யலாம்னு அர்த்தம்.'' ஏளனமாகச் சொல்லிவிட்டு போனை டக்கென்று வைத்து விட்டாள்.

''ரொம்ப கடுமையா பேசி விட்டாயே கலா...'' கலவரத்துடன் வினவினான் சரவணன்.

''இவன் பேச்சைக் கேட்கும் குறுகிய மனம் சிவருக்கு இருந்தால் நடக்கவிருக்கும் நிச்சயம் நின்று போகும். அப்படிப்பட்ட மாப்பிள்ளைக்கு நம் வீட்டுப் பெண்ணைக் கட்டிக் கொடுப்பதில் பயன் இல்லை. செந்தாமரை பெரியம்மாவிடம் எனக்கு நம்பிக்கை இருக்கு ''

''நிச்சயம் நின்று போய், என் தங்கைக்குக் கல்யாணமும் நடக்காமல் போய் விட்டால்?''

''இத்தனை பெரிய வியாபாரத்தை அப்பா கூடத் திறமையா நடத்திட்டு வருகிறீங்க. அதில் இருக்கும் துணிச்சல், வீட்டு சங்கதிகளில் துளியும் இல்லையே! வெய்யிலில் வாடிப் போன கீரைத் தண்டு போல மனசு உங்களுக்கு. ரொம்ப சுணங்கப்போகுதே...கோழையாக இருப்பது தவறு. இந்த மாதிரி பயமுறுத்தல் பேர்வழிகளுக்குத் துளியும் அசைந்து தரக்கூடாது. மேலும் மேலும் பயமுறுத்தியே பணம் கறக்கப் பார்ப்பார்கள். துணிவா எதிர்த்து நிக்கணும். உங்களுக்குவரும் துன்பம், அவமானம் இரண்டிலும் எனக்குச் சமபங்கு உண்டு, மறக்காதீங்க'' என்று கூறிவிட்டு, அன்புடன் அவன் தோளைத் தட்டி ஆறுதல் சொன்னாள்.

அதே சமயம் கோவிலில் இருந்து வந்த தாயிடம் நோயாளியைக் கவனிக்கும் பொறுப்பைத் தந்து விட்டு மாடிக்கு வந்தாள் ரேவதி.

மாமனார் நோயாகக் கீழ் அறையில் படுத்துக் கிடக்கும்போது இந்த அண்ணி, கணவனுடன்கொஞ்சிக் கொண்டு உல்லாசமாக இருக்கிறாளே — வெட்கம் இல்லை என்று சீற்றத்துடன் தன் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

13

மறுநாள் மாலை, கோவில் பிரகாரத்தை மூப்பது தடவை வலம் வருவதற்குள் மங்களத்திற்கு மூச்சு வாங்கியது. கணவன் குணமடைய அவள் கோவிலை ஆயிரத்து ஒருமுறை வலம் வருவதாக வேண்டிக் கொண்டு அதைத் தவணை முறையில் செய்ய முற்பட்டிருந்தாள். அதனால் அவள் தினசரி கோவிலுக்கு வந்து கொண்டிருந்தாள்.

வீட்டு வாசலைத் தாண்டினால் காரில் பயணம் என்ற சுக வாழ்க்கை அதனால், அவளால் மேலே பிரகாரத்தைச் சுற்ற முடியவில்லை. அர்ச்சனையை முடித்துக்கொண்டு மெள்ள வந்தாள். தன் பின்னால் யாரோ வேகமாக வருவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். அவள் வெளியே எங்கு போனாலும் தானுண்டு தன் வேலையுண்டு என்று அடக்கமாக இருக்கும் பழக்கம் உள்ளவள். தெரிந்தவர்களைச் சந்தித்தால் கூட இரண்டு வார்த்தைகளில் நலன் விசாரிப்பை முடித்துக் கொண்டு நகர்ந்து விடுவாள்.

''அம்மா, உங்களிட்ட ஒரு வார்த்தை பேசணும்'' குரல் கொடுத்த வாலிபனை வியப்புடன் பார்த்தாள்.

''இப்படி ஒதுக்குப்புறமா நில்லுங்க. உங்ககிட்ட முக்கியமான சங்கதி பேசணும்'' என்றான் அவன்.

அவர்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களில் ஒருவனோ? மதில் சுவர் ஓரமாக நகர்ந்து நின்றாள்.

''உங்கள் மகளைப் பற்றிய சங்கதி. பதட்டப்படாமல் கேட்கணும்'' மெல்லச் சிரித்தான் அவன்.

உடல் முழுவதும் சில்லிட்டுப் போன உணர்வில் திகைத்துப் போனாள் மங்களம்.

''ரேவதி என்னோட ரொம்ப நெருக்கமா பழகிட்டு இருந்தாள். பல கடிதங்கள் எனக்கு எழுதியிருக்காள். உண்மையிலே அவளை நான்தான் கட்டிக்க வேண்டியவன். ஆனால் நீங்கள் வேற இடத்திலே கொடுக்கத்தீர்மானிச்சு நிச்சயதார்த்த அழைப்பிதழ்கூட எல்லாருக்கும் அனுப்பிட்டீங்க ஆனால் அதைத்தடுத்து நிறுத்த என்னால் முடியும்.''

மவுனமாக அச்சத்துடன் அவனைப் பார்த்தாள். அவளது உடல் நடுங்கியது இவளையா ரேவதி விரும்பினாள்? வெளிப் பார்வைக்குக் கச்சிதமா தெரிகிற இவன் வாயைத் திறந்தால், படு அயோக்கியனா இருக்கானே?

''உங்க கணவர்கிட்டேயும் மகன்கிட்டேயும் பேசிப் பார்த்துட்டேன். அவங்க என் கோரிக்கைக்கு இணங்கவில்லை நான் எதுவும் செய்யுமுன்னே உங்களைப் பார்த்து பேசிடறதுன்னு முயன்றுகிட்டிருந்தேன். நிச்சயத்துக்கு இன்னும் ஏழு நாள்தான் இருக்கு''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் மங்களம். பேச முடியாது வார்த்தைகள் அவள் தொண்டையிலேயே தேங்கிப் போனது. நெற்றிமீது பூத்த வியர்வை காதோரம் வழிவதை உணர்ந்தாள். நெஞ்சு வேகமாகத் துடித்தது கால்கள் பூமிக்குள் இறங்கி விட்டன போன்று எனத்தன.

''உங்கள் கணவர் கட்டாயம் உங்கள்கிட்ட சொல்லியிருப்பார். உங்கள் விருப்படியே நீங்கள் உங்க மகளை நிச்சயம் பண்ணியிருக்கிற இடத்திலேயே கொடுத்துக் கோங்க. ஆனால் காதலிச்ச மோசம் போயிருக்கிற என்னைப்பத்தியும் நினைச்சுப் பார்க்கணும் இல்லையா''

மெல்லத் துணிவைத் திரட்டிக்கொண்டாள் மங்களம். ''உனக்காக நான் வருத்தப்படறேன் தம்பி.''

''அதனாலே எனக்கு லாபம் எதுவும் இல்லை. நான் படும் மனவேதனைக்கும் அடைந்துள்ள அவமானத்துக்கும் ஈடுசெய்ய வேண்டியது உங்கள் கடமை.'

''என்ன செய்யணும் சொல்லு என் கணவர்கிட்ட சொல்லி நிறைவேற்றி வைக்கிறேன்.''

''அவங்க ஒப்புக்கொள்ள மாட்டாங்க. ஆனால், நீங்கள் உங்கள் மகளின் வருங்கால தலனுக்காக ஒப்புக் கொள்ளீங்க. உங்கள் மகள் எனக்கு எழுதின காதல் கடிதம் என்கிட்டே இருக்கு. அவைகளை மாப்பிள்ளையாக வரப்போகிறவர் பார்த்தால் என்னாகும்?''

''அவைகளை அவர் ஏன் பார்க்கப் போறார்?'' மங்களம் கேட்டாள்.

''அவைகளை நான் அவருக்குக் காட்டி நிச்சயத்தை நடுக்க முடியும் இல்லையா?''

''அப்படி செய்யக்கூடியவனா, உன்னைப் பார்த்தால் தோணலையே தம்பி. நாம் ஆசைப்படறதெல்லாம் கிடைக்கிறதில்லை. நீ ரேவதியை கட்டிக்க ஆசைப்பட்டாய். ஆனால், வேறு ஒருவனுக்கு வாழ்க்கைப்படணும்னு அவளுக்கு விதி இருக்கு. படிச்சவன் நீ. ஒரு பெண்ணின் பாவத்தைக் கொட்டிக்கலாமா?''

முகுந்தன் உரக்கச் சிரித்தான். 'பாவமாவது புண்ணியமாவது? கடிதங்களை உங்கிட்டே தந்துடறேன். அதுக்கு ஈடா..'' முடிக்குமுன் மங்களம் குறுக்கிட்டாள்.

''உன்னை நான் எப்பவும் வாழ்த்திக்கிட்டு இருப்பேன் தம்பி நீ நல்லா இருப்பே.''

'வாழ்த்தும் வெண்டைக்காயும் எனக்குத் தேவையில்லை. எனக்கு வேண்டியது பணம். நான் பட்ட மனத்தாபத்துக்கு ஈடாக நாலுலட்சம்தான் கேட்கிறேன். பணம் கைக்கு வந்ததும் கடிதங்களை உடனே கொடுத்து விடுவேன். பிறகு உங்கள் வழிக்கே வரமாட்டேன்.

திக்கென்ற உணர்வில் பதறிப்போய் அவளை நிமிர்ந்து பார்த்தாள், மங்களம். படித்த படிப்பைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு அறிவுகெட்டு இந்த அயோக்கியனுடன் நெருங்கிப்பழகினாள் ரேவதி. கடிதங்களை இவன் மாப்பிள்ளையிடம் காட்டினால், நடக்க இருக்கும் நிச்சயம் நின்றுபோய் ஊர் அமர்க்களப் பட்டு போகுமே. உறவினர்கள் கைகொட்டி சிரிப்பார்களே. அந்த அவமானத்துக்கு பிறகு உயிரோட இருக்க முடியுமா? பிறகு ரேவதியைக்கட்டிக்க எவன் வருவான்? அவளது தாயுள்ளம் தவியாகத் தவித்தது. கண்கள் ஈரமாகின. தொண்டையை அழுகை இறுக்கியது.

''நீங்கள் மனசு வைத்தால், இந்த தொகையை நீங்களே திரட்டிக் கொடுத்திட முடியும். இதில் என் முகவரியும் தொலைபேசி எண்ணும் இருக்கு. கூப்பிட்டு எங்கே வரச்சொல் நீங்களே அங்கே வந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறேன். கடிதத்தை உங்களிட்டே கொடுத்திடறேன். பிறகு நிச்சயம்விமரிசையா நடக்கும். எனக்கும் அழைப்புக் கொடுத்தால் வந்து கலந்துகிட்டு விருந்து சாப்பிட்டு விட்டு வருங்கால தம்பதிகளை வாழ்த்திட்டுப்போவேன்'' மெல்லச் சிரித்தான்.

அவளிடம் ஒரு சிறு கடிதத்துண்டை நீட்டினான்.

அவனது ஏளனமான சொற்கள் ஈட்டியாக நெஞ்சைக் குத்தின. இந்தப் பொல்லாதவன் சொம்பவே துணித்திருக்கிறான். பழிபாவத்துக்கு அஞ்சாத கிரா

தான். இப்போது அவள் என்ன செய்வாள்? முகத்தில் அறைந்து கொண்டு ஓவென கதறவேண்டும் போன்ற துயரத்தில் துடித்தாள் அவள்.

''இரண்டு தாளில் எனக்கு முடிவு தெரியவேண்டும்'' என்று பயமுறுத்தலாக சொல்லிவிட்டு அவன் வெளியேறி விட்டான்.

கோவிலில் இருந்து கொண்டுவந்த திருநீற்றை எடுத்து கணவரது நெற்றியில் கீற்றிட்ட மங்களத்தின் கை நடுங்கியது.

மாமியார் தந்த குங்குமத்தைத் தொட்டுப் பொட்டு வைத்துக் கொண்ட கலா ''என்ன அத்தை உடம்புக்கு?'' பதட்டமாகக் கேட்டாள்.

அறையை மருமகளுடன் வெளியே வந்த மங்களத்திற்குச் சட்டென்று பேச முடியவில்லை. கையில் இறுக்கமாகச் சுருட்டி வைத்துக் கொண்டிருந்த அந்தக் காகிதத் துண்டை மருமகளிடம் கொடுத்தாள். 'இதில் பேர் போட்டிருக்கிறவன் என்னைக் கோவிலில் சந்தித்து..!' பேச முடியாது திணறினாள் மங்களம்.

கடிதத் துண்டைப் பிரித்துப் பார்த்த கலாவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அதைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து கசக்கித் தூர எறிந்தாள்

''இவள் இப்போ தன் கைவரிசையை உங்கள்கிட்ட காட்ட கோவிலுக்கு வந்துட்டானா? பலே கெட்டிக்காரன்'' சீறினாள்.

''உன் மாமாவும். உன் கணவனும் பிடிவாதமா இருக்காங்க. நான் இப்படி இருந்தால் என் பெண்ணின் கதி என்னாகிறது கலா. எனக்கு நீதான் உதவி செய்யணும் வங்கி லாக்கரில் இருக்கிற என் நகைகள் சிலதை எடுத்துக் கொண்டுபோய் வித்து எனக்கு நாலு இலட்சம் பணம் எப்படியாவது திரட்டிக் கொடு.''

''அத்தை! என்ன பைத்தியக்காரப் பேச்சு. உங்க பாம்பரைச் சொத்தை இந்த படுபாவிக்கு கொட்டிக் கொடுத்துப் பாழாக்கப் போறீங்களா? நீங்க தினமும் போகிறது போல கோவிலுக்குப் போய்க்கிட்டு இருங்கள். மற்றதை நான் பார்த்துக்கிறேன்...''

''பணம் இல்லாமல் அவன் ஏதாவது ஏடாகூடம் செய்துவிட்டால்?''

''அத்தை! ரெண்டுநாள் பொறுத்து அவன் அங்கே வருவான், என்கிட்டே பணம் கிடையாது, உன்னால் ஆனதைச் செய்து கொள். நடக்கிறது நடக்கட்டும்னு அசட்டையா சொல்லி விடுங்கள்'' என்றாள் கலா.

அன்று இரவு முழுவதும் மங்களம் உறங்கவில்லை. இரண்டு நாளிலேயே அவள் நோய் வந்தவள்போல உருக்குலைந்து வாடிப்போய் விட்டாள். இரண்டு நாள் கழித்து முருந்தன் அவளுக்கு முன்னதாகக் கோவிலில் காத்திருந்தான்.

''பணம் எப்போ கிடைக்கும்?'' தாழ்ந்த குரலில் கேட்டான்.

''கிடைக்காது. உன்னால் ஆனதைச் செய்...'' கூறிவிட்டு கோவிலுக்குள் வேகமாகச் சென்றுவிட்டாள்.

கற்பூர ஜோதியைத் தொட்டு வணங்கிய அவளது கரங்கள் நடுங்கின. ''கடவுளே என் மகளை அவமானத்தில் இருந்து காப்பாற்றினால், குளிரக் குளிர உனக்கு பால் அபிசேகம் செய்து வைக்கிறேன்.'' மனம் உருக, கண்கள் பனிக்க அந்த பேதைத் தாய் வேண்டிக் கொண்டாள்.

14

பகல் முழுவதும் நெருப்பாக எரித்த வெயிலின் கடுமை தணியத் தொடங்கியது. செந்தாமரை கதவைப் பூட்டிக் கொண்டு பிளாஸ்டிக் கூடையுடன் கடைக்குப் புறப்பட்டாள். மகன் வீட்டுக்கு வருவதற்குள் கடைத்தெரு வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்ப வேண்டுமென்ற ஆவலில் அவள் துரிதமாக நடந்தாள்.

முன்னைப் போன்று அவளுக்கு உடம்பில் அதிகத் தெம்பு இருக்கவில்லை. வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பு அவளுக்கு மிக்க பாரமாகத்தான் இருந்தது. இன்னும் சில தினங்கள்தான் இந்தச் சிரமம். நிச்சயம் முடிந்ததும் சீக்கிரம் கல்யாணத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.

மருமகள் வந்ததும் எல்லாப் பொறுப்புகளையும் அவளிடம் கொடுத்து விட்டு, நிம்மதியாகக் கோவில் குளமென்று பொழுதை ஆனந்தமாகக் கழிக்க வேண்டும் என்று நினைத்தவள் மனதில் வேறு ஒன்றும் எழுந்தது. பெரிய மனிதர் வீட்டுப் பெண் ரேவதி! ஒரு சமயம் அவளுக்கு வீட்டு வேலைகளில் பழக்கம் இருக்காவிட்டால்? அப்படி இருக்க முடியாது. கலாவும் பெரிய இடத்துப் பெண்தான். பம்பரமாகச் சுழன்று வீட்டு வேலைகளை எத்தனை பொறுப்போடு கவனிக்கிறாள். அந்தச் சூழ்நிலையில் வளர்ந்து பழக்கப்பட்ட ரேவதி பொறுப்புள்ள வளாகத்தான் இருப்பாள், தெரியாத வேலைகளைக் கொஞ்சநாள்கூட இருந்து சொல்லித் தந்தால் போச்சு. இந்தக் காலத்துப் பெண்கள் ரொம்ப புத்திசாலிகள். கண் பார்த்தால் கை செய்யும் அளவு கெட்டிக்காரிகள் என்று பலவும் எண்ணியபடி நடைபாதை மீது அவள் விரைந்து கொண்டிருந்தாள்.

நிச்சயத்திற்கு இன்னும் மூன்று தினங்களேதான் இருந்தன. ''தில்லைநாதன் குணமாகிவிட்டார். நிச்சயத்

திற்கு பின்னர் அலுவலகத்து வேலைகளைத் தொடங்கலாம் என்று ஒத்திப் போட்டு விட்டு ஒய்வாக வீட்டில் இருக்கிறார். அவ்வளவுதான், கவலை வேண்டாம்'' என்று கலா தொலைபேசியில் அழைத்துச் சொல்லியிருந்தாள்

நிச்சயத்தின் போது மாப்பிள்ளை வீட்டார்களைக் கவனிக்க வேண்டிய காரியங்களுக்குக் கைகொடுக்க செந்தாமரையின் தங்கை மகளும் கணவனும் காத்திருந்தனர். மிட்டாய் கடையில் இருந்து பலகாரங்களை வாங்கிவிட ஏற்பாடு செய்திருந்தான் மகன்.

உடம்பை அலட்டிக் கொள்ள அவளுக்கு வேலை அதிகம் இருக்கவில்லை ஆனாலும் மனம் கேட்கவில்லை வீட்டுக்கு வருகிறவர்களுக்கு உபசரிக்கத் தன் கைப்பட பாதாம் பர்பியும், வெள்ளை முறுக்கும் தயாரிக்க விரும்பினாள்.

தேவையானவைகளை வாங்கத்தான் மளிகைக் கடைக்குப் புறப்பட்டிருந்தாள். பர்சைத் திறந்து சாமான்களின் குறிப்பு கொண்ட கடிதத் துண்டை எடுத்து படிக்க ஓரமாக நின்றாள்.

சாலையில் வேகமாக வந்த ஒரு மோட்டார் சைக்கிள் தன் அருகே வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். சிவகுருவை ஒத்த ஓர் இளைஞன் வண்டியை ஒருபுறம் நிறுத்தி விட்டு அவளை நோக்கி வேகமாக வந்தான்.

''உங்களைத் தேடிக் கொண்டு வருகிறேன். வீட்டைப் பூட்டிக் கொண்டு நீங்கள் கிளம்பிய போதே உங்களிடம் பேச நினைத்தேன் தல்லவேளை உங்களை இங்கே சந்திக்க முடிஞ்சது.'' பரபரப்புடன் சொன்னான்.

முன்பின் அவள் அவனைப் பார்த்ததில்லை. ஒரு சமயம் சிவகுருவின் நண்பனோ? சட்டென்று அருகேயிருந்த மரத்தடியில் ஓரமாக ஒதுங்கி நின்றாள்.

''உங்கிட்ட ஒரு முக்கியமான சங்கதியைச் சொல்ல ஓடி வந்துக்கிட்டிருந்தேன். ரொம்ப அவசரம்'' என்றான் அவன்.

பயந்து போய் விட்டாள்செந்தாமரை. தில்லைநாதனுக்கு உடம்புக்கு மறுபடி ஏதாவது ஏற்பட்டு கவலைக்கிடமாகி விட்டதா? அவர்கள் வீட்டிலிருந்து இந்த வாலிபன் சொல்ல ஓடி வந்திருக்கிறானா? கவலையுடன் அவனை உற்றுப் பார்த்தாள்.

''உங்கள் நன்மைக்காக, உங்களுக்கு அவமானம் ஏற்படாதிருக்க ஒரு முக்கிய சங்கதியைச் சொல்ல வந்திருக்கேன்'' என்றபடி முகத்தில் பூத்த வியர்வையை புறங்கையால் துடைத்துக் கொண்டான்.

''அவமானமா? விளங்கலையே'' என்றாள் செந்தாமரை வியப்புடன்.

''உங்கள் மகனுக்கு நிச்சயம் செய்யப் போகும் ரேவதிக்கு ஏற்கனவே ஒரு காதலன் இருக்கான். இதை மறைக்கத்தான் அவசரமா உங்கள் மகனுக்கு பெண் கொடுக்க சம்மதித்தார் தில்லைநாதன். நீங்களே நல்லா யோசிச்சிப் பாருங்கள். பெரிய பணக்காரரான அவர் உங்கள் சம்பந்தத்தைத் தேடிக் கொண்டு எதுக்காக ஓடி வரணும்?''

செந்தாமரையின் நெஞ்சு படபடத்தது. மூச்சு நின்று விடும்போல திணறிப் போனாள். எச்சிலை விழுங்கிக் கொண்டாள் ''ஒரு சமயம் இது சிவகுருவுக்கு வேண்டாதவன் கிளப்பி விடும் கதையாக இருந்தால்?'' தன்னுள் சொல்லிக் கொண்டாள்.

''ஆமாம்! உனக்கு இந்த விவகாரம் எப்படி தெரியும் தம்பி! என்கிட்டே வந்து சொல்ற அளவுக்கு உனக்கு என்மேல் ஏன் இந்த பரிவு?'' சட்டென்று கேட்டு விட்டாள்.

உரத்து சிரித்தான் அவன். நடைபாதை மீது போய் கொண்டிருந்த சிலர் அவர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டு நகர்ந்தனர்.

செந்தாமரைக்கு வெட்கமாகத்தான் இருந்தது- ஆனால் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. யார் இவன்? மகிழ்ச்சியோடு பல எதிர்பார்ப்புகளுடன் இருக்கும் அவளை இப்படி அச்சுறுத்துகிறான்? அவளுக்கு கோபம் கூட வந்தது.

''ரேவதியை கட்டிக்க ஆசைப்பட்டு அவளோட நெருங்கிப் பழகினவன் நான்தான். என் பெயர் முகுந்தன். அவளும் என் மேலே ரொம்ப ஆசைப் பட்டாள்.

திகைத்துப் போனாள் செந்தாமரை. அந்தச் செய்தி அவளுக்கு மெத்த அதிர்ச்சியைத் தந்தது.

''பார்த்தீங்களா, இதைக் கேட்டதும் நீங்கள் சங்கடப் படுவீங்கன்னு எனக்குத் தெரியும்.'' புன்னகைத் தான் அவன்

தில்லைநாதனுக்கு வேண்டாதவங்க இருக்கலாம். அவர்கள் வீட்டுக் கல்யாணத்தை நிறுத்திவிட இப்படி ஒரு சதியோ?

அவளது எண்ணத்தை ஊகித்து விட்டவன் போல அவன் சொன்னான். ''நம்ப மாட்டீங்கன்னு தெரியும். எனக்கு ரேவதி எழுதியிருக்கிற காதல் கடிதங்கள் கை வசம் இருக்கு. காட்டவா?'' கேட்டான்.

திடுக்கிட்டுப் போன செந்தாமரை அவனை மேலும் கீழும் பார்த்தாள். அவள் அதிகமா படித்தவள் இல்லை. ஆனால், அலசி பார்த்து 'முடிவுக்கு வரும் ஆற்றல் ரொம்பவே பெற்றிருந்தாள் தன் வேலைப் பார்த்துக் கொண்டு போகும் ஒரு வயதானவளை வழி மறித்து வம்பு செய்கிறவன் கட்டாயம் ஒரு அயோக்கியனாகத் தான் இருக்க வேண்டும். இது நல்லவன் செய்யும் வேலையா?''

''ஆமாம் நீ சொல்றதை உண்மைன்னு ஒத்துக் கறேன். கடிதங்களைப் பார்க்கத் தேவையில்லை. என்

கிட்டே நீ என்ன எதிர்பார்த்து இதைச் சொல்ல வந்தே? என் மனதை நோகச் செய்து வேடிக்கை பார்க்கவா?'' சற்று கடுமையாகக் கேட்டாள்.

''பணம் பதவிகளை விட மானம் மரியாதைதான் உங்களுக்கு முக்கியம் இல்லையா? உண்மை தெரிஞ்ச பிறகு இந்த சம்பந்தத்தை நீங்க விரும்ப மாட்டீங்க இல்லையா?''

'நீ சொல்றது சரிதான் தம்பி. மானம் மரியாதை எனக்கு ரொம்ப முக்கியம். இந்த கல்யாணத்தை இப்போ நிறுத்தினால் என் உறவினர், நண்பர்கள் முன்னால் என் மானம் போகும். ஒரு இளம் பெண் வாழ்க்கை பாழாகிப் போகும். அது மரியாதையா சொல்லு? அதனாலே நான் இந்த நிச்சயத்தை நிறுத்த மாட்டேன்.''

''ரேவதியின் நடத்தை தெரிந்த பிறகு கூடவா?''

''இளம் வயசு பெண் அன்பா பழகினவள் மேலே ஆசைப்பட்டால், அது தவறா தம்பி? மனசில் உள்ளதை கடிதத்தில் எழுதினால் அது பெரிய குற்றமா?''

''பணத்துக்கு ஆசைப்பட்டு படுகுழியிலே விழப் போறீங்களா?''

''நீ உண்மையா அந்த பெண் மேலே அன்புள்ள வனா இருந்தால், இப்படி என்கிட்டே வந்து மட்டமாப் பேசியிருக்கமாட்டே. எங்கிருந்தாலும் அவள் வாழட்டும்னு ஒதுங்கி போயிருப்பே. நான் நினைக் கிறேன், நீ பணத்துக்கு ஆசைப்பட்டு என்னை வந்து பயமுறுத்தறே? அந்தக் கடிதங்களை என்கிட்டே விலை பேசபார்க்கிற. வேண்டாம். அவைகளை நீயே வச்சுக்கோ. அக்கறையில்லை...'

''நாலு பேர் கடிதங்களைப் பார்த்தால் உங்களுக்கு வெட்கமா இருக்காதா?''

'நாணமும் அச்சமும் நாய்களுக்குத்தான் வேண் டும். உன்னைப் போன்ற ஒரு கயவன் மேலே தவறிப்

போய் ஆசை வச்சாளே ரேவதி என்று இரக்கப்பட்டு அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தர நான் தயாரா இருக்கேன், படிச்சவனா தெரியறே... இப்படி மட்டமா இறங்கிட்டியே என்று உன்னைப் பார்த்துப் பரிதாபப் படறேன் உன் மிரட்டல்களை வேறே இடத்தில் வச்சுக்கோ. கொஞ்சம் நகர்ந்து எனக்கு வழியை விடு. கவனிக்க எனக்கு ரொம்ப வேலை கிடக்கு....'' உரத்த குரலில் கோபமாகச் சொல்லவும், வழியில் சென்ற ஒரு பெரியவர் நின்றார்,

''ஏம்மா! இந்த பையன், உங்கிட்ட தவறாகப் பேசறானா?'' என்று அனுதாபத்துடன் கேட்டார்.

சென்தாமரை லேசாக முறுவலித்தாள். ''படிச்ச பையன் வேலை தேடிக் கொண்டு ஒழுங்கா வாழாமல் ஊர் சுத்திக்கிட்டு ஏமாற்றி பிழைக்கப் பார்க்கிறான். அவனுக்கு புத்தி சொல்லிக்கிட்டிருக்கேன். அவனுக்குக் கேட்கவே பிடிக்கலை...'' என்றபடி முகுந்தனை முறைத்து விட்டு மேலே நடந்தாள்.

திகைத்துப் போய் விட்டான் அவன். பத்தாம்பசலியாக இருப்பாள் பதறிப் போய் விடுவாள் பணத்தைக் கொடுத்து கடிதத்தை விலைக்கு வாங்குவாள் என்று எண்ணியவனுக்கு பெருத்த அதிர்ச்சி.

சே! ஒரு கிழவியிடமா அவன் தோற்றுப் போவது! வெட்கம்!

ஆத்திரத்துடன் மோட்டார் சைக்கிளை வேகமாகக் கிளப்பினான்.

15

செந்தாமரை மிகவும் கலவரமடைந்து போனது உண்மை. ஆனால் அவள் தன் மகனிடம் அந்த நிடுக்கிடும் தகவலைச் சொல்லவேயில்லை.

அந்த வட்டாரத்தில் இருந்த மாதர் சங்கத்தில் அவள் ஒரு உறுப்பினர் அதிகம் படித்தவள் இல்லை என்றாலும் அங்கே நிகழும் பெண் உரிமை பற்றிய கலந்துரையாடல்களில் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொண்டவள். ஆணுக்குப் பெண் அடிமையில்லை என்று அழுத்தமாக நம்புகிறவித்தியாசமான பெண்மணி அவள். அவளது எளிய வெளித் தோற்றத்திற்கும், மனதிலே கொண்டுள்ள உயர்ந்த நோக்கங்களுக்கும் இடைவெளி மிக அதிகம்.

அன்று இரவு வெகுநேரம் அவளுக்கு அந்தச்செய்தி மன வருத்தத்தைத் தந்தது. ஆனால், மறுநாளே அதை மனதில் இருந்து உதறிவிட்டு, தன் வேலைகளை மகிழ்ச்சியுடன் கவனிக்கத் தொடங்கினாள். அவளது ஒன்றுவிட்ட சகோதரனுடைய மகள் துளசி தன் கணவனுடன் ஒருநாள் முன்னதாக வந்து விட்டிருந்தாள்.

காபி உபசரிப்புக்குப் பின் நடக்கவிருந்த நிச்சயத்திற்கு பெண்ணுக்கு அவர்கள் தரப்போகும் பரிசுப் பொருள்களை பீரோவில் இருந்து எடுத்து எல்லோருக்கும் பெருமையுடன் காட்டிக் கொண்டிருந்தாள். வேலைக்குப் புறப்பட ஆயத்தமான மகன் அறைக்குள் எட்டிப்பார்த்தான்.

மணப்பெண்ணுக்கு அம்மாவுடன் சென்று அவன் வாங்கியவை அவை. நாற்காலி மீது அம்மா விரித்துப் போட்டிருந்த நீலப்பட்டுச் சேலையைப் பார்த்தபோது ரேவதியின் நினைவு நெஞ்சில் இனிப்பாக நிறைந்தது. ரேவதி அந்தசேலையில் எத்தனை அழகுடன் எல்லோர் முன்னிலையிலும் நிற்கப் போகிறாள் என்ற கற்பனை, மெய்சிலிர்க்கச் செய்தது.

''தம்பிக்கு காட்டலையா?' துளசி வேடிக்கையாகக் கேட்டுவிட்டு கண்ணைச் சிமட்டினாள்.

''நீல வண்ணச் சேலை வேணும்னு தம்பிதானே ஆசையா பார்த்து வாங்கினான்.''

அம்மா சொன்னபோது லேசாக முகம் சிவந்து போனான், சிவகுரு.

''இந்த முத்து செட்டு கூட அவன்தான் பார்த்து வாங்கினான்!'' அம்மா பெருமையுடன் பீரோவில் இருந்து நகைப் பெட்டியை எடுத்துக் காட்டினாள்.

''அழகா இருக்கு'' என்றாள் துளசி.

''விலையும் ரொம்ப அதிகம்தான்'' அம்மா சிரித்து விட்டு மகனை அர்த்தமுடன் பார்த்தாள்.

''முத்து நெக்லசு மட்டும் போதாதா? தோடு—கை வளையெல்லாம் சேர்த்து வாங்கினால் விலை ரொம்ப ஆகிறதே' என்று அம்மா கடையில் தயங்கியபோது அவன் அழுத்தமாகச் சொல்லி விட்டான்.

''வாழ்க்கையில் ஒரு முறை வரும் இனிய நிகழ்ச்சி. கொடுக்கறதைப் பாங்காகக் கொடுப்போமே பணத்தைப் பற்றி யோசிக்கிற நேரமா இது?'' என்று சிவகுரு கேட்டதும் செந்தாமரை ஒத்துக் கொண்டாள்.

''ரேவதி மேலே அவனுக்குத்தான் எத்தனை ஆசை? பரிசு நகைகள் செட்டாக இருக்கணும்னு பிரியப்படறான். போகட்டும். அவன் விருப்பப்படியே வாங்கட்டும். திருமணத்துக்குப் பிறகு குடித்தனம் செய்ய ஆரம்பிக்கும் போது செட்டும் கட்டுமாக வாழப் புரிஞ்சுக்கட்டும்'' தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள்.

முத்து நெக்லசை அம்மா துளசியிடம் காண்பித்து மகிழ்வதை ஓரக்கண்ணால் பார்த்து முறுவலித்தபடி அலுவலகம் புறப்பட விடைபெற்றுக் கொண்டான், சிவகுரு. வழி நெடுகிலும் அந்த இன்பமான எதிர்பார்ப்பு நெஞ்சை நிறைத்தது. அலுவலகத்தின் அறைக்குள்ளே சென்று அமர்ந்து கொண்டவன் உற்சாகத்துடன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான். மலைபோல மேசைமீது குவிந்து கிடந்த கோப்புகள்...கொஞ்ச நேரத்தில் மாயமாகின. தேநீர் கோப்பையை கொண்டு வந்து வைத்து விட்டு அப்பால் நகர்ந்தபோது இன்டர்காம் ஒலித்தது.

''உங்களை அவசரமாகப் பார்க்கணும்னு ஒரு இளைஞர் வந்திருக்கிறார். முக்கியமான செய்தியாம். என்ன செய்ய?'' வரவேற்புப் பெண் மறுபக்கத்திலே மெல்லிய குரலில் கேட்டாள்.

''வரச்சொல்லுங்க'' என்று கூறிவிட்டு, தேநீரை ஒரே வாயாகப் பருகி முடித்துவிட்டு கோப்பையை வைத்து வாயைத் துடைத்துக் கொள்வதற்குள். பார்க்க விரும்பியவன் பதட்டமாகக் கதவைத் திறந்துகொண்டு வந்து நின்றான்.

வெள்ளைப் பான்ட் சட்டையில் கச்சிதமாகத் தெரிந்த அவனை மிகவும் ஆயப்புடன் பார்த்தான் சிவகுரு. முன் பின் பார்த்த நினைப்பே இல்லை.

''உட்காருங்க. நீங்க எந்தக் கம்பெனியில் இருந்து வருகிறீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?'' முறுவலுடன் எதிரே கிடந்த நாற்காலியைக் சுட்டிக் காட்டினான்.

''நான் எந்தக் கம்பெனி சம்பந்தமாகவும் வரலை. உங்க சொந்த சங்கதியைப் பத்தி அவசரமாகப் பேச வந்திருக்கேன். என் பெயர் முகுந்தன்'' அறிமுகப் படுத்திக் கொண்டு அமர்ந்தான் அவன்.

''சொந்த சங்கதியா?'' சிவகுருவுக்கு ஒரே திகைப்பு.

''நாளை மறுநாள் உங்களது நிச்சயதார்த்த வைபவம் நடக்கப் போகிறதில்லையா?''

சிவகுரு வியப்புடன் தலையை அசைத்தான்.

''நான் சொல்லப் போவதைக் கேட்டால் நிச்சயதார்த்தத்துக்கு ஒப்புக்க மாட்டீங்க.''

மின்னிசை தாக்கியது போன்ற அதிர்ச்சியில் திகைத்துப் போனான்சிவகுரு. ''என்ன சொல்றீங்க?'' காரமாக அதட்டிக் கேட்டான்.

''ரேவதியும் நானும் நெருங்கிப் பழகினவங்க. அவள் எனக்கு எழுதின கடிதங்கள் கைவசம் கொண்டு வந்திருக்கேன்'' குரோதமாகச் சிரித்தான் முகுந்தன்.

குளிர் சாதன அறையின் கூரையில் இருந்து நெருப்பு மேலே கொட்டுவது போன்றதொரு வேதனையில் துடித்தான் சிவகுரு.

''அவளுக்கும் எனக்கும் உள்ள நெருங்கின உறவைப் புரிந்து கொண்டால், நீங்கள் இந்த நிச்சயத்திற்கு ஒப்புக்க மாட்டீங்க. தில்லைநாதன் எனக்கு மகளைக் கொடுக்க மறுத்தார். அதற்காக நான் கவலைப்பட வில்லை'' சிரித்தான் முகுந்தன்.

சிவகுருவுக்கு பேச்சு வர சில வினாடிகள் ஆயின. தொண்டையைச் செருமிக் கொண்டான். உணர்வுகள் தொய்ந்து, உடல் நாற்காலியில் சரிகின்றது போன்ற ஒரு பிரமிப்பில் இருந்து விடுபட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''பரவாயில்லை என்று ஒதுங்கிக் கொள்ளும் பரந்த மனம் இருக்கும்போது, இப்ப வந்து என்னிடம் இந்த திடுக்கிடும் தகவலைத் தெரிவிப்பதின் நோக்கம்?'' கடுமையாகக் கேட்டான் சிவகுரு. வந்தவன் கன்னத்தில் ஓங்கி அறைந்து, கதவைத் திறந்து நெட்டித் தள்ள மாட்டோமா என்ற ஆவேசம் அவனை ஆட்டியது.

''வேண்டாம் என்று என்னை ஒதுக்கிய தில்லை நாதன் வீட்டுக்குள் மாப்பிள்ளையாக நுழைய, எனக்கும் இனி ஆசையில்லை.''

''அப்படியா? இதைச் சொல்லவா இங்கே புறப்பட்டு வந்தீங்க?'' சிவகுருவின் குரலில் ஏளனம் தொனித்தது.

''ஆனாலும், நான் சொரி நாயைப்போல விரட்டப் பட்டதை ஏற்கப் போவதில்லை.''

''என்ன சொல்ல இப்படி சுத்தி வளைக்கிறீங்க'' சிவகுரு பொறுமையை இழந்து சீறினான்.

நான் மனம் வைத்தால் இந்த நிச்சயத்தை நிறுத்தி விட முடியும். தில்லைநாதன் பெரிய பணக்காரர். தமக்கு ஏற்படும் அவமானத்தைப் பணத்தால் மூடி மறைத்துவிட முயல்வார். அவரால் முடியும். ஆனால் நீங்கள்? மிகவும் கவுரவமாக வாழ்கிறவர் இந்த அவமானத்தை உங்களால் தாங்க முடியாது. அதனாலே இந்தக் கடிதங்களை உங்களிடம் தந்துவிடுகிறேன்.''

''புரிகிறது. அதற்கு விலை கொடுத்து விடுங்கள்! நான் ஒதுங்கிக்கிறேன் என்று பேரம் பண்ண புறப்பட்டிருக்கிறீங்க. இல்லை.. பயமுறுத்துகிறீங்க'' என்றான் சிவகுரு.

''எப்படி வச்சுகிட்டாலும் சரி'' வஞ்சகமாகச் சிரித்தான் முகுந்தன்.

''தில்லைநாதன் இந்த அவமானத்தைப் பணத்தால் மூடி மறைக்க முடியுமானால் என்னால் பொறுமையாய் தாங்கிக்க முடியும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இவ்வளவுதானே! போகலாம்'' கண்டிப்பான குரலில் இரைந்தான் சிவகுரு.

இப்படிப்பட்ட ஒரு திருப்பத்தை முகுந்தன் எதிர் பார்க்கவில்லை. சங்கதியைக் கேட்டதும், முகம் வெளுத்து நடுங்கிப் போவான் சிவகுரு என்று எண்ணியவனுக்கு, பெருத்த ஏமாற்றம். என்ன அநியாயம்! எங்கே போனாலும் கல்கவரில் முட்டிக் கொள்வது போல தோல்வி தானா? அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.

''இந்தக் கடிதங்கள் வெளி உலகிற்குத் தெரிந்தால் உங்கள் வருங்கால மனைவியைப்பற்றி எத்தனை

இழிவாக பேசுவார்கள்—இந்த அலுவலகத்தில் பிறகு நீங்கள் தலைநிமிர்ந்து நடக்க முடியுமா? யோசியுங்கள்?''

''பயமுறுத்தி பணம் வாங்க முயலுகிறாய் என்று உன்னைப் போலீசில் ஒப்படைத்தால், உன் நிலைமை என்னவாகும்னு முதலில் நீ யோசி. அயோக்கியப் பயலே—பயமுறுத்தவா பார்க்கிறே? இடத்தைக் காலி பண்ணு. இல்லாவிட்டால், பையனைக் கூப்பிட்டு கழுத்தைப் பிடித்து தள்ள வேண்டி வரும்'' என்று கத்திக் கொண்டு சிவகுரு எழுந்து நின்றதும்

முகுந்தன் பயந்து போனான் வேகமாகத் கதவைத் திறந்துகொண்டு மாயமானான்.

தொப்பென்று நாற்காலியில் சரிந்தான் சிவகுரு. உண்மையா இது? அம்மாவுக்குத் தெரிந்தால்.. ஐயோ! இடிஞ்சு போவாங்களே... அவன் மனம் துயரத்தில் புலம்பியது

16

விடிந்தால் நிச்சயதார்த்தம். நீலமேகநாதன் தகுநிக்கு பெரிய கல்யாண மண்டபத்தில் மிகவும் அமர்க்களமாக நடத்த வேண்டிய நிகழ்ச்சி. ஆனால் மிகவும் அடக்கமாக தெருங்கிய நண்பர் உறவினர்களுடன் வீட்டோடு நடத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன

கலாவுக்கு நிற்க நேரம் இருக்கவில்லை. நிச்சயத்தின் விருந்தில், வந்தவர்களுக்கு வழங்க பின்கட்டில் சமையல் ஆட்கள் தயாரித்துக் கொண்டிருந்த இனிப்பு களை மேற்பார்வையிட்டுவிட்டு, வீட்டின் பெரிய வரவேற்பறையில்கிடந்த இருக்கைகளை அகற்றிஇடத்தப் படுத்தி, நிச்சயவிழாவுக்கு தயாராகிக்கொண்டு இருந்தாள் இடையே மாடிக்கு விரைந்து, வீட்டுப் பெண்கள்

நிச்சயதார்த்தத்திற்கு உடுத்தவேண்டிய சேலை, ரவிக்கை அணியவேண்டிய நகைகள் முதலியவற்றைத் தேர்ந்து எடுத்து பீரோவில் ஒரு பக்கம் வைத்தாள். பின்னர் பொழுது அமர்வதற்குள் மறுநாள் நிகழ்ச்சிக்கு வேண்டிய பூ, சந்தனம் முதலியவற்றை வாங்கி வர, அவள் கடைத்தெருவுக்குக் கிளம்ப வேண்டியிருந்தது.

அப்பா தமது அறையில் சாய்ந்தபடி நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்தார். அண்ணன் இன்னமும் அலுவலகத்தில் இருந்து வரவில்லை.

நிச்சயத்திற்காக ஒருநாள் முன்னதாக வந்து இருந்த வெளியூர் உறவினர்களுடன் அம்மா பின் அறையில் உரக்க பேசிக்கொண்டிருந்தாள். அதே நேரம் ஒரு சிறுமி வண்ண காகிதத்தில் சுற்றியதொரு சிறு பொட்டலத்தை எடுத்துக் கொண்டு வாயிலில் நின்றாள்.

''ரேவதி அக்காளுக்குக் கொடுத்துட்டு வரச் சொன்னாங்க'' என்று சிறுமி நீட்டியபொட்டலத்தை, வேலைக்காரி வாங்கி வந்து மாடியறையில் மேசைமீது வைத்தாள்.

''யார் அனுப்பியது?'' என்று சிடுசிடுத்தபடிபொட்டலத்தைப் பிரித்தாள், ரேவதி. ஒரு சிறு அட்டைபெட்டியில் மிட்டாய்களும், ஒரு கடிதமும் இருந்தன.

குண்டு குண்டான கையெழுத்தைக் கண்டதுமே அவளது நெஞ்சு படபடத்தது. தோழி லாவண்யா அவைகளை அவளுக்கு அனுப்பியிருக்கிறாள்!

கதவைத் தாழிட்டுக் கொண்டு பதட்டமாய்ப் பிரித்தாள்.

''உன் நிச்சயத்திற்கு தோழிகளான எங்களுக்கு அழைப்பு கிடையாது என்பது வருத்தத்தக்க செய்தி. உன்னைத் தொலைபேசியில் தொடர்புகொள்ள இயலவில்லையே என்று பல கடிதங்கள் எழுதினேன். பதில் கிடைக்கவில்லை. அவை சென்சார் செய்யப்பட்டு

விட்டன போலும் இதை நேரேயே உன்னிடம் கொடுத்துவர எங்கள் பக்கத்து வீட்டு பள்ளிச் சிறுமியை அனுப்பியிருக்கிறேன். இது கட்டாயம் உன்னை வந்து அடையும் என்ற நம்பிக்கை. வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் வழக்கத்திற்கு நம்மைப் போன்ற படித்த பெண்கள் பலியாவது வருந்தத்தக்க சங்கதி தான். இதிலிருந்து நீ மீளமுடியாது என்று கலங்கி விடாதே. நிச்சயதார்த்தத்திற்கு நீ ஒப்புக்கொள். ஏன் திருமணத்திற்கே நீ தாராளமாக ஒப்புக்கொள்ளலாம். பிறகு உன் பெற்றோர்கள் உன்னை எதற்கும் கண்டிக்க முடியாது. கட்டுப்படுத்தவும் இயலாது. திருமணம் வரைதான் அவர்களது ஆதிக்கம் மறக்காதே. பின்னர் நீ ஒரு புரட்சிப் பெண்ணாக உன் விருப்பப்படி செயல் படலாம். அதை யாரும் தடுக்க முடியாது.

அன்புள்ள லாவண்யா.

கடிதத்தை இருமுறை படித்தாள். மூன்றாவது தடவை நிதானித்து வாசித்தபோதுதான் லாவண்யா சொல்ல வந்ததை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

உதட்டைக் கடித்துக்கொண்டு கடிதத்தைக் கிழித்து அப்புறப்படுத்திவிட்டு வெளியே வந்தாள். அன்று காலை கூட அவள் அண்ணியிடம் முறையிட்டுக்கொண் டிருந்தாள்.

வெள்ளி பன்னீர்ச் செம்பு, தட்டு, சந்தனக்கும்பா முதலியவற்றைத் துடைத்து வைத்துக் கொண்டிருந் தாள் அண்ணி. அவைகளைக் கண்டதுமே ரேவதிக்கு மிரட்சி ஏற்பட்டது. அடுத்த நாள் நடக்கப்போகும் நிச்சயத்தின் ஆரம்ப அறிகுறிகள் அவை. என்று எண்ணியபோதே மனதிற்குள் ஒரு திகில்.

''அண்ணி! இப்போதாவது என் பேச்சைக்கொஞ்சம் கேட்கமாட்டீங்களா?' மெல்லிய குரலில் தயரத்துடன் கேட்டாள்.

சுத்தப்படுத்திய வெள்ளிப் பாத்திரங்களை ஒரு பக்கம் வைத்து விட்டு, கடுமையாக அவள் பக்கம் திரும்பினாள் கலா ''நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும். அதே பழைய கதைதானே?'' அதட்டலாகக் கேட்டாள்.

''வற்புறுத்தி பெண்ணைக் கட்டிக் கொடுக்கிறது நியாயம் இல்லையே அண்ணி! யோசிச்சுப் பாருங்கோ...''

''நல்லா யோசிச்சுப் பாத்துதானே இந்த முடிவு எடுத்திருக்கோம். உன் நன்மையை உத்தேசித்துதான் உன்னை வற்புறுத்தறோம். இப்போது தெரியாது. பிறகு புரியும்'' அசட்டையாகக் கூறிவிட்டு அப்பால் நகர்ந்து விட்டாள்

ஓவென்று அலறி அழ வேண்டும் போன்றதொரு ஆவேசம் ரேவதியை உலுக்கியது புலி சிங்கம் போல் அண்ணனும்—அப்பாவும் முன் அறையில் உட்கார்ந் திருந்தனர். கண்ருத்திப் பாம்பு போல அண்ணி காவல் செய்தாள். தான் என்ன செய்வேன் என்று அம்மா புலம்பலோடு தன் பொறுப்பை உதறி விட்டு வலைய வந்து கொண்டிருந்தாள்.

இதற்கிடையில், வெளியூர் விருந்தாளிகளின் கூட் டம் கலகலவென்ற சத்தத்துடன் வீட்டை இரண்டுபடுத் திக் கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் அவள் என்ன செய்வாள்?

கலங்கிக் கொண்டிருந்த அவளுக்கு லாவண்யாவின் கடிதம் மிகுந்த தெம்பைத் தந்தது. கொதித்துக் குழம்பிய தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு கொஞ்ச நேரத் தில் அவள் மெல்லக் கீழே வந்தாள்.

அண்ணி கலா கொண்டு வந்து சேர்த்திருந்த பூக் கூடைகளில் இருந்து புறப்பட்ட மணம், பின்கட்டி லிருந்து வந்த நெய் மணத்துடன் கூடி ஒரு கலவை மணமாக வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டு அடுத்த நாள் நிச்சயதார்த்தத்திற்குக் கட்டியம் கூறிக் கொண் டிருந்தது.

"இப்படி உட்கார். எங்கே கல்யாணப் பொண்ணுன்னு ஊரில் இருந்து வந்திருக்கும் உறவுக்காரங்க விசாரிக்கிறாங்க, மாடியிலே மறைஞ்சுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?" என்று கலா அதட்டிய போது அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டுதான் வந்தது

"என்னம்மா ரேவதி? மாப்பிள்ளை நல்லா அழகாத்தானே இருக்கான்! உனக்குப் பொருத்தமானவன்தான்! உனக்குப் பிடிச்சிருக்குமே?" ஊரத்த குரலில் சிரித்தாள் ஒரு உறவுக்காரி.

அடக்கமாட்டாத எரிச்சலில் தவித்தாள் ரேவதி. இனி அந்தக் கேள்விக்கு இடம் ஏது? பலி பீடத்திற்கு இழுத்துச் செல்லப்படும் ஆடு போன்ற நிலையில் அவள்! பற்களைக் கடித்துக் கொண்டாள்.

"செத்தாமரை ரொம்ப நல்லவள். உன்னை கண் போல வச்சுக் காப்பாத்துவாள். சிவகுரு கூட ரொம்ப நல்ல பிள்ளை. பணத்துக்கு ஆசைப்படாமல் உன் அப்பா உன்னைப் பண்பானவனுக்குக் கட்டிக் கொடுக்கிறார். நீ கொடுத்து வச்சவள்" என்ற அபிப்ராயங்கள் அவளது காதுகளை ராவின.

அவள் மவுனமாக முறுவலித்தபடி, தனது திட்டத்தின் ஆரம்பத்திற்கு அடிக்கல் நாட்டினாள்.

மறுநாள் காலை, தில்லைநாதன் கவலைப்பட்டதிற்கு மாறாக நிச்சயதார்த்தம் மிகவும் சிறப்பாக, அமைதியாக, திருப்தியான வகையில் நடந்தது.

ரேவதி எந்தவிதமான இடக்கும் செய்யாது, கலா அண்ணி சொன்னபடி நடந்து கொண்டாள். தலை அலங்காரத்துடன், அவன் பரிசத்தில் தந்த நீலப்பட்டுச் சேலையும், முத்து நகைகளுமாக மெல்ல வந்து ரேவதி சபையில் நின்றபோது, மயங்கிப் போனாள் சிவகுரு.

அவள் பக்கம் திரும்பி அவள் முறுவலித்தபோது பரவசமடைந்து போய்விட்டான். அது ஒரு மாயப் புன்னகை. வரப்போகிற பெருத்த சங்கடத்தின் முன் எச்சரிக்கை எப்பதை அவன் அறிய வாய்ப்பு ஏது?

17

வீட்டுக்குத் திரும்பிய செத்தாமரையின் மனதில் பெருத்த நிம்மதி, எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காது நிச்சயதார்த்தம் சிறப்பாக அடக்கமாக நடந்தது பற்றி உள்ளுக்குள் திருப்தி.

முகுந்தன் வந்து மிரட்டிய செய்தியை அவள் மகளிடம் சொல்லாதது எத்தனை நல்லதாகி விட்டது? ஈனான சந்தேகத்தில் குழம்பிப் போயிருப்பான். நிச்சயத்தின் போது பெண்ணுக்குச் சந்தன நலங்கு வைத்த காட்சியை மகிழ்ச்சியுடன் ரசித்திருக்க மாட்டானே. அந்த ஆனந்தம் அடியோடு போயிருக்குமே என்று தனக்குள்பலவும் நினைத்துக் கொண்டாள்.

பெரிய மனிதர் வீட்டுப்பெண் கொஞ்சம் திமிராக இருப்பாள் என்றுதான் உள்ளூர எண்ணிக் கொண்டிருந்தாள் துளசி. பரிசச் சேலையையும் நகைகளையும் அணிந்து, தலை அலங்காரமும் கழுத்தில் மாலைகளுமாக சிங்காரத் தேர்போல அசைந்து வந்துமணையில் நலங்கிற்காக அமர்ந்த ரேவதி எத்தனை அடக்கமாக இருந்தாள்.

மாப்பிள்ளை வீட்டில் இருந்து வந்த சுமங்கலிப் பெண் என்கிற தகுதியில் துளசிதான் முதலாவதாக நலங்கு வைத்தாள் குங்குமத்தைத் தொட்டு பொட்டு வைத்து, சந்தனத்தை ரேவதியின் பட்டுக்கன்னங்களில் தடவி கைகளில் சிறிது பூசி, பன்னீரைத் தெளித்துவிட்டு ஆலம் சுற்றிய போது மெல்ல தலை நிமிர்ந்து பார்த்த

அவள் நன்றியுடன் புன்னகைத்தாளே! அப்போது எத்தனை அழகாகத் தெரிந்தாள் பெண்ணுக்குத்துளிகூடக் கர்வம் கிடையாது என்பதை அந்தப்பால் வழிந்த முகம் சொல்லியதே. சிவகுரு ரொம்பவும் கொடுத்து வைத்தவன் என்று துளசி தன்னுள் எண்ணி மகிழ்ந்தாள்.

"நாங்கள் வர்றோம். முகூர்த்தத்தைச் சீக்கிரமே வச்சுக்கோங்க. சுபகாரியங்களைத் தள்ளிப் போடக் கூடாது' என்றபடி துளசி கணவனுடன் விடைபெற்றுக் கொண்டு அன்று இரவே கிளம்பி விட்டாள்.

முன்னறை இருக்கையில் சாய்ந்து கொண்டிருந்த சிவகுருவின் மனதிலே மகிழ்ச்சி கொப்பளித்துக் கொண்டிருந்தது.

முருந்தன் வந்து மிரட்டிய செய்தியை அம்மாவிடம் சொல்லாதது நல்ல காரியம். அம்மாவுக்குத் தெரிந்திருந்தால் மனம் கலங்கிப் போயிருப்பாங்க. நிச்சயத்தின் போது அத்தனை கலகலப்பாக கலந்து கொண்டிருக்க முடியாது. ரேவதிக்கு இது வேண்டாதவை. மனது பாரமாக இருந்திருந்தால் அத்தனை அமைதியுடன் இருந்திருப்பாளா? நலங்கு நடந்த சமயம் பெண்கள் வேடிக்கை செய்தபோது அவளும் மெல்லப்பார்த்து முறுவலித்தாளே? வற்புறுத்தப் பட்ட சங்கதியாக இருந்தால், அழுது முகம் வீங்கி கலங்கிய கண்களுடன் அல்லவா சபையில் வந்து நின்றிருப்பாள். அவளுக்கு அவனைப் பிடித்திருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை என்று எண்ணி பலவித கற்பனைகளில் அவன் ஆனந்தமாக மிதந்து கொண்டிருந்தான்.

ரேவதி ஏதாவது இடக்கு செய்து சபையில் பலர் முன்னிலையில் தம்மை அவமானப்படுத்திவிடப் போகிறாளே என்று திகில்பட்டுக் கொண்டிருந்த தில்லை நாதனுக்குப் பெருத்த மன அமைதி. முரண்டு பிடித்த

பிடித்த கொண்டிருந்த மகள் முடிவில் அடங்கிப் போயிருக்கிறாள் என்று அகமகிழ்ந்து போனார்.

அம்மா, அண்ணன், அண்ணி எல்லோருமே எதிர் பார்க்கவில்லை. யார் செய்த புண்ணியமோ. ரேவதிக்கு இப்போதாவது புத்தி வந்ததே. அது போதும் என்று அவர்கள் எல்லோரும் மகிழ்ந்து போனார்கள்.

ஆனால் ரேவதி? தன் குடும்பத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வகைகளைப் பற்றி தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

உனக்கு என்னைக் கட்டிக் கொள்ள விருப்பமா? என்று ஒரு வார்த்தை கூடக் கேட்காது. ஆளை விழுங்கி விடுகிறவன் போல வெறித்துக் கொண்டு பணக்கார வீட்டு சம்பந்தம் கிடைத்து விட்டது. பகல் கொள்ளை யடிக்கலாம் என மனப்பால் குடிக்கிறான் சிவகுரு. அவனை நான்கு பேர் மத்தியில் தலை குனிய வைக்கப் போகிறாள். அவள் மேலும் கீழும் மவுனப் பார்வையில் ஊடுருவிக் கொண்டிருந்த செந்தாமரை மட்டும் லேசா? பணக்கார சம்பந்தம் என்று பதறிக் கொண்டு ஓடி வந்திருக்கிறான் பேராசைக்காரி... அவளை அவமானத்தில் துடிதுடிக்க வைக்க வேண்டாமா?

வரப்போகும் அதிர்ச்சியைத் தெரிந்து கொள்ளாது ஆர்ப்பாட்டமாக வளைய வரும் அண்ணி உண்மையை உணரும் போது ஊமையாகி அடுப்பங்கரையிலேயே அடக்கமாகி விடப்போகிறாள் அவளது அட்டகாசங்கள் அழிந்து போகும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பலவும் எண்ணித் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள் ரேவதி

தன் தோழி லாவண்யாவின் புத்திசாலித்தனத்தை தன்னுள் மெச்சிக் கொண்டாள். இனி விட்டவர்கள் கவலையற்று அவளைக் கண்காணிப்பதை விட்டுவிடுவார்கள்.

இந்த நேரத்தை உபயோகித்து அவள் தோழியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேலே என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனைகள் கேட்டாக வேண்டும்!

திருமணத்திற்குத் தேதி வைத்து அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு விட்டன. நாட்கள் வேகமாக நகர்ந்து அந்த நாளும் வந்துவிட்டது.

மாப்பிள்ளைக்கு அத்தனை வசதி போதாது. அதனால்தான் திருத்தணியிலே கல்யாணத்தை வைத்துக் கொண்டார்கள் என்ற பலத்த கிசுகிசுப்பு உறவினர்கள், நண்பர்கள் இடையே பரவியிருந்தது வரவேற்பு இல்லையாமே? தில்லைநாதன் பெரிய கருமியாக இருக்கிறாரே?

பரிசு வேண்டாம்; உங்கள் ஆசிகள் நிறைய வேண்டும் என்று பத்திரிகையில் போட்டிருக்கிறார்களே — இதன் பொருள்?

ரேவதிக்குப் பிறகு கட்டிக் கொடுக்க வீட்டில் வேறு பெண் யாரும் கிடையாது. அதனால் மொய் எழுதும் தொல்லை வேண்டாம் என்று தடுக்க இது ஒரு உபாயமோ? நமக்குச் சிரமம் விட்டது. பஸ் பிடித்து விடியற்காலையிலே போய் சேர்ந்து முகூர்த்தம் முடிந்ததும் சாமியைக் கும்பிட்டுவிட்டுச் சோத்தைத் தின்னுவிட்டு, மறுபடி ஊர் திரும்பிவிடலாம். பஸ் செலவோட போச்சு என்று உறவினர்கள் பேசிக் கொண்டனர்.

சேலைக் கடைக்கோ, பாத்திரக் கடைக்கோ ரேவதி அண்ணியுடன் போகவே இல்லை. எல்லாம் கலாவின் விருப்பப்படியே ஆகட்டும் என்று ஒப்புதல் தந்து விட்டாள்.

திருமணம் மிகவும் இனிதாக, அமைதியாக திருத்தணியில் விடியற்காலை முகூர்த்தத்தில் நடந்தது. வந்தவர்களுக்குக் காப்பி, டிபன் கொடுத்து உபசரித்தனர்.

மணமக்கள் உடனடியாக உறவினர்களுடன் மலை யேறி தணிகைநாதனுக்கு அபிஷேக ஆராதனை செய்து வணங்கினர்.

பின்னர் பகல் விருந்தில் எல்லோருடனும் கலந்து கொண்டனர், அருகில் இருந்த பதிவு அலுவலகத்திலே திருமணத்தைப் பதிவு செய்துவிட்டு மாலை காபி டிபனுக்குப் பிறகு, மணமக்கள் அங்கிருந்தபடியே தேன் நிலவுக்கு மைசூருக்குப் போவதாக ஏற்பாடு.

தமது கார்களில் ஒன்றை அதற்காக ஒதுக்கி விட்டிருந்தார் தில்லைநாதன். அந்தச் சிலநாள் ரேவதியுடன் தனியே இருக்க விரும்பிய சிவகுரு தானே வண்டியை ஓட்டிப் போக விரும்பினான்.

எல்லா ஏற்பாடுகளும் துரிதமாக நடந்து கொண்டிருந்தன. மாலை காப்பி டிபனுக்கு பின்னர், தலையலங்காரத்தைக் கலைத்து விட்டு முகத்தைக்கழுவி பொட்டிட்டுத் தலையைத் பின்னலிட்டு பூச்சூட்டி அலங்கரித்துக் கொண்ட ரேவதி, சாதாரணமான ஒரு கைத்தறி நூல் சேலை அணிந்து கொண்டு புறப்பட ஆயத்தமானாள்.

"நல்ல நேரம். மணமக்கள் கிளம்பட்டும்" என்று பெரியவர் ஒருவர் குரல் கொடுக்க, மண்டபத்து அறையை விட்டு வெளியே வந்த ரேவதி, தலையைப் பிடித்துக் கொண்டு கீழ்சென்று அலறினாள்.

யாரும் அருகில் வருமுன், கூடத்தில் விரித்திருந்த பட்டுப் பாய்மீது தடால் என்று மயங்கி விழுந்தாள். கைகளும் கால்களும் பலமுறை இழுத்துக் கொண்டன. எல்லோரும் பயந்து நடுங்கி விட்டனர்.

"இதென்ன கூத்து? பெண்ணுக்குக் காக்காய் வலிப்பா?" கலங்கிப் போனாள் செந்தாமரை.

10

மங்களத்தால் நம்பவே முடியவில்லை குழந்தைப் பருவத்தில் இருந்து அன்று ஆரோக்கியமாக வளர்ந்தவள் ரேவதி திடீரென்று அவளுக்கு வலிப்பு வருவானேன்? மாப்பிள்ளை வீட்டார் என்ன நினைப்பார்கள்.

நோயாளிப் பொண்ணை தங்கள் தலையில் கட்டி விட்டதாகக் கோபித்துக் கொண்டு ஒதுக்கி வைத்துவிட்டால்? எதுவும் பேச முடியாது துயரத்தில் குழம்பிய வளாக வளைய வந்து கொண்டிருந்தாள்.

உடனடியாக மருத்துவ சோதனைகள் நடந்தன. இரத்த பரிசோதனையில் இருந்து ஸ்கான் வரை எல்லாம் செய்து பார்த்துவிட்டனர் வலிப்பு வருவதற்குக் காரணம் ஒன்றும் பிடிபடவில்லை.

''கவலைப்படாதீங்க. இது வலிப்பு நோய் இல்லை கல்யாணத்தின் போது ஏற்பட்ட அசதியால் மயங்கி விழுந்திருக்கிறாள். சில நாட்கள் ஓய்வாக இருந்தால் போதும்'' என்று குடும்ப டாக்டர் முடிவாகச் சொல்லி விட்டார்.

மங்களம் நிம்மதியாக மூச்சு விட்டாள். ஒருவார காலம் வீட்டில் வைத்துக் கொண்டிருந்து விட்டு ஒரு நல்ல நாள் பார்த்து, புக்ககத்தில் கொண்டு மகளை விட்டு வரத் திட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

தேன்நிலவுக்குப் போக முடியாது போனதைப்பற்றி சிவகுரு கவலைப்படவில்லை. தன் அன்பு மனைவிக்குத் திடீரென்று வலிப்பு நோய் வந்து விட்டதே என்றுதான் தவித்துப் போனான். டாக்டரின் முடிவு அவனுக்கு ஆறுதலைத் தந்தது. சில நாட்கள் ஒய்வாகப் பிறந்த வீட்டிலேயே இருக்கட்டும் என்று அனுமதித்திருந்தான்.

ஆனால் ஒரு நாளைக்கு இரு வேளை அவளை வந்து பார்க்கத் தவறவில்லை.

வீட்டிற்குத் திரும்பிய ரேவதி நோயாளி போல படுக்கையிலேயே கிடந்தாள் பார்க்க வந்தவர்களிடம் எதுவும் பேசாது கண்களை இறுக்க மூடிக் கொண்டாள்.

கலாவுக்கு உள்ளுக்குள் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது நோய் ஏதுமில்லை என்று டாக்டர் சொல்லி விட்டாரே! இன்னமும் ஏன் படுக்கை! இது என்ன புது சண்டித்தனம்? அவளுக்கு மிகவும் எரிச்சலாக இருந்தது.

அந்த நேரத்தில், ஜெர்மனியில் நடக்க இருக்கும் அகில உலக வியாபாரக் கூட்டத்திற்கும் பிரதிநிதியாகச் செல்ல, சிவகுருவை அவனது கம்பெனி நேர்ந்தெடுத்து இருந்தது. கூட்டம் முடித்ததும் தொடர்ந்து ஒரு மாத காலம் அந்த நாட்டில் சுற்றுப் பயணம் செய்து பல தொழிலகங்களை நேரில் பார்த்து வியாபார நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு வர வேண்டிய முக்கிய பொறுப்பு அவனுக்கு கொடுக்கப் பட்டது. திரும்பி வந்தவுடன் உத்தியோக உயர்வும் சம்பள அதிகரிப்பும் அவனுக்குக் காத்துக் கொண்டிருந்தன, வரப்போகும் மருமகளின் அதிருஷ்டம் என்று மனம் மகிழ்ந்திருந்தாள், மாமியார்.

சிவகுருவுக்கு உள்ளூர மகிழ்ச்சி. முடியுமானால் தன் மனைவியுடன் வெளிநாட்டுக்குப் பயணம் செய்யலாம் என்றதொரு ஆசை அவனுக்கு.

தில்லைநாதன் தன் மனைவி, மகள் இருவருடன் வெளிநாட்டு பயணம் ஒன்றுக்கு அந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே புறப்பட திட்டமிட்டிருந்தார். அதற்கு வேண்டிய பாஸ்போர்ட் எடுத்துத் தயாராக வைத்திருந்தார்.

அதனால், மனைவியுடன் ஜெர்மன் நாட்டுக்குப் புறப்படலாம் என்று மனப்பால் குடித்த சிவகுருவுக்கு பெருத்த ஏமாற்றம்.

"கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது. ரேவதி நம்ம விட்டுப்பெண். சில நாட்களில் வந்துவிடுவாள். நீ உன் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்துவிடு. பிறகு ஒரு நல்ல நாள் பார்த்து மருமகளை நான் வீட்டுக்கு அழைத்து வந்து விடுகிறேன். பின்னர் தேன் நிலவுக்கு நீ புறப்படலாம்" என்று மகனுக்கு செந்தாமரை ஆறுதல் கூறினாள்.

அது தருத்த யோசனையாகப் படவே, வெளிநாட்டுக்குக் கிளம்புமுன் ரேவதியிடம் சொல்லிக் கொண்டு போக வந்தான். "கவலைப்படாதே! ஒரு மாதம் ஒரே தொடியாக ஓடிப்போய் விடும். திரும்பி வரும்போது, உனக்கு நல்ல பரிசுகள் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று கொஞ்சலாகக் கூறி அவளது கன்னத்தை வருடினான்.

ரேவதி தலையை ஆட்டினாள். வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. அதற்குப் பின்னர் ரேவதி எழுந்து நடமாடத் தொடங்கினாள். முதலில் வீட்டுக்குள் வளைய வந்தவள், தோட்டத்தில் உலாவத் தொடங்கினாள் பின்னர் காரை எடுத்துக் கொண்டு அடிக்கடி வெளியே போய்வரத் தொடங்கினாள். தானே காரை ஓட்டிக் கொண்டு அவள் வெளியேபோய் வருவது கலாவுக்கு அத்தனை பிடித்தமாக இருக்கவில்லை.

மருமகளைப் பார்க்க செந்தாமரை வந்த போதெல்லாம் ரேவதி வீட்டில் இல்லாது வெளியே சென்றிருந்தாள்.

கலாவுக்கு அதைச் சொல்ல மிகவும் அவமானமாக இருந்தது. மாமியாரை ரேவதி அசட்டை செய்வதைப் பார்த்துக் கொண்டு இருக்க அவளால் முடியவில்லை.

அன்று மாலை செந்தாமரை கூடை நிறையப் பழங்கள் வாங்கிக் கொண்டு மருமகளைப் பார்க்க வந்திருந்தாள். அன்றும் சொல்லி வைத்தாற்போல ரேவதி

காரை ஓட்டிக் கொண்டு வெளியே போயிருந்தாள். கடைத் தெருவை நாள் நவராது சுற்றிவரும் அவளுக்கு ஒரு நிமிடம் மாமியாரைப் போய் பார்த்து வர எண்ணம் ஏற்படவேயில்லை.

ஆமாம், இந்தப் பெண் என்னதான் எண்ணிக் கொண்டிருக்கிறாள். அண்டுவார் அடக்குவார் இன்றி இப்படி அலைய வேண்டுமா? என்று எண்ணிக் கலா மிகவும் வெகுண்டு போனாள்.

அன்று மாலை வெளியே போயிருந்த ரேவதி இருட்டிய பின்புதான் வீடு திரும்பினாள் வெகுநேரம் காத்திருந்து விட்டு, மாமியார் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டாள்.

ரேவதி அடங்காப்பிடாரித்தனத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாகவேண்டும் என்று மனம் கொதித்துக் கொண்டிருந்த கலா, அவள் வீட்டுக்குள் நுழைந்ததும் கேட்டாள். "கல்யாணமாகாத போதுதான் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தே அதன் பயனாக வீணான வம்பு களை விலைக்கு வாங்கினே. கவுரவமா ஒரு நல்ல இடத்திலே கல்யாணம் ஆகியிருக்கு. இதுக்குப் பிறகும் இப்படி ஊரைச் சுற்றி வருவது உனக்கே நல்லா இருக்கா? உன் மாமியார் என்ன நினைப்பாங்க? உன் கணவன் ஊரில் இல்லாதபோது ஒருநாள் போல கடைத்தெருவிலே மார்வலம் வந்தால் பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க. மரியாதைக்காவது உன் மாமியாரை நீ போய் ஒருமுறையாவது பார்த்துட்டு வர வேண்டாமா?' என்று கோபத்துடன் இரைந்தாள்.

"அண்ணி! இந்த அதட்டல் மிரட்டலை எல்லாம் மூட்டை கட்டி வையுங்கள். இனி நான் உங்கள் பாதுகாப்பில் இல்லை என்பதை மறக்காதீங்க. நான் மேஜரான பெண். அத்துடன் கல்யாணமானவள். என்னை அதட்டிக் கேட்க உங்களுக்கு ஒரு உரிமையும் கிடையாது." பதிலுக்கு வெடித்தாள் ரேவதி.

அந்நிலையில் இருந்து வந்த சரவணனுக்கு கோபம் ஆவேசமானது. கொஞ்ச நாட்களாக மிகவும் அடங்கிப் போனவள் போல காணப்பட்ட ரேவதி மறுபடியும் ஆரம்பித்து விட்டாளே தனது ஆர்ப் பாட்டத்தை!

தில்லைநாதனுக்கு ஆத்திரம் கட்டுப்படுத்த முடிய வில்லை. ''அண்ணிகிட்டே என்ன சொன்னே?'' என்று உரக்க கேட்டபடி கையை ஓங்கிக் கொண்டு வந்தார்.

''அப்பா! நான் உங்கள் மகள்தான். ஆனால், வேறு ஒருவன் மனைவி பெண்ணைக் கட்டிக் கொடுத்த பிறகு, பிறந்த வீட்டுக்காரங்களுக்கு அவள் மேலே ஏந்தவித உரிமையும் கிடையாது. கையைக் கீழே போடுங்கள். நான் உங்கள் அடிமையில்லை'' என்று சீறினாள் ரேவதி.

தில்லைநாதன் அதிர்ந்து போனார் வளர்த்த கடா மார்பில் பாய்கிறது...மேலே பேசினால் மரியாதை கெட்டு விடும் என்று சட்டென்று திரும்பி மாடிப்பக்கம் விரைந்து விட்டார்.

''இனிமேல் நாங்கள் யாரும் உனக்கு வேண்டிய தில்லையா? எங்கள் தயவு அரவணைப்பு எதுவுமே தேவையில்லையா?'' அண்ணன் அதட்டலாகக் கேட்டான்.

''அப்படித்தான் வச்சுக்கோங்க. அந்தத் தேவை களைக் கொடுக்க கல்யாணம் என்கிற கால்கட்டிலே ஒரு ஆசாமியை ஏற்படுத்தி வச்சிருக்கீங்களே,'' ஏளன மாகக் கேட்ட தங்கையை வெறித்துப் பார்த்தான்.

இவள் ஏதோ ஒரு பயங்கரமான தவறை செய்து அவர்களை அவமானப்படுத்த திட்டம் போட்டிருக் கிறாள் கடவுளே கல்லூரிக்குப் போகும் வரை மிகவும் அடக்கமாக அன்பான தங்கையாக இருந்தவளிடம் இந்த இரு தலைத்தனம் எப்படி வந்தது? இதற்கு பொறுப்பாளி யார்? என்று மனம் தொறுங்கிப் போனான் மேலே பேச முடியாது அவனும் மாடியறை பக்கம் விரைந்து விட்டான்.

ONNEMAN PUBLIC LIBRARY 27 OCT

ரேவதி தனக்குள்ளே புன்னகைத்தபடி, முன்னறை யில் ஒரு இருக்கையில் வெற்றி உணர்வுடன் சாய்ந்து கொண்டாள்.

19

அன்று மாலை லாவண்யாவின் வீட்டிற்கு முகுந்தன் வந்திருந்தான். ''சின்னம்மா சவுக்கியமா?'' என்று புன்னகை மலர்ந்த முகத்துடன் அவன் விசாரித்தபோது லாவண்யாவின் தாய் எரிச்சல் பட்டாள்.

படிப்பை முடிக்காது, வேலை ஒன்றையும் தேடிக் கொள்ளாது வெட்டியாகத் திரிந்த முகுந்தன் தங்கள் இல்லத்துக்கு அடிக்கடி வருவதை அவர்கள் விரும்ப வில்லை என்னதான் உறவு என்றாலும், தங்கள் மகள் அவனுடன் தனியாக அமர்ந்து வார்த்தையாடுவதை வெறுத்தனர்.

''நான் சவுக்கியந்தான். அக்கா! கிராமத்திலே சும்மா எப்படி இருக்காங்க அவங்களைக் கூட்டிக் கொண்டு வந்து வச்சுக்கொண்டு ஒரு வேலையிலே ஒட்டிக் கொண்டு நீ காலாகாலத்தில் கல்யாணம் செய்துக் கொண்டு வாழணும்னு விரும்பறேன்!'' மறை முகமாக அவளைச் சாடினாள் லாவண்யா அம்மா!

காப்பி தம்ளர் எடுத்துப் போக உள்ளே வந்த மகளி டம் கடுமையாகப் பேசினாள். ' அவன் தனியா ஒரு வீடு வச்சுக்கொண்டு தாறுமாறா வாழ்கிறான்னு அப்பா கேள்விப்பட்டு மனம் வருந்தினார். நீ அங்கே போனாயோ காலை முறிச்சுடுவேன்...'' சீறினாள்.

''முகுந்தன் உறவில் எனக்கு அண்ணன். ஏன் கவலைப்படணும்.''

' அங்கே எந்த பொறுக்கிப்பயல்கள் எல்லாம் வரான்களோ? பெண் பிள்ளை இல்லாத வீட்டுக்கு நீ

போகத் தேவையில்லை...' அம்மா சொல்லி முடிக்கு முன் வாயில் அழைப்பு மணி ஒலித்தது.

போய் திறந்தவள் முகம் சுருங்கிப் போனாள். கல்யாணமான பெண், அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வருவானேன்?

ரேவதியை உட்காரச் சொல்லி உபசரித்து விட்டு மகளிடம் வேகமாக வந்தாள். ''முகுந்தன் இனிமேலே இங்கேவரக் கூடாது. அவன் இங்கே வந்திருக்கும் போது உன் சிநேகிதி ரேவதியைக் கூப்பிட்டு வச்சுக் கொண்டு குலாவக்கூடாது. முகுந்தன் அவளிடம் சொம்ப தாராளமாகப் பேசி பழகுகிறது எனக்கும் அப்பாவுக்கும் பிடிக்கலை. பெரிய மனிதர் வீட்டுவம்பை நாம் விலைக்கு வாங்க முடியாது'' கண்டிப்பாகக் கூறி விட்டாள்.

கல்யாணமான பின்னர் வீட்டவர்களுக்குத் தெரியாது கள்ளத்தனமாக முகுந்தனை அங்கே சந்திக்க ஏற்பாடு செய்திருந்தாள் ரேவதி. எல்லாம் லாவண்யாவின் ஏற்பாடு. அவளுக்கு முகுந்தன் எப்படிப்பட்டவன் என்பதைப் பற்றி அக்கறை இருக்கவில்லை. ரேவதி பணக்கார வீட்டுப் பெண். வசதிகளுடன் வாழ்கிறவள் என்று அடி நாளில் இருந்தே பொறாமை இருந்தது. நாளாக அது விஷமாக ஏறிக்கொண்டு போனது. முகுந்தனைப் போல ஒரு வேலையற்றவனுக்கு, நடத்தை மட்டமான வனுக்கு அவளைக் கட்டிவைத்து, பணக்காரத்தனத்தை முறியடிக்க வேண்டுமென்ற ஒரு வக்கிரமான ஆசை அவளுக்கு இருந்தது.

முகுந்தனும் ரேவதியும் பார்த்த அளவில் விரும்பியதை அவள் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டிருந்தாள். முகுந்தனைப் பற்றி அவள் அதிகம் அறிவாள். அவனுக்கு காதல் என்பதில் நம்பிக்கையில்லை என்பதும் அவளுக்கு நன்றாகத் தெரியும்.

இதற்கு முன், இரண்டு பெண்களிடம் அவள் அவனுக்காகத் தூது நடந்த அனுபவமும் உண்டு. சிங்கப்

பூரில் இருந்து அவன் அவ்வப்போது நண்பர் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு சென்ட், சேலை முதலியவற்றை அவளுக்கு லஞ்சமாகக் கொடுத்தான். கல்லூரித் தோழிகளிடம் வாங்கியதாக அவள் அதைத்தன் வீட்டில் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருந்தாள். ரேவதி விஷயத்திலும் அவளிடம் இருந்து பெரிய பரிசுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

முகுந்தனை ரேவதி கல்யாணம் செய்து கொண்டால், ரேவதியின் கர்வம் அடங்கும். காதல் என்று தவறாக எங்கேயோ காலைவிட்டுக் கொண்டு தவிப்பாள். பணக்காரத் திமிர் அடங்கும். அவளது அண்ணியின் மூக்கு அறுபடும். அவள் மூலமாகச் சொத்தை அடையப் போகும் முகுந்தன், அந்த உதவிக்கு அவளுக்கு கணிசமாக ஏதாவது பரிசு தர தயங்க மாட்டான் என நினைத்த அவளது எதிர்பார்ப்பில் மண் விழுந்து விட்டது ஆனாலும், அவள் தளர்ந்து விடவில்லை.

சிவகுருவை நீ திருமணம் செய்து கொள். பிறகு, விவாகரத்து பெற்று, உன் மனதைக் கவர்ந்தவனை நீ கல்யாணம் செய்து கொள்ளலாம். இந்தக் கல்யாணம் வெறும் கண் துடைப்பு. உன் சுதந்திரத்தை நீ பெற்று, தன்னிச்சையாக வாழ ஒரு உபாயம் என்று அவள் அடிக்கடி கூறிய மூலமும், தொலைபேசி வழியாகவும், நேரில் சந்திக்கும் போதும் போதித்துப் போதித்து ரேவதியின் அறிவை மழுங்கச் செய்திருந்தாள்.

உண்மையை உணர்ந்து கொள்ளாது விளக்கொளியில் மடியப் பறந்துவரும் விட்டில் போல ரேவதி, படுகுழியில் விழத்தயாராக இருந்தாள்.

ஆனால், அம்மாவின் கண்டிப்பினால் லாவண்யா தன் தோழியையும் முகுந்தனையும் தன் வீட்டிலே தொடர்ந்து சந்திக்கச் செய்து அவர்களது நகாத நட்பை மேலே வளர்க்க இயலவில்லை.

''ரேவதி என்னிடம் பூவேலை கற்றுக் கொள்ள வருகிறாள் நீங்க ஏன் முகத்தைக் காட்டுகிறீங்க. அவங்க வீட்டிலே நான் எத்தனை வாட்டிப்போய் தெருக்கமா, உறவுக்காரப் பெண்போல சீராடியிருக்கேன். இன்னும் கொஞ்ச நாளில் கணவன் வீட்டுக்குப்போய் விடுவாள்'' என்று தாயாரின் சம்மதத்தை ஒருவழியாகப் பெற்று இருந்தாள். எம்பிராய்டரி சொல்லிக் கொடுப்பது போன்று துணியுடன் நூலும் ஊசியும் வைத்து உட்கார்ந்து கொண்டு, ரேவதிக்கு உரை ஏற்றிக் கொண்டிருந்தாள்.

பெற்றோருக்குத் தெரியாது முகுந்தனைக் கடைத் தெருவிலோ, கல்லூரி வாசலிலோ சந்தித்து, ரேவதிக்கும் அவனுக்கும் இடையே தூது சென்று கொண்டிருந்தாள். இந்தப் பணி அவளுக்கு சுவாரசியமாக இருந்தது.

அன்று காலை, ரேவதி ஆட்டோவில் புறப்பட்டு லாவண்யா வீட்டிற்கு வந்திருந்தாள். கல்யாணத்திற்குப் பிறகு, அவள் முகுந்தனை ஒரே ஒரு நடவை தான் அந்த வீட்டில் சந்தித்துப் பேசினாள்.

லாவண்யாவின் அம்மா அடிக்கடி முன்னறையில் வந்து எட்டிப்பார்த்துக் கொண்டிருந்ததால் மனம்விட்டு பேச இயலாது தத்தளித்துக் கொண்டிருந்தாள். முகந்தன் அவள் மீது இன்னமும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறான் என்றே ரேவதி நம்பினாள். அவனுக்குத் துரோகம் செய்துவிட்டு சிவகுருவை மணந்து கொண்டதாக எண்ணிக் குற்ற உணர்வில் குமைந்தாள்.

''இன்னமும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. தாலியைக் கட்டி விட்டால் மட்டும், ஒருவன் கணவனாகிவிட முடியாது. சிவகுரு தாலி கட்டிய கையோடு... வெளிநாட்டுக்குப் புறப்பட்டுப் போய் விட்டதில் இருந்து தெரியவில்லையா? அவனுக்கு உத்தியோகம்தான் பெரியது. உன் பணத்துக்காக உன்னைத் திருமணம் செய்து கொண்டவன்...'' என்று முகுந்தன்

சொல்லச் சொல்ல... ரேவதி எச்சிலை விழுங்கிக் கொண்டு கண்களில் நீர் பனிக்க தரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

''நடந்ததைப் பற்றி நாம் கவலைப்படுவதில் பொருள் இல்லை. இனி நடக்க வேண்டியதைச் சிந்திக்கணும்.''

மவுனமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். மனம் குழப்பத்தில் தவித்தது.

''உனக்கு இனிதான் துணிவு அதிகம் வேண்டும். என்மேல் பூரண நம்பிக்கை வேண்டும் உன் வீட்டவர்களை எதிர்த்து சமூகத்தைப் பற்றி அலட்சியமாக நினைக்கும் தெம்பு வரவேண்டும். நான் என்ன திட்டம் வகுக்கிறேன் என்பதை அவ்வப்போது லாவண்யா மூலம் சொல்லி அனுப்புகிறேன் அதன்படி நடந்தால், இருவருக்கும் நல்லது நமக்கு ஒளிமயமான வருங்காலம் உண்டு!'' மிகவும் கனிவாக இனிமையாக, மயக்கம் தரும் வகையில் பேசினான்.

ரேவதி படித்த பெண் ஆனாலும், கிணற்றுத் தவளையாகி, பாழுங்கிணற்றுக்குள் தானே சென்று விழத் தயாராகித் தலையை ஆட்டினாள்.

அடுத்த முறை ரேவதி வீட்டிற்கு வந்தபோது, உட்கார வைத்து உபசரித்துவிட்டு, முகுந்தன் சொன்ன திட்டம் ஒன்றை அவளுக்குச் சொன்னாள் லாவண்யா.

திக்கென்று அதிர்ந்து போனாள், ரேவதி. முகம் சிவக்க, நெஞ்சு பதற, பேசத்தோணாது அயர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

20

அன்று மாலை வீடு திரும்பிய ரேவதி, யாரிடமும் பேசவில்லை அவள் நெஞ்சில் திகில் நிறைந்திருந்தது. லாவண்யா வெகு அசட்டையாகச் சொல்லிவிட்டிருந்தாள் ஆனால், நடைமுறையில் அவளால் சாதிக்க முடியாத சங்கதி அது படித்துவிட்டோம் என்ற திமிரில் இளமையின் தடுமாற்றத்தில் ரேவதி துணிந்துபோய்ச் சில காரியங்களைச் செய்த போதிலும், கட்டுப்பாடாக வளர்க்கப்பட்ட அவளால், லாவண்யாவின் திட்டப்படி செயல்பட முடியுமா என்ற சந்தேகம் மனதைக்குழப்பிக் கொண்டிருந்தது.

அதை நினைத்த போதெல்லாம் அவளுக்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. லாவண்யா எம்பிராய்டரி வேலை செய்வதுபோல போக்குக் காட்டிக்கொண்டு, அம்மாவுக்கு கேட்காத வண்ணம் தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"இந்தக் கல்யாணத்தில் இருந்து விவாகரத்து வாங்கிக்கொள்ள, இருவருடைய சம்மதமும் போதும். ஆனால் ஒருவரை ஒருவர் பாராது—பேசாது ஒரு வருட காலம் கணவனும், மனைவியும் பிரிந்து இருக்க வேண்டும். விவாகரத்து வாங்கிக் கொண்ட பின்னரும் உடனடியாகத்திருமணம் செய்துகொள்ள முடியாது ஒருகால வரம்பை சட்டம் விதித்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் இரண்டாவது திருமணம் அவ்வளவு காலம் உனக்காக முகுந்தன் காத்திருக்க முடியுமா?"

ரேவதி கவலையுடன் தோழியைப் பார்த்தாள்.

"இப்படிச் செய்தால் என்ன? இன்னும் சில தினங்களில் நீ வீட்டைவிட்டுக் கிளம்பி, முகுந்தனுடன் பம்பாய் அல்லது ஐதராபாத்திற்கு சென்று கணவன்-மனைவியாக வசித்தால் என்ன? மனதில் அன்பு இருந்தால் கல்யாணம் என்கிற கட்டுப்பாடு தேவையே இல்லை."

திடுக்கிட்டுப்போனாள் ரேவதி அவளை லாவண்யா உள்ளத்தமாக முகுந்தனுடன் ஓடச்சொல்கிறாள்?

அவள் செல்து கொண்டு வரும் காரியம் ஏற்கனவே பெருத்த தவறு இந்த பயங்கரமான தவறை செய்து அவள் குடும்பத்தின் கவுரவத்தை நாசம் செய்ய முடியுமா? மனசாட்சி மனலாக உறுத்தியது.

"லாவண்யா, இது உன்னுடைய யோசனையா?" ரேவதி கேட்டாள்.

"முகுந்தனுடைய யோசனையும் இதுதான்!" அழுத்தமாகச் சொன்னாள், தோழி.

"இந்தக் காரியத்தை என்னால் செய்ய முடியாது என்று நினைக்கிறேன்!"

"சே! நீ பெரிய கோழை."

"நான் என் அப்பாவைப் பற்றியும் ஓரளவு சிந்திக்க வேண்டியிருக்கு. என் தந்தைக்கு இந்த அதிர்ச்சியால் மாரடைப்பு வந்து மரணம் ஏற்பட்டால்..."

"அதையெல்லாம் பார்த்தால் உன் மகிழ்ச்சியான வாழ்வு என்னாவது."

"நான் இதற்கு உடன்பட விரும்பா விட்டால் ?"

கையிலிருந்த எம்பிராய்டரித் துணியைத் தூர ஏறிந்தாள் லாவண்யா, கோபத்துடன், அவள்தொடுத்த காரியத்தை முடிக்கவேண்டுமென்ற ஆவலில் இருந்தாள்.

ரேவதியின் இடக்கு அவளுக்குக் கட்டுக்கடங்கா கோபத்தைக் கொடுத்தது.

"உனக்காக நான் நாயாக இரண்டு பக்கமும் ஓடினது தான் மிச்சம்"

"என்னை என்ன செய்யச் சொல்றே?"

"இனி என்னாலே முகுந்தனிடம் தூது நடக்க முடியாது நீயே உன் மறுப்பை - அவனிடம் போய் தெரிவித்துக்கொள், பிறகு, உடன்பாடு அவன்பாடு."

லாவண்யா மனத் தாங்கலுடன்தான் ரேவதிக்கு விடைகொடுத்து அனுப்பினாள். அவள் புறப்படுமுன்,

மறுநாள் கடைத்தெருவில் புத்தகக்கடை அருகே உள்ள ஒரு சிறு துணிகடை முன்பு அவளுக்காக முகுந்தன் மாலை நான்கு மணி அளவில் காத்திருப்பதாகவும் கூறி அனுப்பினாள்.

ரேவதிக்கு ரொம்பவே பயமாக இருந்தது. கல்யாணமான பின்பு அவள் கடைத்தெருவிலும், கடற்கரையிலும் முகுந்தனை சந்தித்து பேசுவது பார்ப்பவர்களுக்கு மிகவும் அசிங்கமாகப்படுமே... அவளை வற்புறுத்தி அவளுடைய பெற்றோர்கள் சிவகுருவுக்குக் கட்டி வைத்திருக்கிறார்கள் அதற்காக...? ரேவதி பலவும் எண்ணி மனப் புண்ணானாள்.

இரவு உணவுக்குப் பின் மாடிக்குப் போனவள், தனது அறையில் படுக்கை மீது சரிந்து கொண்டு பல மணி நேரம் சிந்தித்தாள். கலா அண்ணியுடனும். அண்ணனுடனும் எத்தனைதான் மனத்தாங்கல் கொண்டாலும் அவர்களை வெறுத்தபோதிலும், வீடு என்ற அந்த அமைப்பு அவளுக்கு ஒரு பாதுகாவலாக இருந்தது உண்மை.

எங்கே சுற்றித் திரிந்தாலும் நான்கு சுவர்கள் கொண்ட வீடு என்பதற்குள் நுழைந்ததும், அப்பாடா என்றதொரு நிம்மதி ஏற்பட்டது மறைக்க முடியாத சங்கதி. அதைத் துறந்து விட்டு...கண்காணாத ஒரு இடத்திற்கு முகுந்தனுடன் அவள் புறப்பட்டுப் போவது முறையா?

ஆமாம்! முகுந்தனை எவ்வளவு தூரம் நம்ப முடியும்? எத்தனை கதைகளில் அவள் இதுமாதிரியான இளைஞர்களைப் பற்றிப் படித்திருக்கிறாள். பத்திரிகைகளில் எத்தனை சங்கதிகள் ஓடிப் போனவர்களைப் பற்றி வருகின்றன. சினிமாவில்கூட இதுமாதிரி சம்பவங்களைப் பார்த்திருக்கிறாளே? ஆமாம், முகுந்தன் என்ன வேலை செய்கிறான்? அவனுடன் பேசியவள் இதுவரை அதைப் பற்றிக் கேட்டதில்லை. திடீரென்று அவளுடன் புறப்பட ஆயத்தமானால், அவன் எந்த வேலையும் செய்யவில்லை என்றுதானே பொருள்? வேலை

யில்லாதவன் அவளை எப்படிப் பாதுகாக்க முடியும். கையில் இருந்த பணம் கரைந்ததும், ஒருவேளை அவளையும் தன்னோடு மூட்டைபூச்சி மருந்தைத் தின்று தற்கொலை செய்து கொள்ள வற்புறுத்தலாம் இல்லையா? இல்லாவிட்டால், சில கதைகளில் வருவது போல, அவளை எங்கேயாவது ஒரு லாட்ஜில் விட்டு அவன் ஓடிப்போய் விட்டால்...

மானம் இழந்து, பெண்மை அழிந்த பின் அவள் திரும்ப எப்படி வீட்டுக்கு வர முடியும்? ஓடிப் போவது என்பது அத்தனை சுலபமான சங்கதியா?

பலவாறு எண்ணி அச்சத்தில் மருண்டு, உணர்வுகள் துவண்டு —குழப்பத்திலே குமைந்தாள். விடியும் தருவாயில்தான் உறக்கம் வந்தது.

கலா அண்ணி வந்து கதவைத் தட்டியபோது அவள் விடுக்கென்று விழித்துக் கொண்டாள். குளித்து முடித்து விட்டு, மாற்றுடையில் மஞ்சள் பூச்சில், மின்னிய முகத்திலே குங்குமப் பொட்டோடு கலா அண்ணி குடும்பப்பாங்காய் பளிச்சென்று தெரிந்தாள்.

முகுந்தனுடன் புறப்பட்டுச் சென்று, மானம் அழிந்த பின் அவள் முகத்திலே அந்த அற்புதமான களை காணப்படுமா? ஒரு கணம் எண்ணி அதிர்ந்து போனாள் ரேவதி.

"வாம்மா! நேரமாச்சே! அப்பாவும் அண்ணனும் பலகாரம் காப்பி சாப்பிட்டு விட்டு, ஆபீசுக்குக் கிளம்பணுமே! எங்களோடு இருக்கின்றவரைதானே, கூட உட்கார்ந்து சாப்பிடப் போறே...பிறகு உன் வீட்டுக்குப் போனதும் அந்த பாக்கியம் எங்களுக்குக் கிடைக்காதே!" தணிவாக அண்ணி கூறியதைக் கேட்டதும் ரேவதி மனம் நெகிழ்ந்து போனாள்.

ஆமாம், இந்த அண்ணியின் மேல் அவள் ஏன் ஆங்காரப்பட வேண்டும்? அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு, வாயல் சேலை ஒன்றை உடுத்திக்

கொண்டு கீழே வந்த போது அப்பா அவளை அன்போடு அழைத்தார்.

"ரேவதி, இப்படி உட்கார்! உனக்கு பிடிச்ச குழாப்புட்டை உன் அண்ணி செய்திருக்கா—சாப்பிடும்மா—சில நாளா நீ நல்லாவே சாப்பிடுவது இல்லை" என்றார் கனிவாக.

"ரேவதி உன் கணவர் சிவகுரு என்னோட டிரங்காலில் பேசினார். சுகமாக இருக்காராம் விரைவில் திரும்பி விடுவாராம்" என்று அண்ணன் சொன்னான்.

"இட்லிகூட இருக்கும்மா, பிடிச்சதை போட்டுக்கோ அம்மா இடையே உபசரித்தாள்.

இந்த அருமையான குடும்பத்தை விட்டு, அவள் வெளியேறுவதா? "ஊகூம் முடியாது. முருந்தன் சொன்னதைக் கேட்டுக் கொண்டு சீரழிய முடியாது!" என்று அவள் தன்னுள் எண்ணிக் கொண்டாள்

அதேநேரம் அவள் மனதில் ஒரு முடிவு உருவாகியது.

21

அன்றுமாலை ரேவதி வெளியே கிளம்ப ஆயத்தமாகி கீழே வந்தாள். அலுவலக ஒய்வு தினம் ஆனதால் அன்று அண்ணனும் அப்பாவும் வீட்டில் இருந்தார்கள்

சரவணன் மட்டுமே கீமே டிபன் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான் அண்ணி கலா தனது பக்கம் நகர்த்திய டிபன் தட்டைத் தொட்டுக் கூடப் பாராது தேநீரை மட்டும் பருகி விட்டு ரேவதி எழுந்தாள்.

"நான் வருகிறேன்..." என்று பொதுவாகக் கூறி விட்டு நேரே வாசலுக்கு நடந்தாள். சரவணன் தன் மனைவியைக் கவலையுடன் திரும்பிப் பார்த்தான்.

"இதென்ன சங்கதி? ரேவதி ஒருநாள்கூட மாலை வேளையில் வீடு தங்குகிறதில்லை இப்படி ஊர் சுற்றுவது நன்றாகவா இருக்கு. நீ ஏன் கேட்கறதில்லை?" ஆதங்கத்துடன் விசாரித்தான்.

"ஆரம்பத்திலே உங்கள் தங்கை ரொம்ப முரட்டுத் தனமாகத்தான் நடந்து கொண்டாள் சில நாளாக அவளிடம் ஒரு மாறுதலை நான் பார்க்கிறேன். தான் செய்வது தவறு என்று அவளே புரிந்து கொண்டு வழிக்கு வரணும் என்பது என் ஆசை தோளுக்கு மிஞ்சிய பெண்ணை அடக்கிப் பணிய வைக்க முடியாது அவளுடைய அறிவு தான் அவளைப் பணிய வைக்க வேண்டும். வாயிலா பிராணிமாடு—அதுக்கே முள்ளு எது புல்லு எதுன்னு தெரியும் போது, பகுத்தறிவு உடைய ஒரு பெண்ணுக்கு நல்லது கெட்டது தெரியாவிட்டால் நாம் யாரையும் தொந்துக்க முடியாது" பட படவென்று கூறிவிட்டு கலா உள்ளே சென்று விட்டாள்.

மனைவி சொல்வது முற்றிலும் சரியென்றுதான் சரவணனுக்குப் பட்டது. ரேவதி இப்போது வேறு ஒருவர் வீட்டுப்பெண்ணாகிவிட்டாளே! அவளை அதட்ட உரிமை ஏது? கவலையுடன் பெருமூச்செறிந்தான்.

தோட்டத்தைத் தாண்டி வேகமாக வெறியேறி அவசரமாக நடந்தாள். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அவள் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டு இருந்தாள். அதைக் கேட்டதும் முருந்தன் என்ன சொல்வானோ என்ற திகில்!

விரைவாக நடந்து சாலை ஓரத்தில் நின்ற ஆட்டோவை அழைத்து ஏறிக்கொண்டாள். முருந்தனை சந்தித்த பின்னர் அவளுள் ஏற்பட்ட முரணான அந்த உணர்வுக்குத் தீனி போட அவள் இதுவரை செய்தகாரியங்கள் எல்லாம் வரிசையாக மனக்கண்முன் நின்றன. அவளுக்குள் ஒரு பெருத்த அதிர்ச்சி. கல்லூரிக்குப்

போய் வந்து, அம்மாவின் செல்லப் பெண்ணா அண்ணனின் அருமைத் தங்கையாக வீட்டில் வளைய வந்தவள் எப்படி மாறிப் போனாள்? எத்தனை பொய் சொன்னாள். என்னென்ன காரியங்களைச் செய்ய நினைத்தாள். இவைகள் அனைத்திற்கும் முகுந்தன் சிறிதும் தகுதியில்லாதவன். லாவண்யா கொடுத்த தவறான போதனையில் அவள் ஒரு தகாதவன் வலையில் அல்லவா சிக்கிவிட்டிருக்கிறாள்?

அடிவயிற்றில் இருந்து புரண்ட வேதனை நெஞ்சை அடைக்க அவள் லாவண்யா குறிப்பிட்டிருந்த அந்த இடத்தில் வந்து இறங்கினாள். ஆட்டோவுக்கு சில்லரையை எண்ணிக் கொடுத்து விட்டு சுற்றுமுற்றும் பார்த்தபடி சாலையைக் கடந்து எதிர்பக்கம் இருந்த அந்த கடை பக்கத்து சந்தில் மெள்ள நுழைந்தாள்.

முகுந்தன் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு சுவர் ஓரமாக ஒரு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டு கருப்புக் கண்ணாடியும், கழுத்தில் மப்ளரும், வெள்ளைச் சட்டையும், பேண்டுமான அலங்காரத்தில் நின்று கொண்டிருந்தான்.

பற்கள் அனைத்தும் தெரிய அவன் புன்னகைக்கும் போது வயிற்றில் நெருப்பைக் கொட்டி விட்டது போன்ற கலவரத்தில் அவள் குழம்பிப் போனாள். கவரவமான குடும்பத்தைச் சேர்ந்த அவளை ஒருவிவரம் கெட்ட பெண்ணைப் போல, தன்னுடன் ஓடி வரச் சொல்லி லாவண்யாவிடம் தூது விட்டிருக்கிறானே என்று அவளைப் பார்க்கும்போதே ஆத்திரம் பற்றிக் கொண்டுவந்தது அவளுக்கு. தன்னை அவன் எத்தனை மட்டமாக எண்ணி விட்டான் என நினைக்கும் போது, வேதனையில் அவள் நெஞ்சு விரிந்தது.

அவன் பேச ஆரம்பிக்குமுன் அவள் பரபரத்தாள். "லாவண்யா என்னிடம் சொன்னாள். உங்களுடைய

ஆலோசனை எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள் அழுத்தமான குரலில்.

"ஏன்?" என்றபடி அவள் அருகே நகர்ந்து புன்னகைத்தான்.

பின்னால் சற்று விலகி நின்று கொண்டாள் ரேவதி. அவனது பார்வை அவனுடைய சிரிப்பு ஒன்றுமே அவளுக்கு இப்போது பிடிக்கவில்லை. கண்ணியமான ஒரு காதலன் போன்ற அவனது வேடம் கலைந்து, இப்போது அவன் ஒரு வில்லனாகக் கண்களில் தென் பட்டான். அவனைப் பார்க்கவே நெஞ்சு பயத்தில் பட படத்தது.

"வீட்டை விட்டு ஓடிவர நான் என்ன வீதியில் அலையும் விவரம் கெட்ட பெண்ணா? நல்ல யோசனையைச் சொல்லி அனுப்பினீங்க..." காரமாக அதட்டினாள்.

திகைத்துப் போனான் முகுந்தன். இதுவரை தனது மந்திரக்கோலுக்கு ஆடிய மந்தியாக இருந்தவள், திடீரென்று விழித்துக் கொண்டு விட்டாளே! அதிசயமாக இருந்தது அவனுக்கு ஆங்காரமாகவும் இருந்தது. பற்களைக் கடித்துக் கொண்டு, அவளைக் கடுமையாகப் பார்த்தான். "அறிவு கெட்டவளே! ஒண்ணு தெரிஞ்சுக்கோ பெரிய இடத்துப் பெண்ணுன்னுஉன்னை நான் ரொம்ப தெருங்காமல் கண்ணியமா இதுவரை நடத்தினேன் உன் மேலே எனக்கு காதலுமில்லே.. கத்திரிக்காயுமில்லே..."

அதிர்ந்து போனாள் ரேவதி. எச்சிலை விழுங்கிக் கொண்டாள் தன் உண்மை உருவத்தை முன்னதாகக் காட்டி விட்டானே எத்தனை நல்லதாகி விட்டது? அவன் அழகான பெண்களைத் தன் வலையில் சிக்க வைத்து அவர்களைச் சீரழிக்கும் அயோக்கியன் என்பதில்சந்தேகமேயில்லை பாவி! அவளை எப்படி மோசம் செய்யப் பார்த்தான்...மனதிலே ஆயிரம் எண்ணி திகில் பட்டுப் போனாள். "நல்ல வேளை உண்மையைச் சொன்னீங்க.

ரொம்ப தன்றி. உங்களுக்கு பெரிய கும்பிடு...'' ஏளனமாகக் கூறிவிட்டுத் திரும்பினான் ரேவதி.

பாய்ந்து குறுக்கே வந்து நின்றான் முகுந்தன்.

இருட்டு பரவத் தொடங்கிய நேரம் மூலை முடுக்கில் நின்று பேசும் இளம் ஜோடிகளைப் பற்றி கவலைப்பட நேரமின்றி அலுவலகத்து ஊழியர்கள் வீடு நோக்கி விரையும் அந்திப் பொழுது. நெடுஞ்சாலையிலிருந்து உள்ளே ஓடிய சந்து அது. அவளுக்கு பயமாக இருந்தது. முரட்டுத்தனமாக அவன் நடந்து கொண்டால் உதவிக்குக் கூக்குரலிட்டு சங்கதி ஊரெல்லாம் அம்பலமாகி விட்டால் என்ன செய்வது என்ன அச்சம்.

''அப்படிப் பிரிஞ்சு போக நான் விடுவேனா?'' உறுமினான் அவன்.

கலவரத்தில் அவள் சோர்ந்து போனாள்.

''உன் வாழ்வு என் கையில் இருக்கு தெரியுமா? நீ எனக்கு எழுதின கடிதங்கள் அத்தனையும் நான் பத்திரமா வச்சிருக்கேன்.''

''தயவு செய்து அவைகளை என்னிடம் திருப்பிக் கொடுத்திடுங்க. உங்களுக்குப் புண்ணியம் உண்டு.'' தடுமாறினாள் அவள் அழுகை தொண்டையை அடைத்தது.

''பாவ புண்ணியம் பத்தி இப்போ எனக்குக் கவலையில்லை. உன் கடிதங்களை நான் வைத்துக் கொண்டு ஊருகாய் போடப் போறதில்லை. உன்னிடம் கொடுத்துடறேன். ஆனால், அதுக்குப் பிரதியா பணம் தேவை...''

''என்ன கேட்கிறீங்க, சொல்லுங்க...''

''அப்படி வா வழிக்கு. இரண்டு இலட்சம்...ஐம்பது இருபது ரூபாய் நோட்டுகளாக என் கையில் வைத்தால் உன் கைக்கு வரும் பணம் தர முடியாவிட்டால்,

இந்த கடிதங்கள் உன் கணவன் கைக்குப்போய் சேர்ந்து விடும். பிறகு என்ன நேரும் என்று நினைச்சுப் பார்...''

உடல் முழுவதும் அச்சத்தில் சிலிர்த்து ஆடுவதை உணர்ந்தாள் அவள். பேச முடியாது வாய் குழறியது.

''அத்தனைப் பணம் என்னிடம் கிடையாது'' முனங்கினாள்.

''உனக்கு உன் வீட்டில் போட்ட நகைகள் இருக்குமே ஒரு வைர அட்டிகை, நாலு வைர வளையல்கள், சில தங்க நகைகள் இவைகளை மூட்டையாகக் கட்டி, பணத்திற்குப் பதில் கொடுத்து விடு. நாளை மறுநாள் நீ இங்கே நகை அல்லது பணத்துடன் வந்து சேராவிட்டால், கடிதங்கள் உன் கணவனின் கைகளில் கட்டாயம் போய்ச் சேர்ந்துவிடும்... எனக்கு இனி நீ தேவையில்லை, பணம்தான் தேவை... ஏமாற்றப் பார்த்தால் நான் பொல்லாதவனாக இருப்பேன்...'' என்று உறுமி விட்டுத் தன் மோட்டார் சைக்கிளுடன் விரைந்து விட்டான்.

ஆட்டோ ஒன்றில் ஏறிக் கொண்ட ரேவதியின் உடலும் உள்ளமும் பதறின. அத்தனை பணத்திற்கு அவள் எங்கே போவாள்?

விலையுயர்ந்த நகைகள் அனைத்தும், வங்கி லாக்கரில் இருக்கின்றனவே? அவைகளை எப்படி எடுப்பது? காணாமல் போய்விட்டது என்றால், விட்டில் யார் நம்புவார்கள்? அவளுடைய உயிரை கவலை தனித்தனியாகப் பருகத் தொடங்கியது.

22

செந்தாமரைக்கு ஒரே மனக் குழப்பம். ''ரேவதி பெற்றோர்களிடம் ஒய்வாகத் தங்கி இருக்கட்டும். நான் போய் அடிக்கடி கவனித்துக் கொள்கிறேன்'' என்று

வெளி நாட்டுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்த மகனுக்கு தைரியம் சொல்லி அனுப்பி வைத்திருந்தாள்.

ஆனால், அவள் தில்லைநாதன் பங்களாவுக்கு போனபோது எல்லாம் ரேவதி வீட்டில் இருக்கவில்லை, சிதேகிதி விட்டுக்கு விருந்து சாப்பிட போயிருக்கிறாள். காஞ்சீபுரம் காமாட்சியைத் தரிசிக்கச் சென்றிருக்கிறாள் என்று பல தகவல்கள் கிடைத்தன. அவளால் நம்ப முடியவில்லை.

ரேவதி திருத்தணிகைக்குப் போயிருப்பதாகக் கலா சொன்ன அன்று, மாலை மருமகளைக் கடைத்தெருவில் ஒரு உயரமான பெண்ணுடன் பார்த்தாள்.

ரேவதி தன் மாமியாரைக் கவனிக்கவில்லை. ஆனால், செந்தாமரை தொலைவில் இருந்தபடியே கண்டு கொண்டாள்.

அவளுக்கு மிகவும் திகைப்பாக இருந்தது கலா அனாவசியமாக அவளிடம் ஏன் பொய் சொல்ல வேண்டும்?

அவள் போகும்போது எல்லாம் ரேவதி வீட்டில் இல்லாத காரணம் கணவன் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற ஆர்வம் இல்லாததின் காரணம்... அவளுக்கு அது பிடிக்காத திருமணமோ?

பலவாறு எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்த செந்தாமரை, அன்று மாலை ரேவதி ஆட்டோவில் இருந்து இறங்கி கடைத்தெருவிலிருந்த புத்தகக் கடையருகே தெரிந்த துணிக்கடையின் பக்கத்துச் சந்திற்குள் விரைவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

தன்னந்தனியாக பொழுது போய்க்கொண்டிருக்கும் வேளையில், இவள் எதற்காக வந்திருக்கிறாள்?

செந்தாமரை துணிவுடன் அந்தக் கடை அருகே சென்று, சந்தின் முகப்பிலே நின்றபடி எட்டிப் பார்த்தாள்.

மகனின் திருமணத்திற்கு முன்னர் அவளை வழி மறித்தும் பயமுறுத்திய அதே இளைஞன் சந்தில் முன் பக்கம் சிகரெட்டைப் புகைத்தவண்ணம் நின்று கொண்டிருந்தான்.

அவனை சந்திக்கத்தான் ரேவதி அங்கு வந்திருந்தாள்!

வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற செந்தாமரையின் நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது.

தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அப்படியே அயர்ந்து போய் நின்றவள் காதுகளில் அவர்கள் பேசியது துல்லியமாகக் கேட்டது.

ஒரே வினாடியில் அவள் நிலைமையைப் புரிந்து கொண்டாள். கல்யாணமானதில் இருந்து ரேவதியிடம் காணப்பட்ட கலவரத்திற்கும் அவள் வீட்டில் இல்லாமல் அடிக்கடி மறைத்து போனதிற்கும் காரணம், இந்தச் சிக்கல்தானா?

மாமியாரிடம் கடிதங்களைப்பற்றிப் பேசிப் பயமுறுத்திப் பார்த்தான் பலன் இல்லை. இப்போது மருமகளை அச்சுறுத்துகிறான்! சிவகுருவிடம் காட்டி அவமானப்படுத்தி அவர்களது வாழ்வை நாசமாக்க திட்டமிட்டு விட்டான், பாவி

கல்யாணத்திற்கு முன்னர் அறியாமையால் ரேவதி ஒரு சிறு பிசகு செய்திருப்பது உண்மை

அதை அவன் தனக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு பணம் பறிக்க அவளை மிரட்டுகிறான், என்ன இருந்தாலும் ரேவதி இப்போது அவளுடைய மருமகள். அவளுக்கு ஏற்படப் போகும் ஆபத்து அவமானம் எல்லாம் செந்தாமரையையும் தானே பாதிக்கும்!

இந்தச் சங்கதி அம்பலமானால் அவளுடைய அருமைமகன் இடிந்து போய்விடுவானே? அவனுடைய

மகிழ்ச்சியில் மண் விழ, தாயான அவள் அனுமதிக்கப் போவதில்லை.

இதை இடைபுகுந்து முகுந்தனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். பலவும் எண்ணியபடி அவர்கள் பார்வையில் படாதவாறு, ரேவதி சாலையைத் தாண்டி ஆட்டோவில் விரையும் வரை ஓர் இடத்தில் காத்திருந்தாள்.

வீடு வந்து சேர்ந்த செந்தாமரைக்கு... அவமானமும், ஆத்திரமும், துயரமும்... தாங்கவே முடியவில்லை. அழுகை நெஞ்சை அடைத்தது. அவர்கள் குடும்பத்திலா இப்படி ஒரு விபரீதமான சிக்கல்... என்று எண்ணி உறக்கம் இன்றி இரவைக் கழித்தாள்.

ரேவதியும் அன்று உறங்கவில்லை. முதலையாகப் பிடித்துக் கொண்டிருக்கும் அயோக்கியன் முகுந்தனிடம் இருந்து தப்பிக்க வேண்டுமானால், அவள் கேட்ட பொருளை தந்து விட வேண்டும் — என்று எண்ணிய போது அவளுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. தான் செய்த பிசகை அண்ணனிடமோ, அண்ணியிடமோ சொல்லி உதவி பெற முடியாத சங்கடமான நிலை. எப்படியாவது தானே இந்தச் சிக்கலில் இருந்து தப்ப வேண்டும். அதற்கு முகுந்தன் கேட்கும் பொருளை அவன் முகத்தில் வீசி எறிந்து விட்டு... பலவும் எண்ணி... கவலையில் துவண்டாள்.

ஒரு சில நாட்களுக்கு முன் நகரத்தில் பிரபலமானவர் வீட்டுக் கல்யாணத்திற்குப் போக அண்ணி கலா, எல்லாருடைய நகைகளையும், வங்கி லாக்கரில் இருந்து வாரிக் கொண்டு வந்திருந்தாள். பின்னர் அந்த நகைகளை வங்கி லாக்கரில் சேர்க்க கலாவுக்கு நேரம் கிடைக்கவில்லை. பீரோவிலேயே கிடந்தது. அது இப்போது மிகவும் நல்லதாகப் போயிற்று.

மறுநாள் மாலை அவசரமாகப் பீரோவைத் திறந்து, நகைகளை அள்ளி ஒரு பிளாஸ்டிக் பைக்குள் திணித்து, அதைப் பத்திரமாகத் தோள் பையில் பொதிந்து விட்டு, பொழுது போன நேரம் அவள் புறப்பட்டாள்.

கலா வெளியே சென்றிருந்தது அனுகூலமாக இருந்தது. நகைகளை காணவில்லை என்று கலா எழுப்பப் போகும் கலவரத்தை நடுக்கத்துடன் நினைத்துக் கொண்டு, ஒரு ஆட்டோவைப் பிடித்து, குறிப்பிட்ட இடத்தில் இறங்கினாள்.

முகுந்தன் தயாராகக் காத்துக் கொண்டிருந்தான். மோட்டார் சைக்கிளுக்குப் பதில் அவன் காரில் வந்திருந்தான்.

"நீ வருவேன்னு எனக்குத் தெரியும். நாம் காரில் ஏறிக் கொண்டு மறைவான ஒரு இடத்திற்குப் போய்... சாமான்களைப் பரிமாறிக் கொள்வோம்" என்றான்.

பயந்து போனாள், அவள். இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கு. காரை நிறுத்தாமல், அவளைப் பலவந்தமாகக் கடத்திக் கொண்டு போய்விட்டால்... ஊகூம் முடியாது... என்று எண்ணி, அவள் மெலிதாக முறுவலித்தாள்.

"தேவையில்லை... இங்கேயே கொடுக்கிறேன்... என் கடிதங்களைத் தந்து விடுங்கள்" என்றாள்.

"என்னோடு நீ காரில் வந்தால்தான் தர முடியும். எறு வண்டியில்" என்று மிரட்டினான் முகுந்தன்.

"கடிதங்களைத் தராவிட்டால் பரவாயில்லை. நான் உன்னோடு காரில் எங்கும் வர முடியாது" சீறினாள் ரேவதி.

"பெரிய பத்தினி! இப்போ கூசுகிறதோ!" என்று ரௌனமாகக் கூறிய முகுந்தன், அவள் முன் பாய்ந்து வழியை மறித்தான்.

''மரியாதையா வண்டியில் ஏறினால் பிழைத்தாய். கத்தி கூச்சலிட்டு கூட்டத்தைச் சேர்த்தால் அதையும் என்னால் சமாளிக்க முடியும். ''இவள் என் மனைவி! பைத்தியமாகி கூச்சலிடுகிறாள்'' என்று அவர்கள் முன்னால் உன்னைக் காரில் இழுத்துப் போட்டுக் கொண்டு போல் விடுவேன். மரியாதையைக் காப்பாற்றிக் கொள். உம்...ஏறு வண்டியில்!'' அதட்டினான்

''யாரையடா இழுத்துக்கொண்டு போவே?'' என்ற அதட்டும் குரலைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்.

செந்தாமரை, தன் மருமகளுக்கு முன்னால் பாதுகாப்பாக வந்து நின்று கொண்டாள்.

ஒரு கணம் திகைத்தான் முகுந்தன். ஆனாலும் வீம்பு குறையவில்லை.

''ஏ...கிழவி! நகரு...உன் மருமகளைப்பத்தி முன்னமே உன்கிட்டே சொன்னேன். இப்போ நேரில் அவள் சங்கதியைக் கண்டு கொண்டாயா...இந்தக் கேடு கெட்டவளுக்கு நீ வக்காலத்தா வாங்குகிறே'' அதட்டினான்.

''ஊரான் மனைவியை அதட்ட உனக்கு இத்தனை தெம்பு இருந்தால், என் சொந்த மருமகளைக்காப்பாத்த எனக்குத் துணிவு இருக்காதுன்னு நினைக்காதே. அயோக்கிய நாயே...'' என்று உறுமிய செந்தாமரை ஓங்கிய குரலில், ''திருடன்...திருடன் என்று கூச்சலிட்டாள்.

அவ்வளவுதான். திமுதிமுவென்று ஒரு கூட்டம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''எவனோ ஒரு சைக்கிள்காரன், என் மருமகள் கழுத்துச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான், நல்ல வேளை திருடவில்லை. ஓடிவிட்டான்'' என்று அவள் விவரிக்குமுன் காரில் ஏறிக்கொண்டு மாயமானான் முகுந்தன்.

கூட்டம் கலைந்ததும், தன் மருமகளை அணைத்துக் கொண்டாள் செந்தாமரை. வெட்கமும் துக்கமும் தாளாது ரேவதி தன் மாமியார் மார்பில் முகத்தை வைத்துக் கொண்டு, அழுகையில் குலுங்கினாள்.

23

செந்தாமரை மருமகளைச் சமாதானப்படுத்தினாள் ''யாரும் பார்க்கும் முன் நாம் இங்கிருந்து கிளம்பி விட வேண்டும். நீ அழக்கூடாது'' என்று அடிக்குரலில் சொல்லி, அவளது கண்ணீரைத் துடைத்து விட்டு அவள் கையைப் பிடித்துக் கொண்டு அந்தச் சந்தில் இருந்து வெளிப்பட்டாள்.

சாலை ஓரமாக நின்ற ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு, விரைவாக வீட்டுக்கு வந்தாள். புறப்படும் முன்பே அவள் வீட்டு வெளி வராந்தாவில் விளக்கைப் போட்டுவிட்டுப் போயிருந்தாள். கேட்டைத் திறந்து கொண்டு மாமியார் முன்னால் நடக்கப் பின்னால் தொடர்ந்த ரேவதி முதல் முதலாகத் தன் கணவன் வீட்டிற்கு இந்த நிலையில் வர நேர்ந்ததை எண்ணி வெட்கத்துடன் தயங்கி நின்றாள்.

''வலது காலை எடுத்து வைத்து வர வேண்டிய உன்னை முறைப்படி நாள் பார்த்து, சம்பிரதாயச் சிறப்புகளுடன் உன் வீட்டில் இருந்து அழைத்து வர வேண்டும். இன்று பெரிய ஆபத்தில் இருந்து தப்பினாயே...அதனால் இதுவே ஒரு நல்ல நாள் என்று நினைத்து உன்னைக்கூட்டி வந்திருக்கேன். வாம்மா...கவலைப் படாதே. இது உன் வீடு'' என்று ஆறுதலாகக் கூறியபடி தன் இடுப்பில் இருந்த சாவியால் கதவில் தொங்கிய பூட்டைத் திறந்தாள்.

உள்ளே நுழையும் முன்பு பூஜை அறையில் இருந்து வெளிப்பட்ட ஊதுவத்தியின் மணம் 'கம்' என்று முகத்தில் மோதியது. வாயிற் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு, செந்தாமரை வீட்டின் மற்ற விளக்குகளை எரியச் செய்தாள். சன்னல்களைத் திறந்து விட்டாள்.

பளிச்சென்ற வெளிச்சத்தில் பார்த்தாள் ரேவதி வீடு படுசுத்தமாக, நேர்த்தியாக, ரசனையுடன் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

அவர்களது அத்தனை பெரிய பங்களாவில் கிடைக்காத ஒரு அரவணைப்பு, உணர்வு அந்தச் சிறிய வீட்டிலே அவளுக்கு ஏற்பட்டதை உணர்ந்தாள்.

"முகம், கை கால் கழுவிக் கொண்டு, பூஜை அறைக்குள்ளே போய் விளக்கை ஏத்திவிட்டு விழுந்து கும்பிட்டு விட்டு வாம்மா" என்று சொல்லியபடி பின்பக்கம் இருந்த குளியல் அறையைக் காட்டினாள். சுத்தமான ஒரு துவாலையும் சோப்பு பெட்டியையும் எடுத்துக் கொடுத்தாள்.

"உன்னைப்பிடிச்ச சனி விட்டது என்று நினைத்துக் கொண்டு, சாமியைக் கும்பிட்டுட்டு வந்து இப்படி உட்கார்!" உபசரித்தாள் மாமியார்.

"ரேவதியால் நம்ப முடியவில்லை. நேரில் பார்த்தது மும் ஆத்திரம் அடைவதற்கு பதில், ஆதரவு காட்டும் மாமியார் எத்தனை நல்லவள் அவர்களைப் புரிந்து கொள்ளாமல், வாழ்க்கைக்குத் தகுந்த நல்லதை அறிந்து கொள்ளாமல்..." என்று எண்ணி நெஞ்சுருகிப் போனாள் ரேவதி. கண்களில் நீர் புரண்டது. குழாய்த் தண்ணீருடன் கலந்த தன் கண்ணீரால் முகத்தைக் கழுவிக் கொண்ட போது, நெஞ்சிலே நிறைந்திருந்த அழுக்கை கழுவிக் கொண்டதொரு பரிசுத்த உணர்வு ஏற்பட்டது.

அவள் குளியலறையில் இருந்து வெளிப்படும் முன்பு செந்தாமரை அடுப்பை மூட்டி குளிர் சாதனப்

பெட்டியில் இருந்த பாலை எடுத்துக்காய்ச்சி, சர்க்கரை போட்டு, ஆற்றித் தம்ளரில் நிறைத்து, கூடையில் இருந்து இரண்டு வாழைப்பழங்களை எடுத்து தட்டில் வைத்துக் கொண்டு வந்தாள்.

"உட்கார்...உன் வீட்டுக்கு நீ முதல் முதலாக வந்திருக்கே...உனனைப பாலும் பழமும் கொடுத்து வரவேற்கிறேல..." என்றபடி அவைகளை மேசை மீது வைத்தாள்.

அதற்குமேல் ரேவதியால் கட்டுப்படுத்த முடியவில்லை, "அத்தை! என்னை மன்னிச்சுட்டேன்னு உங்கள் வாயாலே சொல்லுங்கள். உங்களை மதிக்காமல் நான் ரொம்ப அலட்சியப்படுத்தியிருக்கேன். என் கணவருக்குத் துரோகமாகப் பல விகாரமான எண்ணங்களை மனசிலே விருத்தி செய்து கொண்டிருந்தேன். அவ்வளவும் பெரிய தவறு என்று இப்போ புரியுது. உயர்ந்த உள்ளம் உடைய உங்களுக்கு மருமகளா இருந்து வாழ ஆசையா இருக்கு. அத்தை! எனக்கு அந்த வாய்ப்பைத் தருவீங்களா!" படபடவென்று பேசியவள் நா தடுமாற, மெய் சோர, துயரம் தெஞ்சை இறுக்க செந்தாமரையின் கால்களில் விழுந்து கும்பிட்டாள்.

ரேவதியின் கண்ணீர் பாதங்கள் மீது சூடாக விழுவதை உணர்ந்த செந்தாமரை திடுக்கிட்டு, "எழுந்திரும்மா...அதையெல்லாம் நாம் மறந்து விடுவோம் நீ என் மருமகளா வாழணும் என்றுதானே வீட்டுக்குக் கூட்டி வந்தேன். அழாதே. இது ஒரு நல்லநாள். போய் பூஜையறை விளக்கை ஏத்திட்டு வந்து, பாலைச் சாப்பிடு!" என்றாள் பரிவுடன்.

"நான் செய்த தவறு முழுவதும் தெரிஞ்சா என்னை நீங்கள் ஏத்துக்க மாட்டீங்க!' தழுதழுத்தாள் ரேவதி.

"எனக்கு எல்லாம் தெரியும் அந்தப் பாவி முகுந்தன் என்னையே உன் கல்யாணத்துக்கு முன்பு பயமுறுத்திப் பார்த்தான், நான் மசியவில்லை உனக்கு

உறவில் நான் மாமியார் உள்ளத்து உணர்வில் ஒரு தாய். மறக்காதே. என் மகள் தவறாக ஏதாவது செய்து விட்டால் அவளைத் திருத்தி வழிக்குக் கொண்டு வர வேண்டியது என் கடமை இல்லையா?'' சிரித்தாள்.

'அத்தை! அத்தை!'' பேச முடியாது, செந்தாமரையின் மார்பில் சாய்ந்து, இறுக்கத் தழுவிக் கொண்டாள்.

இப்படியும் ஒரு நல்ல பெண்மணி இருக்காங்களே! அவர்கள் அவளுக்கு மாமியாராக வாய்த்தது பெரிய தொரு அதிருஷ்டம் அல்லவா? மனம் பூரித்து பெருமையில் விம்மியது.

இரவு சாப்பாடு தயாரிக்கும் முன்னால், 'எனக்கு ஒரு முக்கியமான காரியமிருக்கு!'' என்றபடி செந்தாமரை முன்னறைக்கு விரைந்தாள்.

தொலைபேசியில் கலாவை அழைத்தாள்.

இருட்டி வெகு நேரமாகியும் ரேவதியைக் காணவில்லை என்ற கலவரத்தில் கலா வாயிலுக்கும், உள்ளுக்குமாக அலைந்து கொண்டிருந்தவள் பயந்துபோய் விட்டாள். இந்த வேளையில் செந்தாமரை எதற்காகக் கூப்பிடுகிறாள்?

''என்ன பெரியம்மா...சுகந்தானே! சிவகுரு எப்போ திரும்பி வராப்பல?'' என்று மிகவும் குழைவாக மெல்லிய குரலில் விசாரித்தாள்.

''எல்லாம் நல்ல சங்கதிதான். கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பியபோது, மயக்கமா வந்தது...''

''அடப்பாவமே? இப்போ உடம்பு எப்படி இருக்கு? நான் வந்து பார்க்கிறேன். டாக்டருக்குப் போன் செய்தீங்களா?''

'நீ இப்படி தடபுடல் படுத்துவேன்னுதான் ரேவதி சொன்னாள்.''

''ரேவதியா? அவள் அங்கே எங்கே?'' தடுமாறினாள் கலா

''முழுக்க சங்கதியைக் கேளு...எதேச்சையா கடைத் தெருவுக்கு வந்த ரேவதி என்னைப் பார்த்துவிட்டு ஓடி வந்து பிடித்துக் கொண்டாள் பத்திரமா வீட்டிலே கொண்டு சேர்த்து விட்டாள். ரேவதி இங்கேதான் இருக்கா, பேசறியா?'' போனை மருமகளிடம் தந்தாள்.

கலா தன் காதுகளை நம்பவில்லை

'அண்ணி? நான் அத்தையோட இங்கேயே இருக்கப் போறேன், அவங்க பாவம் தனியா இருக்காங்க. அத்தான் வர இன்னும் இரண்டு நாள் பிடிக்கும். நாளைக்கு நான் வீட்டுக்கு வந்து கொஞ்சம் துணிமணிகளை எடுத்துக்கொண்டு போவேன். அப்பா, அம்மா, அண்ணன் எல்லார்கிட்டேயும் சொல்லிடுங்கோ... மறுப்பு இல்லியே?''

''மறுப்பா? அது உன் வீடு! உன் மாமியாரோட நீ தங்குகிறதைப் பத்தி மறுப்பு சொல்ல முடியுமா? அவங்கப் பிரியப்படிதானே நீ நடக்கணும்?'' மகிழ்ச்சி பிடிபடாது பதிலளித்தாள்.

உண்மையா இது? ரேவதி மனம் திருந்திப் போய் விட்டாளா? என்ன வித்தை? அவளது நெஞ்சு மகிழ்ச்சியால் விம்மியது

''இன்னிக்கு நல்ல நாளாம். அதனாலே, அத்தை என்னை இங்கே கூடவே இருக்கச் சொன்னாங்க, அவங்களுக்கு உடம்பு இப்ப தேவலை... நான் பாத்துக்கிறேன். நீங்கள் கவலையை விடுங்கள்!''

ரேவதி இத்தனை பணிவாகப் பேசுகிறாள். ஆச்சரியம்! என்று எண்ணியபடி ''சரிம்மா அப்படியே செய்...'' என்று போனை வைத்தாள்.

வேகமாக பூஜை அறைக்குள் சென்று தெய்வப்படம் முன் விழுந்து கும்பிட்டாள் கலா. அவளது நன்றி கண்ணீர்ப் பூக்களாகத் தரைமீது கொட்டியது.

24

மறுநாள் காலை ரேவதி, அண்ணி கலாவைத் தொலைபேசியில் அழைத்தாள்.

"நான் ஆட்டோவிலேயே புறப்பட்டு வந்துடுவேன். ஆனால், அத்தைதான் நான் தனியா அப்படி இனி போகத் தேவையில்லைனு சொல்றாங்க. நம்ம வீட்டுக் காரை கொஞ்சம் அனுப்பி வைக்க முடியுமா? நான் அங்கே வந்து என் சேலை துணிமணிகளை எடுத்துக் கொண்டு திரும்பணும்."

"உனக்கு இல்லாத காரா, ரேவதி! இதோ அனுப்பி வைக்கிறேன்" கலா பரபரப்பாக மகிழ்ச்சியோடு பதில் அளித்தாள்.

கைப்பையில் களமாக இருந்த நகைகளை, கலா அண்ணி லாக்கரில் தேடும் முன் கொண்டுபோய் வைத்து விடவேண்டும் என்று ரேவதிக்குக் கவலை.

காரில் இருந்து இறங்கி உள்ளே புகுந்த ரேவதிக்கு எத்தனை பெரிய வரவேற்பு. பல ஆண்டுகள் பிறந்த வீட்டிற்கு வரமுடியாது வெளிநாட்டிலேயே கணவனுடன் தங்கிவிட்ட மகளைத் திரும்பக் காண்பதுபோல் அம்மா மங்களம் ஓடிவந்து இறுக அணைத்துக் கொண்டாள்.

"ரேவதி, வாம்மா, நீ இல்லாமல் வீடே வெறிச்சோடி போச்சு" என்று அப்பா புன்னகைத்தார்.

"வாம்மா ரேவதி" அண்ணன் வாசலுக்கே விரைந்து வந்து அழைத்தான்.

சில நாட்களாகக் கடுமை அப்பிக் கொண்டிருந்த அண்ணன் முகத்திலே இப்போது மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"வா, ரேவதி!" அன்போடு உள்ளே அழைத்துச் சென்றாள் அண்ணி கலா.

"நீ வரப்போறேன்னு போன் செய்ததுமே நான் அவசரமா மாவைப் பிசைஞ்சு வச்சேன். குளிச்சுட்டு வா. எல்லாரும் உட்கார்ந்து காப்பி பலகாரம் சாப்பிடுவோம்' உபசாரமாகச் சொன்னாள் அண்ணி. முந்தினதினம் வரை தூக்கி எறிந்து பேசிய அண்ணி, அழுது கொண்டிருந்த அம்மா, கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கம் போல உறுமிக் கொண்டு இருந்த அப்பா, கண்களாய் கனலாக எரித்த அண்ணன், எல்லோரும் அவளை எப்படிக் கொண்டாடுகிறார்கள்.

"அவரவர் இருக்கும் இடத்தில் இருந்தால்தானே மதிப்பு—எத்தனை சுகம்?" என்னியபடி மாடியறைக்கு விரைந்தாள். பீரோவைத்திறந்து தன் பையில் இருந்த நகைகளை, லாக்கரில் இருந்த இடத்தில் வைத்துப் பூட்டினாள். அப்பாடி! மனம் எப்படி லேசாகப்போனது.

அழுக்காகக் குவிந்து கிடந்த சிந்தனைகளைக் கழுவி மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்வது போல குளியறை குழாயடியில் அமர்ந்துகொண்டு நன்றாகக் குழாயைத் திருகிவிட்டுத் தலை முழுகினாள். வாயில் சேலை ஒன்றை உடுத்திக்கொண்டு ஈரத்தலையை துவாலையால் நன்றாகத் துவட்டி முடிந்து கொண்டு நெற்றியில் பளிச்சென்ற குங்குமப் பொட்டை வைத்துக் கண்ணாடியில் பார்த்த போது...

மிலுக்குத்தனமான அட்டகாசம் செய்த அந்த ரேவதி மறைந்து போய் பாங்கானதொரு குடும்பப் பெண் கண்ணாடிக்குள்ளே தெரிந்தாள்! சந்தேகமும்

குழப்பமும்! கலந்து கொண்டிருந்த அந்த முகத்தில் இப்போது எத்தனை களை? இப்படி இருக்க வேண்டியவள் புத்தி கெட்டுப் போய் எப்படியெல்லாம் மாறிவிட்டிருந்தாள்? எண்ணியவளுக்குத் திடீர் என்று நினைப்பு வந்தது. பெண்மை அழித்து அலங்கோலமாகிவிடும் நிலையில் அவளை உசுப்பிக்கொண்டு வந்து ஒரு படுகுழியில் விழ்ந்தப் பார்த்த லாவண்யாவும் ஒரு சிநேகிதியா? அவளைச் சும்மா விடக் கூடாது கோபத்துடன் மாடி முன் அறையில் இருந்த தொலைபேசியை எடுத்து எண்களை வேகமாகச் சுழற்றினாள்.

இப்போது அவள் யாருக்கும் அஞ்ச வேண்டியது இல்லை. ரகசியமாகப் பேச வேண்டியது இனி ஏதும் இல்லை என்ற துணிவில் லாவண்யாவை அழைத்தாள்.

இந்நேரம் பம்பாயில் இருக்க வேண்டியவள் இங்கே எப்படி வந்தாள்? லாவண்யா கலவரத்துடன் கேட்டாள்.

"எங்கேயிருந்து பேசறே?"

ரேவதிக்குக் கோபம் கட்டுக்கடங்காது பொங்கி விட்டது "எங்கேயிருப்பேன்னு எதிர்பார்த்தே? உன் எண்ணம் நிறைவேறலைன்னு சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன். கடைசி நிமிடத்திலே எனக்கு புத்தி வந்தது. நான் பிழைத்துக் கொண்டேன். இனி நீயோ அந்த முகுந்தனோ என்னைப் பயமுறுத்த முடியாது. என் வீட்டவர்களுக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு."

"நீ என்ன சொல்றே? புரியலையே?"

"புரியலையா, எனக்கு? தோழிபோல நடித்து என் வாழ்க்கையையே மண்ணாக்க சதி பண்ணினியே நீ உருப்படவேமாட்டே. படிச்சிருந்தும் உன்புத்தி இப்படியா மட்டமாப் போகணும்? தோழின்னா, நல்லதை சொல்லணும். நல்லதை செய்யணும், ஆபத்துக்கு உதவணும். நீ? ஒரு பயங்கரமான பெண். உன்னைப்

போல சிலர் இருப்பதால்தான், படித்த பெண்கள் எல்லாருக்குமே ஒட்டு மொத்தமா கெட்ட பெயர். உன்னைப்போல நச்சுப் பாம்புகளோட பழகவே கூடாதுன்னு எனக்கு நல்லாபுத்தி வந்திருக்கு—படிப்பு நம் அறிவை விருத்தி செய்யணுமே ஒழிய, நம்மை அழிக்கக் கூடாது என்கிறவரை தெரிந்து கொண்டேன் நம்மோட பழகின மற்ற கல்லூரிப் பெண்களை நான் சந்திக்கும் போது உன் யோக்கியதையை விவரமா சொல்லி அவங்களை உன் பிடியில் இருந்து காப்பாத்தப் போறேன். இந்தத் தில்லு முல்லுங்களை விட்டுட்டு இனியாவது ஒழுங்கா இருந்துக்க தெரிஞ்சுக்கோ" படபடவென்று மூச்சுவிடாது கத்தி விட்டு போனை வைத்தாள்.

பின்னர் தன் சேலை துணிகளை எடுத்துப் பெட்டி ஒன்றில் அடுக்கிக் கொண்டாள். குடும்பத்தாருடன் உட்கார்ந்து சிரித்துப் பேசியபடி காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு, புக்ககத்திற்குக் கிளம்பினாள்.

"பட்டுச்சேலை நகைகளை எல்லாத்தையும் விட்டுட்டு போறியே!" அம்மா ஆச்சரியமாகக் கேட்டாள்.

"இப்போ தேவைப்பட்டதை மட்டும் எடுத்துப் போகிறேன். உரியகாலத்தில் நீங்கள் அவைகளை கொண்டு வந்து கொடுங்கள்" என்று கூறிவிட்டு காரில் ஏறிக்கொண்டாள்.

இரண்டே நாளில் ரேவதி, தன் மாமியாரிடம் பலவும் கற்றுக்கொண்டு விட்டாள்.

செந்தாமரையைச் சமையல் அறைக்குள் புக விடாது தடுத்துத் தானே சுத்தம் செய்து, ஒழுங்கு படுத்தினாள். தன்னுடைய வீடு என்ற உரிமை உள்ளத்திலே அழுத்தமாக உருவாகியவுடன். அதை பத்திரமாக பாதுகாக்க வேண்டும் என்ற ஆவலும் கூடவேதோன்றி உற்சாகமும் தெம்பும் கூடிவிட்டது.

அன்று மாலை, செந்தாமரை கடைத்தெருவுக்குப் புறப்பட்டாள். ''கதவைத் தாளிட்டுக்கொண்டு பத்திர மாக இரு. யாருக்கும் சட்டுனு திறந்திடாதே. கதவில் பதிச்சிருக்கும் கண்ணாடி வழியா பார்த்துவிட்டு பிறகு திற'' என்று பல புத்திமதிகளைச் சொல்லிவிட்டு அவள் புறப்பட்டிருந்தாள்.

இரவுச் சமையலை முடித்துவிட்டு, அறையைச் சுத்தப்படுத்தி முடித்ததும் முகத்தைக் கழுவி முடியை வாரிப் பின்னிக் கொண்டாள். வேலைக்காரி பறித்துக் கொண்டு வந்து வைத்திருந்த நித்திய மல்லி மொக்கு களை நகில் தொடுத்து சிறிதளவு, பூஜையறையி லிருந்த சாமி படத்திற்குப் போட்டுவிட்டு மீதியைக் கூந்தலில் சூட்டிக் கொண்டாள்.

முன்னறையில் இருந்த தொலைபேசி, கணகணத் தது. ஒருகணம் பயத்தில் உடல் சில்லிட்டும் போனாள். யார் அவளை அப்போது கூப்பிடுவது? மெள்ளச் சென்று தயக்கத்துடன் போனைக் கையில் எடுத்தாள்.

''அலோ! அம்மா, நான்தான் சிவகுரு பேசுகிறேன், பம்பாய்க்கு இன்று காலையில் வந்துவிட்டேன். ஓட்டல் அறையில் இருந்து பேசறேன்...? ரேவதி எப்படி இருக்கா... அடிக்கடி போய் கவனிச்சுக்கிறீங்களா? பாவம் அவள், நான் கிளம்பும்போது உடம்பு சுக மில்லாமல் இருந்தாள்.'' மூச்சுவிடாது உற்சாகமாகப் பேசினான் சிவகுரு—அவள் கணவன்.

கரகரப்பாக மதுமுனையில் ஒலித்த அந்த குரல் காதில் விழுந்தபோது...பட்டுத்துணி அவள் உடல் முழு வதையும் தழுவிக்கொள்ளுவது போன்ற மென்மையான உணர்வு மேனியைப் புல்லரிக்கச் செய்ய... உடல் பதற, நெஞ்சு விம்மி, கண்ணில் நீர் புரள, தொண்டை இறுக, பேச முடியாது தடுமாறியபடி, ''அத்தான்!

நான்தான் ரேவதி! இங்கே வந்து அத்தையோட இருக் கேன்... நீங்கள் சுகமா?'' கேட்டு முடிப்பதற்குள் இன்ப மும் துன்பமும் தாளமுடியாது அவள் தொலை பேசியில் விம்மினாள்.

25

முதல் நாளே சிவகுருவின் அலுவலகத்து செய லாளர் செந்தாமரையைத் தொலைபேசியில் கூப்பிட்டு தெரிவித்துவிட்டார். ''விமான நிலையத்துக்கு சிவ குருவை வரவேற்க நாங்கள் சிலர் அலுவலக சார்பில் போகிறோம். நீங்களும் திருமதி சிவகுருவும் வர விரும்பி னால் கார் அனுப்பி வைக்கிறோம். இதை டைரக்டர் சொல்லச் சொன்னார்'' என்று கூறினார்.

செந்தாமரை, தன் மருமகள் முகத்தைப் பார்த் தாள் கூசிக் குழைந்துபோன ரேவதி, தலையை அசைத் தாள். கணவன் வெளிநாட்டுக்குப் புறப்பட்டபோது சுமுகமாகப் பேசி வழியனுப்பாதவள் இப்போது எந்த முகத்துடன், விமான நிலையத்தில் போய் நிற்பாள்?

குற்ற உணர்வு மனதை ரொம்பவே உறுத்தியது. ''அத்தை! நான் வீட்டிலேயே இருந்து ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன், நீங்கள் வேண்டுமானால் போய்விட்டு வாருங்கள்'' என்றாள் மெல்லிய குரலில்.

செந்தாமரையும் வீட்டில் தங்கியிருந்து மகனை வரவேற்க விரும்பினாள் 'நீங்கள்தான் ஆபீசில் இருந்து பலபேர் போகப் போறீங்களே... நாங்கள் வேற எதுக்கு... நள்ளி!'' என்று போனை வைத்தாள்.

இரண்டு மாதங்களாகப் பிரிந்திருந்த மகனை சில மணி நேரங்களிலேயே சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் செந்தாமரை மகிழ்ச்சியாகவும் உற்சாக மாகவும் இருந்தாள்.

ஆனால் ரேவதிக்கு அச்சமாகத்தான் இருந்தது. அவளிடத்தில் போனில் மகிழ்ச்சியாகப் பேசினான் சிவகுரு. ஆனால், நேரில் எப்படி நடந்து கொள்வானோ? என்ற கலவரம் அவளை உள்ளுக்குள் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

'உன் வீட்டவர்களுக்குச் செய்தி சொல்லிவிடு. அவர்கள் எல்லோரும் வரட்டும். உறவுக்காரங்க, நண்பர்கள் அலுவலகத்து ஊழியர்கள் எல்லோருக்கும் நம்ப வீட்டிலே ஒரு விருந்து வச்சுடலாம்.'' என்றாள் மகிழ்ச்சியோடு

தலையை ஆட்டினாள், ரேவதி, ''அண்ணியை உதவிக்குக் கூப்பிடட்டுமா அத்தை!' என்று ஆதரவாகவும் கேட்டாள்.

''வேண்டாம் விருந்து சமைக்கும் வேலையை நான் எடுத்துக்கிறேன், விட்டைச் சுத்தமாக்கி அலங்கரிக்கிறது உன் பொறுப்பு'' என்றாள்.

அதன்படி அன்று காலை விடியலுக்கு முன்பே ரேவதி குளித்து ஆயத்தமாகிவிட்டாள்.

செந்தாமரை வீட்டை எப்போதும் சுத்தமாக பளிச் சென்று வைத்திருந்தாள். அதனால் அவளுக்கு அதிக வேலை இருக்கவில்லை.

'இந்தா, சிவகுருவோட அறையின் சாவி. கதவைத் திறந்து, படுக்கை விரிப்புகளைத் தூசி தட்டி, மாத்திப் போட்டு சுத்தப்படுத்து' மாமியார் உத்திரவிட்டாள்.

''ஏன் இத்தனை நாளும் பூட்டி வச்சிருந்தீங்க அத்தை?'' கேட்டாள் ரேவதி வியப்புடன்.

''நீ வரப்போறே...வசதியா தங்கியிருக்கணும் இந்த பெரிய அறையை சுத்தப்படுத்தி புது கட்டில்கள் மெத்தைகள் எல்லாம் வாங்கிப் போட்டு சிங்காரிச்சு வைத்தான் சிவகுரு! நீ . கல்யாணத்தன்றே நோயில்

படுத்துவிட்டதால், மனம் கசந்து போய் அறையைப் பூட்டி வச்சுட்டான். ரேவதி இந்த வீட்டுக்கு வந்த பிறகு இதை திறக்கலாம்னு சொல்லிவிட்டு ஊருக்குப் போய் விட்டான். திறக்க வேண்டிய வேளை இப்போ வந்து விட்டது!'' சிரித்தாள் செந்தாமரை.

ரேவதி முகம் சிவந்து போனாள் குற்றஉணர்வுடன் அறையைத் திறந்து உள்ளே சென்றவள் கண்கள் வியப்பில் விரிந்தன. பெரிய இடத்துப் பெண்ணான தன் மனைவிக்கு அங்கே எந்த விதத்திலும் வசதி குறையக் கூடாது என்று நினைத்து, சிவகுரு அந்த அறையை மிகவும் நேர்த்தியாக அலங்கரித்து வைத்திருந்தான்.

ஆள் உயரக் கண்ணாடி பதித்த அலங்கார மேசை, மிருதுவான பஞ்சணை, அலங்காரமான படுக்கை விரிப்புகள், சுவற்று சாயத்துக்கு ஏற்ற சன்னல் திரைச் சீலை... என்று மிகவும் ரசனையுடன் அறையை அலங்கரித்திருந்தான். எல்லாம் அவளுக்காக. அவளது வசதிக்காக! என்று நினைக்கும் போதே நெஞ்சுருகிப் போனாள் ரேவதி

அவனுக்குத்தான் அவள் மீது எத்தனை அன்பு. அதை புரிந்து கொள்ள முடியாத அவள் செய்த அநியாயங்கள்தான் எத்தனை

கண்ணீரை விழுங்கிக்கொண்டு அறையை துரிதமாக சுத்தப்படுத்தினாள். மேசைமீது சாய்ந்த வாக்கில் வைத்திருந்த அவர்களது கல்யாண புகைப்படத்தின் மீது பார்வை பட்டபோது, அவள் திடுக்கிட்டுப் போனாள்.

கபடமற்ற அன்பான கணவன் அருகே, வஞ்சகமான புன்னகையுடன் அவள் சே! இத்தனை நல்லவருக்கு துரோகம் செய்யத் துணிந்தேனே, இதற்கு மன்னிப்பு உண்டா? சிவகுரு உண்மையில் அவளை மன்னித்து வாழ்க்கை கொடுப்பானா? என்று அவள் எண்ணிய போது உடல்சில்லிட்டு அவளது உணர்வுகள் உறைந்து போயின.

''முடிச்சுட்டியாம்மா, ரேவதி! அவங்க எல்லாம் வருகிற நேரமாயிடுச்சே.'' மாமியார் குரல் கொடுக்க, அவள் திகைப்புடன் விழித்துக் கொண்டாள்.

''இந்த நல்ல மனிதனுக்கு, இனி நான் நல்லதொரு மனைவியாக இருப்பேன். கடவுளே... எனக்கு ஒரு வாய்ப்பு அருளும்!'' என்று தன் குலதெய்த்தை மனமார பிரார்த்தித்துக்கொண்டு வெளியே வந்தாள்.

அவசரமாக தான் தங்கியிருந்த அறைக்குஓடி, முகம் கழுவி பொட்டு வைத்து, முடியை வாரி கொண்டை யிட்டுக்கொண்டு, சிவகுரு தனக்கு நிச்சயத்தின்போது பரிசாகக் கொடுத்த முத்து நகைகளை அணிந்து கொண்டு, ஆரஞ்சு வண்ண காஞ்சிபுரச் சேலையை அணிந்து கொண்டு, தலையில் மல்லிகைச் சரத்தை சூட்டிக்கொண்டாள். கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை மகிழ்ச்சியுடன்பார்த்து முடிப்பதற்குள் வாசலில் ஒரே பரபரப்பு.

நில்லைநாதன் தன்குடும்பத்துடன் ஒரு காரில்வந்து இறங்கினார். இன்னொரு காரில் செந்தாமரையின் உறவுக்காரி துளசி தன்குடும்பத்தாருடன்வந்து இறங்கினாள். அடுத்தடுத்து சில கார்களில் நண்பர்களும், உறவினர்களும் வந்து இறங்கி வீட்டை நிறைத்துக் கொண்டார்கள்.

பூஜையறையில் சுந்தையாகக் கமழ்ந்த வாசுவத்தி மணமும், சமையலறையில் இருந்து எழுந்த நெய் வாசனையை விரட்டிக் கொண்டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாக குழந்தைகள் சிரித்தபடி ஓட... பெண்கள் சேலை சரசரக்க நகர... பேச்சும், சிரிப்புமாக கல்யாண வீட்டின் களை கட்டியிருந்தது.

''இப்படி வரம்மா?'' துளசி அதட்டலாக அழைத்த போது ரேவதி திகைப்புடன் வாயிலுக்கு வந்தாள்.

சிவகுரு, தன் அலுவலகத்து நண்பர்களுடன் அப் பொழுதுதான் விமான நிலையத்தில் இருந்து வீட்டுக்கு வந்திருந்தான்.

''இரண்டு பேரும் நில்லுங்கள்.'' அதிகாரம் செய்த துளசி, ஆரத்தி சுழற்றி, மஞ்சள் நீரைக் தொட்டு அவர் களுக்கு பொட்டு வைத்து திருஷ்டி கழித்தாள்.

பிரமிப்பு நீங்கி, அவள் உள்ளே வர, வலது காலை எடுத்து வைத்த போது சிவகுரு தன் கையைப் பற்றி நடந்துக் கொண்டு போவதை உணர்ந்து வெட்கிப் போனாள்.

அமர்க்களமாக விருந்து நடந்து முடிந்ததும் வந்த வர்கள்விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர். சாமான் களை எடுத்து ஒழுங்குபடுத்தி வீட்டை ஒரு வழியாக்கு வதற்குள் பொழுது அமிழ்ந்து போனது.

இரவு உணவுக்குப் பின், தெந்தாமரை மருமகளை அழைத்தாள். 'சிவகுரு படுக்கப் போகு முன், தினமும் பால் அருந்துவது வழக்கம். மேசைமேலே பால் தயாரா எடுத்து வச்சிருக்கேன் கொண்டு போய் கொடு...'' உத்தரவிட்டாள்.

தயக்கமும், பயமுமாக அறைக்குள் நுழைந்தாள் ரேவதி ''அத்தை கொடுக்கச் சொன்னாங்க!'' என்றபடி பால் தம்ளரை அருகில் இருந்த முக்காலிமீது வைத் தாள்!

''ரேவதி! உனக்கு நான் வெளிநாட்டில் இருந்து என்னவெல்லாம்வாங்கிட்டு வந்திருக்கேன் தெரியுமா?.. சொல்லியபடி அவள் கையைப் பற்றி தன் அருகில் உட் கார வைத்துக் கொண்டான்.

கட்டுக் கொள்ளாது அவள் கண்களில் நீர்புரண்டது.

''ரேவதி! எதுக்கு இப்போ கண் கலங்குற!'' கைக் குட்டையால் பரிவுடன் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான் சிவகுரு.

''அத்தான் நீங்கள் பரிசுகளை எடுத்து வைக்கிற துக்கு முன்னே, நான் செய்த தவறுகளை உங்க முன்னே வைக்கிறேன், யோசிச்சு தீர்ப்பு சொல்லிவிடுங்கள். இல்லா விட்டா... ''பேச முடியாது அழுகையில் குலுங்கினாள்.

"எல்லாம் எனக்குத் தெரியும். உன் அத்தைக்கும் தெரியும் உங்கள குடும்பத்தார் அத்தனை பேருக்கும் தெரியும், எப்படின்னு கேட்கறியா? நான் ஜெர்மனியில் இருக்கும்போதே உன் அண்ணன் விவரமா எல்லாத்தையும் எழுதியிருந்தார். கவலைப்படாதிங்க, நான் வந்ததும் எல்லாத்தையும் ஒழுங்கு செய்யலாம் என்று நான் பதில் போட்டிருந்தேன். விருந்தாளிகள் எல்லாம் போன பிறகு அம்மா என்னை தனியே கூப்பிட்டு பேசினாங்க. நாம எல்லாரும் நடந்ததை மறந்துடணும் என்கிறதுதான் என் தீர்ப்பு...சரியா?" அவள் முகவாயைப் பற்றி முகத்தை நிமிர்த்தினான்.

"ரேவதி நம்ப கல்யாணத்துக்கு பிறகு தேன்நிலவுக்கு நாம் போகவே இல்லை. உனக்கு பிடிச்ச இடம் சொல்லு நாளைக்கே புறப்படுவோம்." அன்புடன் புன்முறுவலித்தான்.

"இந்த வீட்டிலே உங்களோடும், அத்தையோடும் நிம்மதியா வாழக் கொடுத்து வச்சிருக்கேன். அந்த பாக்கியமே எனக்குப் போதும். எங்கேயும் போக வேண்டாம் என் சொர்க்கம் இங்கேயே இருக்கு அத்தான்!" கெஞ்சியபடி அவன் தோளில் சாய்ந்தாள்.

"கேட்கிறதா?" கன்னத்தை லேசாக கிள்ளினான் சிவகுரு.

தொலைவில் இருந்து காற்றில் மிதந்துவந்த நாதஸ்வர இசை அவளது காதில் நன்றாக கேட்டது.

"இது நமக்காக ஒலிக்கிறது, மறுபடியும் நாம் கல்யாணம் செய்து கொண்டது போல பிரமிப்பாக ஆனந்தமாக இருக்கு" என்றபடி அவளை இறுகத் தழுவிக் கொண்டான்.

நாதசுவர இசை... சுகமாகத் தொடர்ந்தது.

முடிந்தது

P.136
CORNEMARA PUBLIC LIBRARY
27 OCT 1999